
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU




முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 26 ஞாயிற்றுக்கிழமை (09.06.2013) பக்கங்கள் 20 ஓசை - 252


அதிஷ்டத்தின் திறவுகோல் (03)


திகதி விரைவில் (06)


சில கேள்விகள் (10)


ஹிட்லர் பாதையில் மோடி படம் (17)


எலியை விடவும் (18)

## சீனாவின் உதவித்திட்டத்தில் இராணுவ தளபாடங்களும் அடக்கம்

### பாதுகாப்புத்துறை இணையத்தளம் தெரிவிப்பு

இலங்கைக்கு சீனா வழங்க முன்வந்துள்ள 2.2 பில்லியன் டொலர் கடனில், இராணுவத் தளபாடங்களை வழங்கும் இணக்கப்பாடும் உள்ளடங்கியுள்ளதாக பாதுகாப்புத்துறை இணையத்தளமான strategy page தெரிவித்துள்ளது.

சீனா தொடர்பாக இந்த இணையம் வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில்,

இலங்கைக்கு 2.2 பில்லியன் டொலர் கடனை வழங்க சீனா இணங்கியுள்ளது.

இது பொருளாதாரத் திட்டங்கள், இலங்கைப் படையினருக்கான பயிற்சி மற்றும் மேலதிக

(19) ஆம் பக்கம் பார்க்க

## மோசமான சித்திரவதையில் ஈடுபடுகின்றனர் பொலிஸார்

### ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

இலங்கை பொலிஸ், விசாரணைகளின்போது, மிளகாய் பொடியை கண்கள் மற்றும் அந்தரங்க உறுப்புகளில் கொட்டுதல் போன்ற மோசமான சித்திரவதை முறைகளைக் கையாள்வதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

அண்மையில் நடந்துள்ள 7 சித்திரவதை சம்பவங்களை சுட்டிக்காட்டி அந்த நிறுவனம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அந்த நிறுவனத்தின்

(19) ஆம் பக்கம் பார்க்க

# தெரிவுக்குழுவில் இணைய ஒருபோதும் மறுக்கவில்லை

## சுருதியை மாற்றுகின்றாரா சம்பந்தன்?



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க முடியாதென தாம் ஒரு போதும் குறிப்பிடவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசன்னம் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் 2010 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட யோசனைத் திட்டத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதுவரையில் பதிலளிக்கவில்லை எனவும் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எம்முடன் இணைந்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் சுதந்திரமான தேர்தல்; வலியுறுத்துகிறது இந்தியக்குழு

இலங்கையில் போருக்குப் பிந்திய சூழலில், அபிவிருத்தியுடன் அதிகாரங்களும் அளிக்கப்பட வேண்டும் என்றும், அதிகாரப்பகிர்வுடன், வடக்கில் சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்த வேண்டும் என்றும் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான இந்தியக் குழு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளது.

ஐந்து நாள் பயணமாக இலங்கை சென்ற இந்தக்குழு, பல்வேறு தரப்பினருடனும் நடத்திய சந்திப்புகள் குறித்து, இந்திய ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள ரவி சங்கர் பிரசாத்,

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் தமக்குள்ள கடப்பாட்டை இலங்கை அரசாங்கம் மீளவும் உறுதிப்படுத்தியுள்ளது.

தேர்தல், வரும் செப்ரெம்பரில், நடத்தப்படும் என்பதை இலங்கை அரசின் மூத்த தலை

(19) ஆம் பக்கம் பார்க்க

## தென்பகுதியில் காற்றுடன் மழை; 5 மீனவர்கள் பலி; 31 பேர் மாயம்



(கொழும்பு)

கொழும்பு உட்பட மேற்கு மற்றும் தெற்கு கரையோர மாவட்டங்களில் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் திடீரென்று வீசிய பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக பெருமளவிலான மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடலுக்குச் சென்ற பல படகுகள் காணாமல்போயுள்ளன. காணாமற்போயுள்ள 31 மீனவர்கள் தேடப்பட்டு வருகிறார்கள். 5 மீனவர்கள் இது வரை சடலங்களாக மீட்கப்பட்டுள்ளார்கள்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த பஸ் பனை மரத்துடன் மோதி விபத்து

### சாரதி உட்பட எழுவர் காயம்



ஏ-9 வீதியில் மிருசுவில் பகுதியில் நேற்று அதிகாலை தனியார் பயணிகள் பேருந்து ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகிலிருந்த பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த ஏழு பயணிகள் வரை படுகாயமடைந்தனர். பேருந்தும் பலத்த சேதங்களுக்குள்ளாகியது.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நடைபெற்ற இவ் விபத்தில் கொழும்பில் இருந்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## கே.பி.க்கு எதிரான குற்றச்சாட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### அரசாங்கம் தெரிவிப்பு

பயங்கரவாதத்தை தோற்கடித்து நாடு சட்டத்தின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. நீதியையும் சமாதானத்தையும் பலப்படுத்த அரசாங்கம் தன்னை அர்ப்பணித்துள்ளதாக ஆளும்கட்சி பிரதம கொரடா அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சட்டத்திற்கு முன்னிலையில் சகலரும் சமனானவர்களே இந்நிலையில் கே.பி.க்கு எதிராக குற்றச்சாட்டு இருந்தால். அதனை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# குப்பைகளால் நிரம்பிவழியும் கொடிகாமம் பொதுச்சந்தை

## கவனிப்பார் எவருமில்லையா?

(கொடிகாமம்)

கொடிகாமம் பொதுச்சந்தை வளாகத்தில் சுகாதாரமற்ற முறையில் கழிவு மரக்கறிகள், பழவகைகள் ஆங்காங்கே வீசியபடியும், பழ வகைகளின் கழிவுகள் இருப்பதையும் காண முடிகிறது.

ஏற்கனவே பிரதேசசபையால் கழிவுப் பொருட்களை இட ஆங்காங்கே கூடைகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் சில கூடைகள் பழுதடைந்துள்ளன. சிலவற்றில் கழிவுப்பொருட்கள் நிரம்பி வழிகின்றன.

கடந்த புதன்கிழமை சந்தைக்கு வந்த பொலிஸார் கழிவுப்பொருட்களை உரிய முறையில் சுகாதார முறைப்படி கையாளும்படி வியாபாரிகளுக்கு அறிவுறுத்தி சில வியாபாரிகளின் தகவல்களைப் பதிவு செய்து சென்றனர்.

சந்தையின் சுகாதார சீர்கேடு பற்றி வியாபாரிகளிடம் கருத்துக் கேட்டபோது சந்தை துப்புரவுப் பணியாளர்கள் தினம் கடமைக்கு வருவதில்லை எனவும், இதனால் வைக்கப்பட்டுள்ள சொற்பக்கூடைகள் உடனடியாக நிரம்பிவிடுவதால் கழிவுப்பொருட்களை தாம் எங்கே இடுவது எனவும், சந்தை துப்புரவுப் பணியாளர்கள் தினமும் தமது கடமையைச் செய்வார்களாயின் இப்படிப்பட்ட நிலை ஏற்பட வாய்ப்பு வரவேண்டியநிலை உருவாகுமா? என கேள்வி எழுப்புகின்றனர்.

இனி வரும் நாட்களிலாவது தமது கடமைகளை சரிவரச் செய்ய தினம் வரவேண்டும் என பல வியாபாரிகள் துப்புரவுப் பணியாளர்கள் மேல் குற்றம் சுமத்துகின்றனர். (150)

## இன்று நயினை நாகபூசணி அம்பாள் கொடியேற்றமாகும்

**"பாம்பணி காரணி பகவதி ஆரணி கொடியேறு".**

ஆதி பராசக்தி அம்பிகை சுந்தரி நயினை நாயகி
அமிர்தா அபிராமி சோதி மகேஸ்வரி கொடியேறு
ஞான சுரோஜினி காரணி நந்தினி சிவகாமி
தீன தயாபரி மோன மனோன்மணி கொடியேறு
சாம்பவி சூலினி தற்பரை சிற்பரை சம்பூரணி
பாம்பணி காரணி பகவதி ஆரணி கொடியேறு
சந்திர சேகரி தர்மினி யோகினி நாகம்மா சாந்தினி
சர்வலோக நாயகி கொடியேறு
கருணாகரி ஜெக கற்பகவல்லி காசி விசாலாட்சி
அடியார் துணையே அருணோதயமே கொடியேறு.

தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்

## சமாதானப் பேரவை முல்லையில் தெரிவு

(முல்லைத்தீவு)

சமாதானத்திற்கான முல்லைத்தீவு மாவட்ட சமயப் பேரவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நா.வேதநாயகம் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. இப்பேரவையின் புதிய நிர்வாகத்தெரிவு இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மாவின் ஒழுங்கமைப்பில், தலைவராக வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தலைவர் குகதாசன் இப்பேரவையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். உப தலைவர்களாக சபாரத்தனம், ஏ.பி.அன்ரனிப்பிள்ளை, எம்.ஏச்.எம்.சில்ராஹிம் அஷ்ரப், கஸ்கட கல்யினா திஸ்ஸ செயலாளராக அருட்தந்தை செபஸ்ரியன் உப செயலாளராக ஜஸ்றீன், பொருளாளராக சிவனேசன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

12 ஆவது அமைப்பாக முல்லைத்தீவு அமைப்பு தெரிவு செய்யப்பட்டதோடு இதற்கு பிரதம விருந்தினர்களாக முல்லை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.அ.மோகன்ராஜ், நன்கு மதகுருமார்களும், மதங்களின் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். (40)

## நிர்வாகசபைத் தெரிவு

(திருநெல்வேலி)

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தின் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பின்வருவோர் நிர்வாகசபைக்குத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக க.புஸ்பராஜா (வித்தியாலய அதிபர்), செயலாளராக கை.சங்கரலிங்கம், பொருளாளராக இ.சந்திரகுமார் உப தலைவராக ந.கஜேந்திரகுமார், உப செயலாளராக சு. சுபேஸ் ஆகியேர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் இ. அகிலன், நா. ரகுமான், கு.கோகுலன், திருமதி ச.பாலினி, 'திருமதி ஜெயராணி, செல்வி க.சங்கீதா ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (137)

## வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஏழாலை மேற்கு சைவ மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் அதிபர் செல்வி ந.பிரதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.கல்வியற்கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் சிறப்பு விருந்தினராக சுன்னாகம் மக்கள் வங்கி பொது முகாமையாளர் திருமதி மு.சியாமளா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (95)

## அனலைதீவில் ஒதுங்கியது கடற்படைச்சிப்பாயின் சடலம்

நெடுந்தீவு கடற்பகுதியில் கடந்த வியாழக்கிழமை படகிலிருந்து கடலில் தவறி வீழ்ந்து காணமற்போயிருந்த கடற்படைச்சிப்பாயின் சடலம் நேற்று அனலைதீவுப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கிழக்கு குடாப் பகுதிக்கும் துறைமுக வாயிலுக்கும் இடையில் படகில் இருந்து குறித்த கடற்படைச் சிப்பாய் தவறிவீழ்ந்த நிலையில் அவரை மீட்க கடற்படையினர் முயற்சி மேற்கொண்டபோதும் அது பலனளிக்காத நிலையில் நேற்று குறித்த கடற்படைச் சிப்பாயின் சடலம் அனலைதீவுப் பகுதியில் கரையொதுங்கியதினை அடுத்து அதனை கடற்படையினர் மீட்டு நேற்று பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததாகவும், யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததாகவும், யாழ்.போதன வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (பா)

## ஞாபகார்த்த சிலைக்கு அடிக்கல் நாட்டு விழா

(வேலணை)

வேலணை கிழக்கு அம்மன் கோயிலடியில் உள்ள கிழக்கு மகா வித்தியாலயத்தை ஆரம்பித்து வைப்பதற்கும், அதற்குரிய காணியினை நன்கொடையாக கொடுத்துதவி வழங்கியவருக்கு ஞாபகார்த்த சிலை அமைக்கப்படவுள்ளது.

அமரர் க.காங்கேசு (வைத்தியர்) வினது ஞாபகார்த்த சிலை மகா வித்தியாலய வளாகத்தில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டுவிழா நாளை மகா வித்தியாலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது. (05)


# நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 159 | திகதி 2013.06.07

வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்

ஆங்கில எழுத்து

18 27 29 61 Z

பரிசுத் தொகை ரூபா. 11,707,100/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 07 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 199 | 199,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 320 | 320,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8742 | 524,520/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4516 | 180,640/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 114751 | 2,295,020/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16842 | 336,840/- |
| நான்கு இலக்கங்களை மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 11,707,100/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,206,020/-/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 11,931,240/-

2013.06.11ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

(C/2827)

அபிவிருத்தி லொத்தர் சபை

தொ.பே. 011 2333546/47

web : www.dlb.lk


## கட்டைக்காடு சிறார்களுக்கு ஆரோக்கிய பானங்கள் கையளிப்பு



கட்டைக்காடுப் பகுதி சிறார்களுக்கு ஆரோக்கிய பானங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. கட்டைக்காட்டு பகுதியில் உள்ள சிறுவர்களின் ஆரோக்கியத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த பானங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

55 ஆவது படைப்பிரிவும் டெல்மேஜ் நிறுவனமும் இணைந்தே இவற்றை வழங்கியுள்ளனர்.

சிறுவர்களுக்கு பானம் மற்றும் 3000 பைக்கட் மாம்சோய்ஸ் பிஸ்கட் வகைகளும கையளிக்கப்பட்டுள்ளன. மருதங்கேணி ஆதார வைத்தியசாலையில் வைத்து பிரதான மருத்துவ அதிகாரி டாக்டர் இ.கனகரட்ணம் மற்றும் ரி. உமாபதிசிவம் ஆகியோர் இணைந்து கையளித்துள்ளனர்.

இந்நிகழ்வில், 551 ஆவது படைப் பிரிவின் பிரிகேடியர் எஸ்.எம்.எஸ்.பி.வி. சமரகோன், மற்றும் இராணுவ அதிகாரிகள் மற்றும் மருதங்கேணி வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (25)

# நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்குபவர்கள் ஆசிரியர்கள்

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்

(திருநெல்வேலி)

ஆசிரியர்கள் ஆற்றல் மிக்கவர்கள். நாட்டின் எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்குபவர்கள் அவர்களே. அவர்களின் திறன்களை வெளிக் கொணர்வதற்கு விழாக்கள் உறுதுணை புரிகின்றன என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் இ.சந்திரராசா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கலாசாலை அதிபர் வே.க.கணபதிப்பிள்ளை தலைமையில் கலாசாலை மண்டபத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய கல்விப் பணிப்பாளர் பாரம்பரிய கலாசாரங்களாகக் காணப்படும் கும்மி, கோலாட்டம், சிலம்பம், காவடி போன்றவற்றை இங்குள்ள ஆசிரிய மாணவர்கள் மிகவும் திறமையாகக் கையாண்டார்கள். சமூகத்தில் ஆசிரியர்களின் பொறுப்பு மிகவும் அத்தியாவசியம் என்பதோடு கனதியானதுமாகும்.

இக் கலாசாலை நாட்டுக்குப் பெரும் கல்விமான்களை உருவாக்கித் தந்துள்ளது. நீண்டகால வரலாற்றைக் கொண்ட இவ்வாசிரிய கலாசாலை பல அரும்பெரும் சாதனைகளைப் படைத்துள்ளது.

தொடர்ந்தும் பல வெற்றிகளைக் கண்டு கல்வி உலகில் நிறைந்த சேவையைத் தொடர வேண்டும் எனக் கூறினார்.

ஆரம்பத்தில் கலாசாலையில் உள்ள ஆலயத்திலிருந்து விருந்தினர்கள் பாரம்பரிய கலை, கலாசாரங்களோடு மேடை வரை அழைத்து வரப்பட்டனர். மங்கல விளக்கேற்றல், இறை வணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்புரை என்பவற்றைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொண்டார். இனிய விருந்தினர்களாக வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் ம.பிரதீபன், மதகுரு அகஸ்ரின், விரிவுரையாளர் ச.லலீசன், உப அதிபர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன், பேராசிரியர் வேல்நம்பி, விரிவுரையாளர் குணசீலன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

போட்டியில் பங்குபற்றி வெற்றி கொண்டவர்களுக்கு திருமதி இ.சத்தியசீலன் பரிசில்கள், பதக்கங்களை வழங்கிக் கௌரவித்தார். பட்டிமன்றம், நடனம், நாடகம், இசைக் கச்சேரி போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. (137)


### பல வருடங்களின் பின்னர் யாழ் 5 ஆம் குறுக்கு வீதி திருத்தம்


(குருநகர்)

யாழ். ஐந்தாம் குறுக்கு வீதி பல வருட இடைவெளியின் பின்பாக செப்பனிடப்பட்டு காப்பெற்போடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

யுத்த அனர்த்த காலங்களிலும், அதன் பின்பாகவும் யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடக்கின்ற காலங்கள் வரை மேற்படி ஐந்தாம் குறுக்கு வீதி செப்பனிடப்படாமல் இருந்து வந்ததும் சுட்டிக்காட்டத்தக்கன.

திருத்த வேலைகள் ஆரம்பிக்கின்ற வரையில் பாவனைக்கு உதவாமல் இருந்து வந்ததுதம் குறிப்பிடத்தக்கது. (68)





இலங்கை செஞ்சிலுவைச் சங்க மேற்பார்வையில் நடைபெறும் இந்திய வீட்டுத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளின் போது தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட 2 வீடுகளின் திறப்பு விழா கடந்த 30 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் மாவிட்டபுரம் நகுலேஸ்வரன் கிராம அலுவலர் பிரிவுகளில் இடம்பெற்றது. இதில் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த இந்திய துணைத்தூதுவர் சிறிகாந், இந்திய வீட்டுத்திட்டப பணிப்பாளர் நிமால் சில்வா, மூத்த பிரதிநிதி எஸ்.முகேஸ்சிங் மற்றும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு திறந்து வைத்தனர். (பா)

### மின்சாரத்தில் பிரகாசிக்கும் கிராமங்கள்



வலிகாம பிரதேசத்திற்குட்பட்ட ஊரத்தி கிராமத்தில் 250 மீற்றர் வாழும் மக்களின் வேண்டுகோழுக்கிணங்க அமைச்சர் டக்டஸ் தேவானந்தா அவர்களின் ஏற்பாட்டில் மின்சாரம் வழங்கப்பட்டது. வலிகாமம் வலய கிராமத்தின் வலிமேற்கு பிரதேச சபை எதிர்கட்சி தலைவருமான திரு.சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) அவர்களின் விடா முயற்சியால் கடந்த 4 ஆம் திகதி மின்சாரம் வழங்கப்பட்டது. (150)



வட்டுக்கோட்டை பிரதேசத்திற்கு உப்பட்ட J/161 கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட கணவக்கையில் உள்ள 160 மீற்றர் வரை தெருவில் வாழும் மக்களின் வேண்டுகோழுக்கிணங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஏற்பாட்டில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வலய ஈ.பி.டி.பி அமைப்பாளர் வலிமேற்கு பிரதேச சபை எதிர்கட்சி தலைவர்) சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) அவர்களின் விடா முயற்சியால் மின்சாரம் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வடக்கின் வசந்தம் ஊடாக 5 மின்சாரம் வழங்கப்படுமா என்று ஏங்கிக்கொண்டிருந்த 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வலிகாமம் வலய அமைப்பாளரால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. (150)

## தலைக்கவசத்திற்குள் தொலைபேசி வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

(வரணி)

மோட்டார் சைக்கிள் சாரதிகள் தம்தலைக் கவசத்திற்குள் கைத்தொலைபேசியை வைத்து உரையாடிக்கொண்டு செல்வதால் பல்வேறு இடங்களிலும் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட உரையாடலால் மோட்டார் சைக்கிள் செலுத்துவோர் தொலைபேசி உரையாடலின் கவனத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்துவதை மறந்து போவதும் உண்டு.

இதனால் வீதி விபத்துக்கள் பல இடம்பெற்றுள்ளன. உரியவர்கள் இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் எனப் பாதிக்கப்படும் பயணிகள் தெரிவிக்கின்றனர். (150)

### பரப்புரைக் கூட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் பரப்புரைக் குழுவினரால் இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட்டம் சிறுபபிட்டி ஜனசக்தி மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பரப்புரைக் கூட்டத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் தலைவர், உபதலைவர் த.ரவிச்சந்திரன் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவைச் சேர்ந்த மயில்வாகனம் உட்படப் பலர் பரப்பரை நிகழ்த்தினர். (08)

### வீதி மின்விளக்குகள் பொருத்தப்படுவது எப்போது?

(குருநகர்)

வீதி அகலிப்பால் மாற்றம் செய்யப்பட்ட மின்கம்பங்களால் அகற்றப்பட்ட மேற்குரிமின் விளக்குப் பொருத்தப்படவில்லை எனப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.காங்கேசன்துறை வீதி, அரசடிச் சந்தியில் பொருத்தப்பட்டிருந்த மேற்குரி மின் விளக்கு கடந்த பெப்ரவரி மாதத்தில் அகற்றப்பட்டது.

புதிய மின்கம்பங்கள் போடப்படுவதற்காக அகற்றப்பட்ட மேற்படி மின்விளக்குகள் அவ்வேலைகள் முடிந்து மூன்று மாதங்களைத் தாண்டிய நிலையிலும் இன்னமும் பொருத்தப்படவில்லை.

இதனால் இரவு நேரங்களில் அரசடிச் சந்தி இருளில் மூழ்கி இருப்பதால் அச்சூழலில் மக்கள் மத்தியில் நடமாட அச்சம் ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சந்தியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் திருடர்கள் கைவரிசை காட்டலாமென வர்த்தகர்கள் பீதியில் தத்தமது கடை மின்விளக்குகளை ஒளிர விட்டுச்செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (68)

## திறந்த போட்டிப் பரீட்சை


(யாழ்ப்பாணம்)

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் மாவட்ட மதிப்பீட்டாளர் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை யூன், யூலை மாதத்தில் கொழும்பில் நடைபெறும்.

இதற்கான விண்ணப்பங்கள் 08.07.2013 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிக்கும் முறை, பரீட்சைக் கட்டணம், பரீட்சைக்குத் தோற்றல், சேவை நிபந்தனைகள், சம்பளம், ஆட்சேர்ப்பு முறை போன்ற விபரங்களை 07.06.2013 அரச வர்த்தமானியைப் பார்வையிடலாம்.

விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும், நன்னடத்தையுடைய சிறந்த கண் பார்வையுள்ள உடல் ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் அவசியம்.

18 இற்கும், 35 இற்கும் இடைப்பட்ட வயதுடைய, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சொத்து பராமரிப்பு, மதிப்பீட்டுக் கலை தொடர்பான விஞ்ஞான பட்டதாரியாக இருத்தல் வேண்டும். (105)



யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினால் வெளியிப்படும் ஐக்கிய தீபம் சஞ்சிகையின் வெளியீட்டு விழா கட்டைவேலி நெல் லியடி பல.நோ.கூ.சங்க மண்டபத்தில் வெளியீட்டு வைக்கும் நிகழ்வில் முதல் பிரதியை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் இராஜராமிடமிருந்து பொதுச் சபை உறுப்பினர் லயன் ஜெயசங்கர் பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

ஆசையும், ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்கா. உழைப்பே செல்வத்தைத் தரும். - கன்பூசியஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## குழந்தைகளை நினையுங்கள்!

“புண்பட்ட மனதை புகைவிட்டு ஆற்றுகிறார்”, “அவர் ஒரு சங்கிலிப் புகைப்பாளர்”, “அவருக்கு வாயிலிருந்து பொய் வராத நேரங்களில் எல்லாம் புகை வரும்” என்பதாகப் பல்வேறு கதைகளை விளையாட்டாய் நம்மத்தியில் புகைப்பிடிப்பவர்களைப் பார்த்துச் சொல்லிக்கொள்கிறோம். புகைப்பிடிப்பது ஒன்றும் அவ்வளவு விளையாட்டாய் எடுத்துக்கொள்ளக்கூடிய விஷயமல்ல.

புகைப்பிடித்தல் என்பது பிடிக்கின்றவர்களை மட்டுமே பாதிக்கின்ற விஷயமும் அல்ல. அது காற்றாலும் பரவி நம்மைத் தாக்குகிற நஞ்சு. தூங்கிக்கொண்டிருக்கிற குழந்தைகள் எந்த சப்தமும் இல்லாமல் அப்படியே செத்துப்போகின்றன. இறந்த குழந்தைகளை பரிசோதித்துப் பார்த்தபோது அவை இறந்ததற்கான காரணத்தை யாராலுமே கண்டறிய முடியவில்லை. அக்குழந்தைகள் நல்ல ஆரோக்கியமாகவே இருந்தன.

2006 ஆம் ஆண்டு அமெரிக்க மருத்துவ கழகம் ஒரு ஆய்வறிக்கையை இதுகுறித்து வெளியிட்டது. இப்படிப்பட்ட திடீர் மரணங்களை SIDS என்று அந்த அறிக்கை தெரிவித்தது. அதாவது Sudden Infant Death Syndrome. இந்த சிட்ஸால் ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் இறந்துபோகிறார்கள் என்று கண்டது.

நம்முடைய புகைப்பிடிக்கும் பழக்கம் -Passive Smoking-ன் பின்விளைவுகளில் ஒன்றுதான் இந்த SIDS. இதனால் குழந்தைகளையும் பலிகொடுத்துக் கொண்டிருக்கிறோம். நாம் புகைபிடிப்பதால் நம்முடைய குழந்தைகளுக்கு நிறைய பிரச்சினைகள் வருகின்றன. அதில் மிக முக்கியமானது அஸ்மா மற்றும் நுரையீரல் தொடர்பான சுவாசக்கோளாறுகள், நுரையீரலில் தொற்று நோய்.

ஒவ்வொரு ஆண்டும் பத்து லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் யாரோ புகைபிடிப்பதால் சுவாசக்கோளாறுகளுக்கு உள்ளாகின்றனர். தங்களுடைய வாழ்நாள் முழுக்க நிம்மதியாக மூச்சு கூட விடமுடியாமல் தவிக்கின்றனர். ஒவ்வாமை நோயாலும், மூளை வளர்ச்சியின்மை, கற்றல் குறைபாடு, கேட்கும் திறனில் குறைபாடு என இன்னும் எண்ணற்ற பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர்.

இதற்கு ஆதாரம் இருக்கிறதா? நான் ஒருவன் புகைபிடிப்பதாலே இப்படியெல்லாம் நடந்துவிடுமா? நான் ஒருவன் புகைபிடிப்பதை விட்டுவிட்டால் எல்லாமே மாறிவிடுமா? என்கிற கேள்விகள் புகைப்பழக்கத்திற்கு அடிமையான எல்லாருக்குமே எழலாம்! (இதுவும் கூட நாம் கேட்கிற நம்முடைய மூளை உருவாக்கும் கேள்வி அல்லவாம்... நம்முடைய Addiction கேட்கிற கேள்வி என்கிறார்கள் விஞ்ஞானிகள்!)

மாற்றம் ஒவ்வொரு தனிமனிதனிடமிருந்தும் தொடங்க வேண்டும். இலட்சம் பேர் புகைபிடிப்பதால் ஒரே ஒரு குழந்தை பாதிக்கப்பட்டாலும், ஒரே ஒரு குழந்தைக்கு நுரையீரல் பழுதடைந்தாலும் கூட பாதிப்புதானே! அந்தக் குழந்தை நமது குழந்தையாகவும் இருக்கலாம். அது சிட்ஸ் பாதிப்பினால் துர் மரணம் அடைய நேரிட்டால் அதற்கு யார் பொறுப்பு?

கர்ப்பிணிப் பெண்கள் இந்த Passive Smoking ஆல் எவ்வகையில் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் சமீபத்திய ஆய்வு சொல்கிறது. கருவில் இருக்கிற குழ்ந்தை எடை குறைவான, உடல் குறைபாட்டோடு, சுவாசக் கோளாறுகளோடு பிறக்க நேரிடும் என்கிறது அந்த ஆய்வு. பிறக்காத குழந்தையின் உடலிலும் நஞ்சைக் கலக்கவல்லது இந்த புகைப்பழக்கம். நீங்கள் புகைபிடிப்பவராக இருந்தால் மாற்றம் உங்களிடமிருந்து தொடங்கட்டும். உங்களுடைய உடல்நிலையைப் பற்றி உங்களுக்குக் கவலையில்லாமல் இருக்கலாம். ஆனால் நம் குழந்தைகளைப் பற்றி நாம் கவலைப்பட்டேயாக வேண்டும். அடுத்த முறை புகைக்கும் போது தயவுசெய்து உங்கள் குழந்தைகளை ஒருமுறை நினைவில் கொண்டாலே போதுமானது.

- ஆசிரியர்

# இலங்கைக்கு கடன் வழங்குவதில் சீனா முதலிடத்தில் உள்ளது

## – திறைசேரி புள்ளி விபரம் தகவல்

சீனாவானது 2012இல் இலங்கைக்கு 1056.05 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளதுடன், இலங்கைக்கு அதிக கடன் வழங்கும் நாடாகவும் சீனா விளங்குவதாகவும், இந்தக் கடனை விட சீனாவானது இலங்கைக்கு 0.16 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாகவும் வழங்கியுள்ளதாக திறைசேரியால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று இலங்கையின் மிகப்பெரிய உதவி வழங்கும் நாடாக இந்தியா காணப்படுவதுடன், இந்தியாவானது இலங்கைக்கு மானியமாக 257.28 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. கடன் வழங்கும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. 443.06 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு, இந்தியா கடனாக வழங்கியுள்ளது.

2012இல் யப்பான், 508.74 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகவும், 15.23 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாகவும் வழங்கியுள்ளது யப்பானானது இலங்கைக்கு அதிக கடன் வழங்கும் நாடுகளில் இரண்டாம் இடத்தில் உள்ளது. இலங்கைக்கு சலுகைக் கடன் வழங்கியோர் பட்டியலில் உலக வங்கி நான்காவது இடத்தில் உள்ளது. இலங்கைக்கு 10.49 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளது.

கடன் வழங்கிய நாடுகளில் நெதர்லாந்து ஐந்தாவது இடத்தில் உள்ளது. இந்த நாடு 102.50 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளதுடன், எந்தவொரு மானியத்தையும் வழங்கவில்லை.

இதற்கு அடுத்ததாக கடன் வழங்கியோர் பட்டியலில் 99.68 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கிய ஆசிய அபிவிருத்தி வங்கியும், ஏழாவது இடத்தில் 60 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்கிய சவுதிஅரேபியாவும் உள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்றை முன்வைப்பதற்கு தலைமை தாங்கிய அமெரிக்காவானது இலங்கை அரசாங்கத்திற்கு 5.10 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாக வழங்கியுள்ளது.

இதேபோன்று பிரித்தானியா 44.14 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் ஆகியன முறையே 34.42 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், 28.29 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் கடனாக வழங்கியுள்ளதுடன், ஜேர்மனி மானியமாக 5.27 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்கியுள்ளது.

மேற்கூறப்பட்ட நாடுகள் இலங்கைக்கு வழங்கிய மானியம் மற்றும் கடன் தொகையானது 2011இல், 2010 உடன் ஒப்பிடும்போது சற்றுக் குறைவாக இருந்த போதிலும், இந்தத் தொகையானது மீண்டும் 2012 இல் அதிகரித்துள்ளது.

2012இல் அனைத்துலக நாடுகள் மற்றும் அபிவிருத்தி அமைப்புக்கள், கடன் வழங்கும் அமைப்புக்கள் போன்றன இலங்கைக்கு ஒட்டு மொத்தமாக 3152 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளன. இவற்றுள் கடனாக 2789 மில்லியன் அமெரிக்க டொலர்களும் மானியமாக 363 மில்லியன் அமெரிக்க டொலர்களும் வழங்கப்பட்டுள்ளன என திறைசேரியால் கடந்த திங்களன்று வெளியிடப்பட்ட ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாகாண சபைகளுக்கு எதிராக 37 அமைப்புகள் இணைவு

சிங்கள பௌத்த சக்திகள் தலைமையிலான 37 சிங்கள தேசிய அமைப்புகள் மாகாண சபைகளுக்கு எதிராக இணைந்துள்ளன:-

சிங்கள பௌத்த சக்திகள் தலைமையிலான 37சிங்கள தேசிய அமைப்புகள் இணைந்து மாகாண சபைகளுக்கு எதிரான தேசிய ஒன்றியம் என்ற பெயரில் புதிய அமைப்பை உருவாக்கியுள்ளன. ஜாதிக ஹெல உறுமயவின் தலையீட்டில் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாகாண சபைகளை இல்லாமல் செய்யும் போராட்டத்தை வலுப்படுத்தி, சமூகத்தில் அரசியல் அலை ஒன்றை ஏற்படுத்தி நாடாளுமன்றத்திற்கு அழுத்தம் கொடுப்பதே இந்த புதிய அமைப்பின் நோக்கம் என அமைப்பின் ஏற்பாட்டாளரான ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இலங்கையில் பிரதான நகரங்களில் மாகாண சபைகளுக்கு எதிரான கூட்டங்களை நடத்தவும் அந்த அமைப்பு தீர்மானித்துள்ளது.

# சிறந்த பேருந்து சேவையை வழங்குமாறு கோரிக்கை

(வேலணை)

தீவுப்பகுதியில் சிறந்த பேருந்து சேவையினை நடாத்துமாறு வேலணை வர்த்தகசங்கத் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். ஊர்காவற்றுறை மற்றும் குறிகாட்டுவான் சேவையில் ஈடுபட்டு வரும் 777,780, 776 ஆகிய இலக்கங்களைக் கொண்ட யாழ்ப்பாணம் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பேருந்துகள் அடிக்கடி பழுதடைந்து வீதிகளில் நிற்பதைக்காணக் கூடியதாக உள்ளது.

இந்த பேருந்து பிரயாணத்தை மேற்கொள்ளும் அரச, தனியார் ஊழியர்கள், மாணவர்கள் ஆசிரியர்கள், மற்றும் வியாபாரிகள், உல்லாசப் பயணிகள் ஆகியோர் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன் வீண் காலதாமதங்களும் ஏற்படுகின்றது. சேவையில் ஈடுபட்டுவரும் பழுதடைந்த பேருந்துகள் உடனடியாக அகற்றி தரமான பேருந்துச் சேவையில் ஈடுபடுத்தவேண்டும்.

நவீன போக்குவரத்துவசதிகள் உள்ள இக்காலத்தில் இவ்வாறான வண்டிகளைத் தவிர்த்து நல்ல பஸ் வண்டிகளைச் சேவையில் ஈடுபடுத்துவதே தீவக மக்களுக்கு செய்யும் சேவையாகும் என அவர் தெரிவித்துள்ளார். (21)

# உரும்பிராயில் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த ஆண்டு விழா

சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு விழாவை முன்னிட்டு உரும்பிராய் சந்திரோதயக் கல்லூரியில் விஷேட நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

இராமகிருஷ்ணன் நலன்புரி நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.சிவமோகன் மாணவர்களுக்கு சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள் என்னும் தலைப்பில் விஷேட உரை நிகழ்த்தினார்.

சுவாமி விவேகானந்தரின் மாணவப் பருவம் எமது மாணவர்களுக்கு சிறந்த முன்னுதாரணம் எனக் குறிப்பிட்ட அவர், சிறுவயதிலும் மூடத்தனங்களுக்கு அடிபணியாத அவரது புத்திசாலித்தனத்தையும், எதையும் பகுத்து ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளும் அவரது சிறப்புப் பண்பையும் மாணவர்கள் மேலான கவனத்தில் கொள்வது மிக அவசியம் என சிவமோகன் மேலும் குறிப்பிட்டார்.

நிகழ்வில் பெற்றோரை இழந்த 24 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள், போஷாக்கு உணவுகள் வழங்கப்பட்டதுடன், தரம்1, தரம் 2 ஐ சேர்ந்த மேலும் 24 மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

கல்லூரி மாணவர்களின் ஆங்கிலக் கல்வியை விருத்தி செய்யவென ஆங்கில பாடநூல்களும், இறுவட்டுக்களும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரால் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படமொன்றையும் பாடசாலைக்கு அன்பளிப்பாக சிவமோகன் வழங்கி வைத்தார்.

யாழ்.பிராந்திய வைத்திய அதிகாரி ச.பாலகுமார், யாழ்.இந்துக் கல்லூரி பற்சிகிச்சை வைத்திய நிபுணர் திருமதி சி.தேவஞானன் ஆகியோர் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு மாணவர்களின் பற்சுகாதாரத்தைப் பேணவென தேவையான ஆலோசனை, வழிகாட்டல்களை வழங்கினர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் நலன் கருதி பற்சுகாதாரத்திற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும், பற்பரிசோதனை முகாமும் அன்றைய தினம் கல்லூரியில் நடைபெற்றது.

**அதிரடி** அறிவிப்புகளை வெளியிடுவதில் சம்பந்தன் பெயர் பெற்றவர். ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று முள்ளிவாய்க்கால் தோல்விக்குப் பின் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்று இன்னொரு சந்தர்ப்பத்தில் கூறினார். தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து இராணுவத்தை முற்றாக நீக்குமாறு நாங்கள் கோரவில்லை என்று நாடாளுமன்றத்தில் சொன்னார். இந்த அறிவிப்புகள் எல்லாம் மிகக் குறுகிய காலத்திலேயே நம்பகத் தன்மையை இழந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ தமிழ் மக்களோ மீண்டும் வன்முறை அரசியல் இடம்பெறுவதை விரும்பவில்லை என்று இப்போது சொல்கிறார். கடந்த செவ்வாய்க் கிழமை வெளிநாட்டு ஊடகவியலாயாளர்கள் மத்தியில் உரையாற்றியபோது இப்படிக் கூறி-னார். அவரது கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டு விஜயங்களின்போது தெரிவித்த சில கருத்துகள் சம்பந்தனுடைய இக்கூற்றின் நம்பகத் தன்மையைக் கேள்விக்கு உட்படுத்துகின்றன. தனிநாடுதான் கூட்டமைப்பின் இலக்கு என்று இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளில் தெரிவித்த கருத்து பதிவாகியுள்ளது. அரசியல் தீர்வுக்கான கொள்கைத் திட்டத்தை வெளியிடாமல் நான்கு வருடங்களாகக் காலங்கடத்துவது தனிநாட்டுச் சிந்தனையின் தாக்கத்தினாலா என்ற கேள்வியும் எழுகின்றது.

வன்முறையை நிராகரித்துக் கொண்டு தனிநாட்டுக் கற்பனையில் மிதப்பது முரண்பாடானதாகத் தோன்றலாம். ஆனால், அதற்காக ஒரு மூலோபாயத்தை இவர்கள் பின்பற்றுவது போல் தெரிகின்றது. அரசாங்கம் தமிழ் மக்களை எவ்வளவு கடுமையான அடக்குமுறைக்கு உட்படுத்துகின்றதோ அவ்வளவுக்குத் தனிநாட்டுக்கான ஆதரவு பெருகும் என்று ஒரு காலத்தில் ஆயுதப் போராளிகள் கூறினார்கள். அந்தச் சிந்தனை, கூட்டங்கூட்டமாகத் தமிழ் மக்களைப் பலிகொடுப்பதிலேயே முடிந்தது.

இப்போதும் அப்படியான சிந்தனை வழி நடத்துகின்றதா என்ற சந்தேகம் தோன்றுகின்றது. அரசியல் தீர்வு பற்றிப் பேசுகின்றார்கள். ஆனால், தீர்வுத் திட்டத்தை வெளியிடவில்லை. தீர்வை அடைவதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. தீர்வு பற்றிப் பேசுவதற்குக் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் நிராகரிக்கின்றார்கள். தமிழ் மக்கள் மென்மேலும் துன்பங்களை அனுபவிக்கும் பட்சத்தில் வெளிநாட்டுத் தலையீட்டின் மூலம் வன்முறை இல்லாமலே தனிநாட்டை அடையலாம் என்று கனவு காண்கின்றார்கள் போலும். இது மீண்டும் தமிழ் மக்களைக் கூட்டங்கூட்டமாகப் பலிகொடுப்பதற்கான முயற்சி. இவர்கள் எதிர்பார்ப்பது போல் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட்டுத் தனி நாட்டைப் பெற்றுக்கொடுப்பதற்குஎந்தவெளிநாடும் தயாராக இல்லை.வீணாக கற்பனையில் மிதந்து கொண்டிருக்காமல் தமிழ் மக்களுக்கு விமோசனத்தைப்பெற்றுக்கொடுப்பதற்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் முன்வரவேண்டும். அரசியல் தீர்வுதான் தமிழ் மக்களுக்கான விமோசனம்.

மீண்டும் வன்முறை அரசியலை விரும்பமாட்டோம்

■ சங்கர சிவன்

என்று சொன்னவுடன் அரசியல் தீர்வு வரப்போவதில்லை. தீர்வுத் திட்டமொன்று அடிப்படையான தேவை. ஒரே தடவையில் அத்தீர்வைப் பெற முடியாதென்பதால் படிப்படியாகஅதை வென்றெடுப்பதற்கேற்ற பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும். அதே நேரம் இறுதித்தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் வகையில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். அரசியல் தீர்வை அடையும் நடைமுறையில் இவை முக்கியமானவை. கூட்டமைப்பு இவற்றுள் ஒன்றையேனும் செய்யாமல் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை.

பதவியிலுள்ள அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியே தீர்வைப் பெற வேண்டும் என்று பல நாடுகள் பல தடவைகள் கூறிவிட்டன. அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பாரதிய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதையே சொன்னார்கள். ஆனால், கூட்டமைப்பு நொண்டிச் சாட்டுகள் கூறிப் பேச்சுவார்த்தையை நிராகரிக்கின்றது. இனப் பிரச்சினையின் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒரு உதாரணம். தெரிவுக் குழுவுக்குச் செல்வதைக் கூட்டமைப்பு ஏதேதோ காரணங்கள் கூறித் தவிர்க்கின்றது. தெரிவுக் குழுவில் பங்கு பற்றாமலிருப்பதற்கு இவர்கள் கூறும் பிரதான காரணம் அது பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்துவிடும் என்பதாகும். இதுவும் ஒரு கற்பனை தான். சரியான சிந்தனையிலிருந்து தமிழ் மக்களைத் திசை திருப்புவதற்கான இந்தக் கற்பனையை அவிழ்த்து விடுகின்றார்கள்.

பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்துவிடும் என்று தெரிவுக் குழுவின் செயற்பாடு ஆரம்பிப்பதற்கு முன்னரே இவர்கள் எப்படிக் கூறலாம்? சரி, அப்படித்தான் என்றாலும் தெரிவுக் குழுவில் பங்குபற்றி அதன் தவறான நோக்கத்தை அம்பலப்படுத்தலாமே. அப்போது அரசாங்கம் தானே தற்காப்பு நிலைக்குத் தள்ளப்படும். கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கு பற்றாதிருப்பதற்கான உண்மைக் காரணம் வேறு. தெரிவுக்குழுவில் பங்குபற்றினால் தீர்வுக்கான ஆலோசனையை முன்வைத்தாகவேண்டும். அப்படி முன்வைப்பதற்கு இவர்களிடம் ஒருஆலோசனையும் இல்லையே. இந்த வெறுமையை மூடி மறைப்பதற்காகவே பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்துவிடும் எனக் கூறி மக்களைத் திசை திருப்புகின்றார்கள். மக்களுக்குப் பொய்யான தகவல்களைக் கூறும் செயல் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவோடு மட்டும் நிற்கவில்லை.


பதின்மூன்றாவது திருத்தத்தைத்திருத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருப்பது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மக்களைத் திசை திருப்பும் வகையில் ஒரு கருத்தைத் தெரிவித்தார். அக்கம் பக்கமாக இருக்கும் இரண்டு அல்லது மூன்று மாகாண சபைகள் தீர்மானமொன்றின் மூலம் ஒன்றாக இணைவதற்குப் பதின்மூன்றாவது திருத்தத்தில் ஏற்பாடு உண்டு என்றும், வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணையக்கூடாது என்பதற்காக அரசாங்கம் அந்த ஏற்பாட்டை இரத்துச் செய்யப் போகின்றது என்றும் கூறினார்.

இரண்டு அல்லது மூன்று மாகாண சபைகள் தங்களுக்குள் தீர்மானமொன்றை நிறைவேற்றி ஒன்றாக இணைவதற்கான ஏற்பாடு எதுவும் பதின்மூன்றாவது திருத்தத்தில் இல்லை. நாடாளுமன்றம் சட்டமொன்றை இயற்றி அங்கீகாரம் அளிக்கும் பட்சத்தில் அக்கம் பக்கமாக உள்ள இரண்டு அல்லது மூன்று மாகாண சபைகள் ஒன்றிணையலாம் என்பதே பதின்மூன்றாவது திருத்தத்திலுள்ள ஏற்பாடு. நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடனேயே ஒன்றிணைவு ஏற்பட முடியும். வடமாகாண சபையும் கிழக்கு மாகாண சபையும் தங்களுக்குள் தீர்மானித்து ஒன்றிணையலாம் என்ற அபிப்பிராயத்தைத் தோற்றுவிக்கும் வகையில் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவித்திருப்பதைப் பிழையான தகவல்கள் மூலம் மக்களைத் தவறாக வழிநடத்தும் முயற்சி என்றுதானே கூறவேண்டும்.

அரசியல் தீர்வு விடயத்திலும் கூட்டமைப்புத் தலைவர்கள் மக்களைத் தவறாக வழி நடத்துகின்றார்கள். அரசாங்கத்திடம் தீர்வு ஆலோசனைகளை முன்வைத்திருப்பதாகத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அடிக்கடி கூறுவது வழக்கம். அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் உயர் மட்டக் கூட்டம் பற்றி ஊடகவியலாளருக்கு விளக்கமளித்த மாவை சேனாதிராசா அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த தீர்வு ஆலோசனைகள் பற்றியும் பேசினோம் என்று சொன்னார். மங்கள முனசிங்கவின் சிபார்சுகள், திஸ்ஸ விதாரணவின் அறிக்கை, சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கம் ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் அடிக்கடி கூறுகின்றார்கள். அரசாங்கத்திடம் ஏற்கனவே தீர்வு ஆலோசனைகளைச் சமர்ப்பித்திருந்தால் இப்படிச்சொல்ல வேண்டிய அவசியம் இல்லையே. நாங்கள் முன்வைத்த் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று தானே சொல்ல வேண்டும். கூட்டமைப்பு பொய்யான தகவல்களைக் கூறி மக்களை ஏமாற்றுகின்றது என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை.

# மக்களை மீண்டும் பலிகொடுக்கவே கூட்டமைப்பு தயாராகின்றது

தீர்வுத் திட்டமொன்று அடிப்படையான தேவை. ஒரே தடவையில் அத்தீர்வைப் பெற முடியாதென்பதால் படிப்படியாக அதை வென்றெடுப்பதற்கேற்ற பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும். அதேநேரம் இறுதித்தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் வகையில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். அரசியல் தீர்வை அடையும் நடைமுறையில் இவை முக்கியமானவை. கூட்டமைப்பு இவற்றுள் ஒன்றையேனும் செய்யாமல் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை.



கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தமிழ் மக்களின் விமோசனத்தில் உண்மையான அக்கறை இருக்குமேயானால் பிழையான தகவல்களைக் கூறி மக்களைத் தவறாக வழிநடத்துவதையும் போலியான நம்பிக்கைகளை வளர்ப்பதையும் உடனடியாக நிறுத்திவிட்டு அரசியல் தீர்வுக்கான முயற்சியில் ஆக்கபூர்வமாக ஈடுபட வேண்டும். அதற்கு இப்போது கிடைத்திருக்கும் நல்லசந்தரப்பம் நாடாளுமன்றத் தெரிவுக் குழு. இந்தத் தெரிவுக் குழு பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்துவிடும் என்று வழமையான பாணியில் மக்களுக்குப் படங்காட்டாமல் அதில் பங்கு பற்றித் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமேயானால் அதை எதிர்ப்பதற்கான இடமும் தெரிவுக்குழுவே தான். பதின்மூன்றாவது திருத்தத்துக்கு ஆதரவானவர்களும் தெரிவுக்குழுவில் இருப்பார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

அரசியல் தீர்வுக்கான முயற்சியை முன்னெடுப்பதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சரியான முறையில் பயன்படுத்தக் கூட்டமைப்புத் தலைவர்கள் தவறுவார்களானால் அதீதமான கற்பனையுடன் தமிழ் மக்களை மீண்டும் கூட்டங்கூட்டமாகப் பலிகொடுக்கத் தயாராகின்றார்கள் என்பதே அர்த்தம்.

# எதிர்க்கட்சிகள் அலட்சியப்படுத்துமாயின் தெரிவுக்குழு செயற்பாடுகள் ஆரம்பமாகும்



(கொழும்பு)

உறுப்பினர்களை தெரிவு செய்யாமல் எதிரக கட்சிகள் தெரிவுக் குழுவை அலட்சியப் படுத்துமாயின் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 19 பேர் உத்தேசிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குவுக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், இந்த குழுவில் இடம் பெறும் உறுப்பினர்களை தெரிவுசெய்து அறிவிக்குமாறு, எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். அரசாங்கத்தின் தரப்பிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 19 உறுப்பினர்களின் பெயர்களும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

'எதிர்க்கட்சிகள் அவர்களுக்கு ஒதுககப் பட்டுள்ள 12 இடங்களுக்கு எவரையும் இதுவரையிலும் நியமிக்கவில்லை என்றால், பெரும்பான்மை உள்ள அரச உறுப்பினர்கள் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வார்கள் என்றும் அவர் தெரிவத்தார்.

இந்நிலையில், இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பொதுச்செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க சபாநாயகரிடமிருந்து தங்களுக்கு எந்தவொரு அழைப்பும் இதுவரை வரவில்லை என்றார்.

தாங்கள் தெரிவுக்குழுவில் பங்கேற்பதென்றால், வடக்கில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை செப்ரெம்பரில் நடத்தவேண்டும், அந்த தேர்தலை கண்காணிப்பதற்காக பொதுநலவாய நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளை அனுமதிக்கவேண்டும்.

தேர்தலுக்கு முன்னர் சிவில் சமுகத்திலிருந்து ஆளுநராக ஒருவரை வடக்கிற்கு நியமிக்கவேண்டும். இந்த மூன்று நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் சம்மதித்தால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் நாம் பங்கேற்போம் என்றார்.

## வடமாகாண தேர்தல் திகதி விரைவில் வெளியிடப்படும்

(கொழும்பு)

வடமாகாண தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக அறிவித்துள்ள தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய உத்தியோகபூர்வ அறிவித்தல் கிடைத்தவுடன் தேர்தல் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தேர்தலை, செப்ரெம்பர் மாதம் நடத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் திணைக்களத்தினால் முன்னெடுக்கப் படுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டதும் திகதி குறிப்பிடப்படும் என்று தெரிவித்த அவர் வடமாகாண தேர்தலை செப்ரெம்பரில் நடத்துவது உறுதியென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சாரதியின் கவனக்குறைவால் 2 வயதுக் குழந்தை உயிரிழப்பு

(கொழும்பு)

பேருந்தில் சில்லில் சிக்கி 2 வயதுக் குழந்தை பலியான சம்பவம் மட்டககளப்பில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. ஏறாவூர் பொலிஸ் பிரிவு, களுவன்கேணி காளி கோயில் வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில், புஸ்பராசா சதுர்நிஸா என்ற இரண்டு வயது குழந்தையே பலியாகியுள்ளது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தை சாரதி பின்புறமாகச் செலுத்தியபோது குழந்தை பேருந்தின் சில்லில் சிக்கி பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் சடலம் தற்போது செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் பேருந்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகினறனர்.

## டெங்கு ஒழிப்பு தீவிரம்; மேலும் சில பீடங்களுக்கு விடுமுறை

(கொழும்பு)

டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதற்கான திட்டத்தினால் இன்றும் நாளையும் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் சில பீடங்களுக்குரிய வெளிவாரி கற்கைகளுக்கான விரிவுரைகள் பிற்போடப் பட்டுள்ளன.

கல்வி, கலை, முகாமைத்துவ மற்றும் சட்ட பீடங்களின் வெளிவாரி கற்கைகளுக்கான விரிவுரைகளே பிற்போடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி குமார ஹிரிம்புரேகம தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித வள மேம்பாட்டு நிலையத்தின் வார இறுதி விரிவுரைகளும் பிற்போடப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதற்கான விசேட செயற்றிட்டமொன்றை நாளை பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கவுள்ளதாக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கூறியுள்ளார்.

இதேவேளை டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப் பட்டதை அடுத்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் நான்கு பீடங்களின் விரிவுரைகளும் பரீட்சைகளும் கடந்த புதன் கிழமை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலுக்குள் சுயாதீனக்குழு கோருகின்றது ஐ.தே.கட்சி

එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக 17 ஆம் அரசியல் திருத்தத்தின் கீழ் உள்ள சுயாதீன குழுக்களை நியமிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சி வலியுறுத்தியுள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுபபினர் மங்களசமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு சுயாதீனக் குழுக்கள் நியமிக்கப்படாவிட்டால், பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடதது வது தொடர்பில் மறுபரிசீலனை செய்யுமாறு, அதன் தலைமைத்துவத்துக்கு ஐக்கிய தேசிய் கட்சி அறிவுறுத்தும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதற்கிடையில் இந்த செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா, அவசர அவசரமாக அரசாங்கம் அரசியல் யாப்பை திருத்த முயல்வது பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தும் என்று தெரிவித்தார்.

# இராணுவ நீதிமன்றத்தால் 5726 பேருக்கு தண்டனை

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு முதல் 421 படை அதிகாரிகளும் 5205 படை வீரர்களும் இராணுவ நீதிமனறத்தால் தண்டனை விதிக்கபட்டார்கள் என்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அரசாங்க தரப்பு பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கண்ட் தகவலை வழங்கினார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் காலி கடற்படை முகாம் மீது புலிகள் தாக்கியபோது அப்படை முகாமிலிருந்த கொமடோர் டி.எம்.பி. மெண்டிஸும் இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்களில் உள்ளடங்குகின்றார் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து மற்றுமொரு கேளிவியை எழுப்பிய ரவி கருணாநாயக்க எம்.பி, "முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா, இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டது தொடர்பில் ஏன் விளக்கமளிக்கவில்லை என்றார்.

இதற்கு பதிலளித்த தினேஸ் எம்.பி, "அது பற்றி இன்னொரு கேள்வி உத்தியோகபூர்வமாக கேட்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

## தாயின் கருவில் இருக்கின்ற குழந்தைக்காகவும் அபிவிருத்தி

(கொழும்பு)

தாயின் கருவில் உள்ள குழந்தைகளுக்காகவும் நாட்டை அபிவிருத்தி செய்து வைத்திருக்க வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையை ஏற்றுக் கொள்ளும் நிகழ்வு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது இடம்பெறுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகள் குறித்து விமர்சிப்பவர்கள் யாவரும், விரைவில் அதன் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வர் என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.



நாட்டின் பல பாகங்களில் சீரற்ற காலநிலை காணப்படும் நிலையில் வீசிய கடும் காற்றுக்காரணமாக நீர்கொழும்பு நகரிலுள்ள வீடுகள் சிலவற்றின் கூரைகள் சேதமடைந்துள்ளதுடன் மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன.

# வறுமையிலிருந்து மீண்டெழ வாழ்வாதார உதவி கைகொடுக்கும்



(யாழ்ப்பாணம்)

வாழ்வாதாரத்திற்காக வழங்கப்படும் உதவித்திட்டங்களை சரியான முறையில் பயன்படுத்தி வறுமையிலிருந்து மீண்டெழ வேண்டுமென ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி வரணி பகுதியிலுள்ள பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கும், வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கும் வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வறிய குடும்பங்களின் வாழ்வாதார செயற்பாடுகளை முன்னேற்றுவதன் நோக்கோடு வழங்கப்படுகின்ற உதவித் திட்டங்கள் சரியான முறையில் பயன்படுத்துவதன் ஊடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நடைபெற்ற அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு வறுமையின் நிமிர்த்தம் பலவிதமான துன்ப துயரங்ளை அனுபவித்து வருகின்ற குடும்பங்களுக்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக கிடைக்கப் பெறும் இவ்வாறான வாழ்வாதார உதவிகளினை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

குறித்த வாழ்வாதார உதவித்திட்டங்களை வைகுறோ எனும் அரசசார்பற்ற நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அஞ்சலாதேவி, சாந்தசீலன், வைகுறோ நிறுவன உத்தியோகத்தர்கள் ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி பிரதேச இணைப்பாளர் சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மலசல கூடத்திற்குள் வெற்று மதுப்போத்தல்கள்

(அச்சுவேலி)

யாழ்.இ.போ.ச.பேருந்துதரிப்பிடத்தில் காணப்படும் மலசல கூடத்தில் வெற்றுமதுபானப் போத்தல்களும் பியர் ரின்களும் காணப்படுகின்றன.

குறித்த மலசலகூடமானது இ.போ.ச.யினராலே நடாத்தப்படுவதுடன் மலசல கூடத்தைப் பாவித்த பின் 10 ரூபா பணத்தைக் கொடுத்து விட்டே செல்கின்றனர். எனவே இவ்வாறு அவசர தேவைக்குச் செல்வோர் அங்கு காணப்படும் வெற்றுப் போத்தல்களால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். அத்துடன் வெற்றுப்போத்தல்கள் உடைந்தால் தமக்கு இதனால் ஆபத்து ஏற்படும் அபாய நிலையும் இருப்பதாக இவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் குறித்த மலசல கூடத்தினுள் காணப்படும் வெற்றுப் போத்தல்களை அகற்றி மக்களின் பாதுகாப்பான பாவனைக்கு வழி வகை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

## ஊர்காவற்றுறையில் சுற்றாடல் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றாடல் தினம் மற்றும் சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு விழிப்புணர்வு ஊர்வலம் இடம் பெற்றவுள்ளது.

சுற்றாடலை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு ஊர்வலம் ஊர்காவற்றுறை பொதுப் பேருந்து தரிப்பிடத்திலிருந்து ஆரம்பித்து யா/ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் பாடசாலை முன்றல் வரை சென்றடையும்.

இவ் ஊர்வலத்தில் பொது மக்களை கலந்து கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வை பெறுமாறு ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

## இரத்தினக் கற்களை அணிவது அதிர்ஷ்டத்தின் திறவுகோலாகும்

ஜோதிர் வித்யா இரத்னா அரச விருது பெற்ற
ஜோதிடர் வி.ஏ.சிவராசா
வேலணையூரான்

### முதலாம் எண்காரர்கள்

(பிறந்த திகதிகள் : 1, 10, 19, 28)

அதிர்ஷ்டசாலியாக வருவதற்கு மாணிக்கக் கல்லே சிறநதது. மஞ்சள் புஸ்பராகம், கனக புஸ்பராகம் அணிவது இரண்டாம் பட்சமே. சிறுவர்கள் (Topaz) டொபாஸ் கற்களை தரிப்பதனால் மூளை மற்றும் எலும்பு வளர்ச்சி ஏற்படும்.

மஞ்சள் புஸ்பராகம் சரீர சுகத்தையும் (கண் சம்பந்தப்பட்ட நோய்களை நீக்கும்) வெற்றியையும் ஏற்படுத்தும். ஆபரணங்களில் இரத்தினக் கற்களை அணியும்போது உடலின் தோலுடன் முட்டுதல் அவசியமாகும.

### இரண்டாம் எண்காரர்கள்

(பிறந்த திகதிகள் : 2, 11, 22, 29)

இரத்தினங்களில் முத்தும், "Jade" என்று அழைக்கப்படும் பச்சை நிறக் கற்களும் அணி வதனால் அதிர்ஷ்டசாலியாகலாம்.

பெண்கள் தோடு களில் Jade கல் வினை தரிப்பதினால் பிறரால் கவரப்படுவர். வயிற்றுடன் தொடர்பான நோய்களை (அல்சர்) "யேட்" நீக்கும். வைடூரியமும் (Moon Stone) சந்திர காந்தக் கல்லும் தரிப்பதன் மூலம் கிரகங்களின் பாதகமான விளைவுகளின்றும் விமோசனம் உண்டாகும்.

### மூன்றாம் எண்காரர்கள்

(பிறந்த திகதிகள் 3, 12, 12, 30)

அணியக்கூடிய மிகச்சிறந்த இரத்தினக்கல் செவ்வந்தி எனப்படும் (Amethyt) கத்தரிப்பூ நிறங்கொண்ட கல்லேயாகும். தோல் மற்றும் முரசுடன் தொடர்பான நோய்கள் இக்கல்லை அணிவதன் மூலம் நீங்குவதுடன் மன அமைதியும் அதிர்ஷ்ட சக்தியையும் ஏற்படுத்தும்

மஞ்சள் புட்பராகமும் அணிவதன் மூலம் நன்மைப்பலா பலன்களையும் முன்னேற்ற கரமான வாழ்வினையும் அடைய முடியும். வெண்குஸ்டம் (தோல் வெண்மையடைதல்) நீங்க செவ்வந்தியே சிறந்தது.

(தொடரும்...)

## அராலி தெற்கில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

'ப வரல்' நிறுவனம் நடாத்தும் நடாமாடும் சேவை அராலி தெற்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் ஆரம்பமானது. இதில் ப வரல் நிறுவனத் தலைவர் ரோகன ஹெட்டியராச்சி தலைமையில் அ.சோதிநாதன் வலி.மேற்கு பிரதேச செயலர் அராலி கிராம சேவகர்கள் மற்றும் 170 உத்தியோகத்தகள் கலந்து கொண்டனர்.

இதில் அடையாள அட்டை வழங்குதல் மற்றும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கை இடம்பெற்றது. யாழ். மாவட்டத்தில் 5ஆவது நாளாக இந்தச் சேவை இடம்பெற்றது. 400இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (180)

## முரசின் இன்றைய பலன்

(09.06.2013 - ஞாயிற்றுக்கிழமை)


விஜய வருஷம் வைகாசி மாதம் 26 ஆம் திகதி.
நட்சத்திரம் மிருகசீரிடம் முன்னிரவு 11.02 வரை. திதி - பிரதமை
முன்னிரவு 11.30 வரை. இராகுகாலம் 04.22 - 05.52 வரை.
சுபநேரம் 08.52 - 10.22 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எண்ணமும், செயலும் உற்சாகம் பெறும். முடியாதிருந்த வேலைகளையும், சுறுசுறுப்பாக நிறைவேற்றுவீர்கள். தொழில், முன்னேற்றம் பெறும். சராசரி பணவரவு. தொடங்கிய காரியம் வெல்லும். பழைய விவகார சிக்கல் தீரும். |
| ரிஷபம் | போட்டியாளர்கள் உங்களைக் குறை சொல்வர். சாந்த குணத்துடன் விலக்குவீர்கள். தொழில் வேலைச்சுமை அதிகரிக்கும். தவிர்க்க இயலாத செலவு ஏற்படலாம். கடனுக்கு கிடைக்கிறதென்று, பயன் தராப் பொருள் வாங்க வேண்டாம். |
| மிதுனம் | திட்டமிட்ட செயல், நல் உழைப்பினால் பூர்த்தியாகும். எண்ணத்தில், செயலில் புதுமை காட்டுவீர்கள். தொழில், அபிவிருத்திக்கு, முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். பணவரவு முன்னேற்றம் பெறும். விருந்து விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். |
| கடகம் | எதிர்ப்பாக செயற்பட்டவர், மாறுவார். சமூகத்தில் பெற்ற அந்தஸ்தை பாதுகாத்துக் கொள்வீர்கள். தொழில், செழிக்கும். உபரி வருமானத்தில், கொஞ்சம் சேமிப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் மனங்குளிர நடப்பர். இசைப் பாடலை ரசித்து ஒய்வு. |
| சிம்மம் | செயல்களில் முன்யோசனை நிறைந்திருக்கும். முடியாதிருக்கும் வேலைகளை முடிக்க முயற்சி எடுப்பீர்கள். தொழில், வளர்ச்சியின் பரிமாணம். பணவரவில் முன்னேற்றம். குடும்பத்தில் சுபநிகழ்வு உருவாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி. |
| கன்னி | வேலைகளை மனப்பூர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில் சிறந்து, பிறரது கவனத்தை ஈர்க்கும். தாராள பணவரவு. வெகுநாள் எதிர்பார்த்த அனுகூல செய்தி வந்து சேரும். சுற்றுலாவுக்குத் திட்டமிடுவீர்கள். நண்பர் சந்திப்பில் மகிழ்வு. |
| துலாம் | சம்பந்தமில்லா பணி ஒன்று குறுக்கிடலாம். சூழ்நிலை அறிந்து, செயற்படுவது நல்லது. தொழில், உள்ள அனுகூலத்தை தவறவிட்டால் நஷ்டம் வரலாம். குறைந்த பணவரவு. உத்தியோகத்தர்களுக்கு நன்மை. பழைய விவகார சிக்கல் தீரும். |
| விருச்சிகம் | செயலில் குளறுபடி ஏற்படலாம். கருமமே கண்ணாயிருந்தால் ஜெயிக்கலாம். தொழில், சுமாரான அளவில். உறவினர் வகையில், அதிக பணச் செலவு. ஒவ்வாத உணவு வகை தவிர்க்கவும். போக்குவரத்திலும் கவனம். |
| தனுசு | கவனக்குறைவினால், சிறு சிரமம் வரலாம். நிதானம் நன்மை தரும். மனம் விரும்பாத நிகழ்ச்சியில் விலகியிருப்பது நல்லது. தொழில், முன்னேற உதவி ஒன்று வரும். வரவுக்கேற்ற செலவு வரும். தாயின் அன்பு, மனதிற்கு ஆறுதல். |
| மகரம் | செய்த நன்மைக்கு பலன் தேடிவரும். உண்மை, நேர்மையில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள். தொழில், வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரி பணவரவு. சமூக அந்தஸ்து உயரும். இல்லறத்துணை விரும்பியது வாங்கித் தருவீர்கள். |
| கும்பம் | பகை அறிந்து விலகுவதால், சிரமம் தவிர்க்கலாம். தொழில், தாமத கதியில். வரவை விட, செலவு கூடும். சொத்து, ஆவணம் பாதுகாப்பில் கவனம் வேண்டும். பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்ல வேண்டாம். புத்திரர் நம்பிக்கை தருவர். |
| மீனம் | உங்களுக்கு வாக்குறுதி தந்தவர் நிறைவேற்ற மறுக்கலாம். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். தொழில் நிலை, சுமாரான அளவில் இருக்கும். வரவை விட செலவு கூடும். உணவில் கவனம் தேவை. எதிர்காலம் பற்றிய பயம் வந்து நீங்கும். |

# வன்னியின் பெரும் சமர்

# இனிங்ஸால் வென்றது கிளிநொச்சி ம.வி.





(புதுக்குடியிருப்பு)

வன்னியின் பெரும் சமர் என வர்ணிக்கப்படுகின்ற கிளி.-முல்லை நட்புறவுக் கிண்ண இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி இனிங்ஸ் மற்றும் பத்து ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கிளிநொச்சி மகாவித்தியாலய அணிக்கும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்குமிடையிலான வன்னியின் பெரும் சமர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்றாவது கிளி.-முல்லை நட்புறவுக் கிண்ண இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்றும், நேற்று முன்தினமும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதல் இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை கிளிநொச்சி மகாவித்தியாலய அணி தொடர்ந்தது. இறுதி விக்கெட்டுக்களை விரைவாகச் சாய்க்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், கிளிநொச்சி மகாவித்தியாலய அணித் தலைவர் சுயந்தன் பொறுமையாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். இறுதியில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி முதல் இனிங்ஸிற்காக 55.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் சுயந்தன் ஆட்டமிழக்காது 19, டேவிசன் 38, விதுல்ஜன் 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிந்துஜன் மூன்று, சஜீபன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

112 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி கபிலன், யதுசன், விதுசன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது. இருப்பினும் கிருசாந்தன், சிந்துஜன் ஆகியோர் நிதானமாக ஆடினர். இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கும் நோக்கில் இவர்கள் ஆடியபோதும் அது முடியவில்லை. இறுதியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக 47.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருசாந்தன் 26, சிந்துஜன் 21, சஜீபன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கபிலன் மூன்று, விதுசன், யதுசன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் இனிங்ஸ் மற்றும் 10 ஓட்டங்களால் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி வெற்றியைப் பதிவாக்கியது. புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி முதல் இனிங்ஸ் 43.

அத்துடன் இத்தொடரில் தமது கன்னி வெற்றியைப் பதிவாக்கிக் கொண்ட கிளிநொச்சி மகாவித்தியாலய அணி, யுத்தத்திற்குப் பின்னர் முதல் வெற்றியைப் பதிவாக்கிய அணி என்ற சிறப்பையும் பெற்றுக்கொண்டது. முதலாவது போட்டி சமநிலையில் நிறைவுற்றதுடன் இரண்டாவது போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி வீரர் கபிலன், சிறந்த துடுப்பாட்ட வீரராக அதே அணியைச் சேர்ந்த விதுல்ஜன், சிறந்த சகலதுறை வீரராக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த விதுசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டி நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பயிற்சியாளர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எஸ்.பி.,02)

## ஹிந்தி இசையால் அதிருப்தி




(கொழும்பு)

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் ஆரம்ப விழாவில் இலங்கை வீரர்களை அறிமுகப்படுத்தும்போது பின்னணியில் ஹிந்தி இசை ஒலிபரப்பப்பட்டமை தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபை அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

ஐ.சி.சி. கிரிக்கெட் போட்டிகளின் ஆரம்ப விழா லண்டனில் நடைபெற்றது. இதன்போது ஒவ்வொரு நாட்டின் வீரர்களையும் அறிமுகப்படுத்துவதற்காக அந்தந்த நாடுகளின் இசைவடிவங்களே ஒலிபரப்பப்பட்டன. ஆனால், இலங்கை வீரர்களை அறிமுகப் படுத்தும்போது பின்னணியில் ஹிந்தி இசை ஒலிபரப்பப்பட்டது. இதுதொடர்பில் ஐ.சி.சி.நிர்வாகத்திடம் விளக்கம் கேட்டு தாங்கள் கடிதம் எழுதி இருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை செயலாளர் நிசாந்த ரணதுங்க தெரிவித்தார். ஒலிபரப்பப்பட்ட இசை ஹிந்தி மொழியில் இருந்தது. எமது கலாசாரத்தை பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கவில்லை. இதனால் எமது வீரர்களும் பார்வையளர்களும் மிகுந்த ஏமாற்றத்துக்கு உள்ளானார்கள். இது தொடர்பில் ஐ.சி.சி.யின் நிறைவேற்று அதிகாரியிடம் விளக்கம் கேட்டு கடிதம் எழுதியுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

## சச்சினை மறக்கச் செய்த தவானின் ஆட்டம்

(மும்பை)

சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் தொடரில் தவானை பற்றிதான் அனைவரும் பேசினர். சச்சின், சேவாக் இல்லாததை இரசிகர்கள் உணரவில்லை என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் தெரிவித்தார். தென்னாபிரிக்க அணிக்கெதிரான சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் தொடரின் முதல் லீக் போட்டியில் இந்தியாவின் தவான், ஒரு நாள் அரங்கில் தனது முதல் சதத்தைப் பதிவு செய்தார்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கபில்தேவ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அணியின் எதிர்கால நட்சத்திரமாக தவான் திகழ்கிறார். தென்னாரிக்காவுக்கு எதிராக துணிச்சலாக ஆடினார். ஆரம்ப வீரராகக் களமிறங்கிய ரோகித் ஆட்டமும் சிறப்பாக இருந்தது. இதனால், நல்ல ஓட்ட எண்ணிக்கையை எட்ட முடிந்தது. தற்போது, இந்திய அணி இளம் வீரர்களின் வசம் சென்று விட்டது. அணியில் சச்சின், சேவாக் இல்லை என்பதை என்னால் உணர முடியவில்லை. அந்தளவுக்கு, தவானின் ஆட்டம் இருந்தது. தவிர, இரசிகர்களும் இவரை பற்றி மட்டுமே பேசினர். மற்ற வீரர்களைப்பற்றி பேசுவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சாய்னா வெளியேற்றம்

தாய்லாந்தின் பாங்கொக்கில் தாய்லாந்து கிராண்ட்பிரி கோல்ட் பட்மின்ரன் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் நடப்பு சம்பியனான இந்தியாவின் சாய்னா நேவால், அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் சிங்கப்பூர் விராங்கனை ஜுவான் கூ என்பவருடன் சாய்னா விளையாடினார். ஆரம்பத்தில் தனது அனுபவ ஆட்டத்தின் மூலம் புள்ளிகளைப் பெற்று 4-2 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தார். ஆனால், ஜுவானின் தொடர் நெருக்கடிகளால் தடுமாறிய அவர், முதல் செட்டை போராடி வென்றார். அதன்பின்னர் சாய்னாவுக்கு வாய்ப்பு அளிக்காமல் முன்னேறிய ஜுவான் அடுத்தடுத்து இரண்டு செட்களையும் கைப்பற்றினார். இதனால் 21-13, 12-21, 18-21 என்ற செட்கணக்கில் சாய்னா தோல்வியடைந்தார்.

## பிரெஞ்ச் ஓப்பன் இறுதியில் நடால், பெரர் மோதல்

(பாரிஸ்)

பிரெஞ்ச் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு ஸ்பெயின் நடால், சக வீரரான டேவிட் பெரரை எதிர்கொள்கிறார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், பிரெஞ்ச் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதலாவது அரையிறுதி போட்டியில் தரவரிசையில் முதல் இடத்திலுள்ள சேர்பியாவின் ஜோகோவிச், மூன்றாம் நிலை வீரரான ஸ்பெயினின் நடாலை எதிர் கொண்டார். இதில் முதல் செட்டை 6-4 என கைப்பற்றிய நடால், இரண்டாவது செட்டை 3-6 என இழந்தார். மூன்றாவது செட்டை 6-1 என வென்ற நடால், டை-பிரேக்கர்வரை சென்று நான்காவது செட்டை 6-7 என கோட்டை விட்டார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி மற்றும் ஐந்தாவது செட்டில் எழுச்சி கண்ட நடால் 9-7 என தன்வசப்படுத்தினார். முடிவில், நடால் 6-4, 3-6, 6-1, 6-7, 9-7 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, எட்டாவது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார். இறுதிப் போட்டியில் ரபேல் நடால் வெற்றி பெற்றால், ரென்னிஸ் உலகில் இதுவரை யாரும் சாதிக்காத வகையில், எட்டாவது முறையாக ஒரு கிராண்ட்ஸ்லாம் போட்டியை வென்றவர் எனும் பெருமையை அவர் பெறுவார்.

மற்றொரு போட்டியில் பெரர், பிரான்சின் டி சொங்காவுடன் மோதினார். இதில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய பெரர் 6-1, 7-6, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று,முதல் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வெல்லும் வெற்றியாளருக்கு, கிண்ணத்தை ஜமேக்காவின் தடகள வீரர் உசைன் போல்ட் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கி

## தெல்லிப்பளை யூனியன், உடுவில் மகளிர் கல்லூரி சம்பியன்






(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கிடையிலான மாகாண மட்ட ஹொக்கிப் போட்டி நேற்று முன்தினம் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் இடம்பெற்ற இப்போட்டியில் 19 வயதுப் பிரிவு அணிகளே போட்டியிட்டன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்பிரிவில் மூன்றாமிடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி பிடித்துக் கொண்டது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதின. மாகாண பெண்கள் ஹொக்கிப் போட்டி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஆதிக்கம் செலுத்தி, அசத்தி வரும் உடுவில் மகளிர் கல்லூரி இந்த ஆண்டும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றும் என எதிர்பார்க்கப்பட்டது. இதற்கமைய ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய உடுவில் மகளிர் கல் லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இதன் மூலம் உடுவில் மகளிர் கல்லூரி அணி மாகாண மட்ட ஹொக்கிப் போட்டியில் தொடர்ந்து ஆறு முறை சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி அசத்தியுள்ளது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி பிடித்துக் கொண்டது. இப்போட்டி வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலனின் தலைமையில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# மாவட்ட மட்ட தாச்சி இன்று இறுதிப் போட்டி



ஆலடி சிந்து அணி



பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணி

(சண்டிலிப்பாய்)

யாழ். மாவட்ட தாச்சி சங்கம் நடத்தும் மாபெரும் தாச்சிப் போட்டியின் இறுதிப் போட்டி இன்றைய தினம் பிற்பகல் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியை எதிர்த்து ஆலடி சிந்து ஏ அணி மோதவுள்ளது.

யாழ். மாவட்ட தாச்சி சங்கத் தலைவர் க. தயாளன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ். முரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எஸ். மோகனதாஸ், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ. கிருபாகரன், யாழ். வர்த்தக வங்கி பிராந்திய முகாமையாளர் ரஜீவன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் விளையாட்டு ஆர்வலர்கள், நலன்விரும்பிகள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறு மாவட்ட தாச்சி சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

# முறைகேடு எதுவுமில்லை

சர்வதேச கால்புந்தாட்ட சம்மேளனத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட அனைத்து சுனாமி நிதியும் பொறுப்பு வாய்ந்த முறையில் பயன்படுத்தப்பட்டதாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் காலி அபிவிருத்தி திட்டத்தின் முன்னாள் தலைவருமான மணிலால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம், ஆசிய கால்பந்தாட்ட கூட்டமைப்பு ஆகியவற்றிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கமைய 3.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி கிடைத்ததாகத் தெரிவித்துள்ள மணிலால் பெர்னாண்டோ அதன் மூலம் நாடுமுழுவதிலும் 10 கால்பந்தாட்டநிலையங்களை அமைத்ததாக குறிப்பிட்டார்.

அம்பாறை, காலி, மன்னார், கொழும்பு, வத்தளை, பதுளை, களுத்துறை, நோர்வூட், பெத்தேகரன ஆகிய பகுதிகளில் இந்த கால்பந்தாட்ட நிலையங்கள் அமைக்கப்பட்டதாக கூறிய அவர் இந்த அனைத்து நிர்மாண நடவடிக்கைகளுக்கான நிதி அறிக்கைகளை உரியமுறையில் முன்னெடுத்துச் சென்றதாகவும் அதற்கப்பால் ஒரு சதத்தையேனும் செலவிடவில்லை என்றும்சுட்டிக் காட்டினார். இந்த நிர்மாணத்துக்கான அனைத்து நிதி அறிக்கைகளும் என்னிடம் உள்ளன. தேவையான எவருக்கும் அவற்றை வழங்க நான் தயாராக உள்ளேன். எந்தவொரு நிர்மாணத்துக்குமான கொடுப்பனவுகள் ஒப்பந்ததாரர்களுக்கு காலி அபிவிருத்தி ஊடாக மேற்கொள்ளப்படவில்லை. சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனமே கொடுப்பனவுகளைநேரடியாக வழங்கியது.

எனது தலைமையின் கீழிருந்த காலி அபிவிருத்தி நிலையம் தேவையான தொடர்பாடல் நடவடிக்கைகளையும்கண்காணிப்பையுமே மேற்கொண்டது. ஆகையால் நிதி மோசடி இடம்பெறுவதற்கான எந்தவொரு சாத்தியக்கூறும் இருக்கவில்லை என பெர்னாண்டோ குறிப்பிட்டார். அனைத்து மத்திய நிலையங்களையும் உரிய நேரத்தில் அமைத்ததுடன் கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட கால்பந்தாட்ட மத்திய நிலையங்களின் புகைப்படங்களை நாம் வெளியிட்டோம். எந்தவொரு விடயமும் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கவில்லை. அந்தபுகைப்படங்களை பார்வையிட்டால் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டதன் பின்னர் சிறந்த நிலையில் இருந்ததை ஏற்றுக் கொள்வர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அப்போது நிலவிய யுத்த சூழல் காரணமாக அவை கைவிடப்பட்டன. செயற்றிட்டங்களுக்கு புறம்பாக மேலும் நிர்மாணப் பணிகள் இடம்பெற்றதுடன் அனைத்தும்இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்திற்கு தெரியப்படுத்தியே மேற்கொள்ளப்பட்டது எனக் கூறினார்.

# சென்றலைட்ஸின் வருடாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று நண்பல் 11.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் எம். ராஜவரோதயன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் விளையாட்டுக்கழகத்தின் செயற்பாட்டு விபரங்கள் தொடர்பானஅறிக்கை சமர்பிகக்ப்படவுள்ளதுடன் புதியநிர்வாகிகளும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இக்கூட்டத்தில் சகல கழக உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகச் செயலாளர் பி. கேதீஸ் கேட்டுள்ளார். (42)



# மாவைக்குச் சங்கரியாரின் சில கேள்விகள்

- சங்கரியார் மாவைக்கு எழுதிய கடிதம் (1) இலிருந்து...



அண்மைக் காலத்தில் நீர் என்னைப்பற்றியும் என் செயற்பாடுகள் பற்றியும், கூட்டங்களில் பேசுவதும் பேட்டிகள் கொடுப்பதும், என் வரலாறு தெரியாதவர்கள் என்னைப்பற்றி பேசுவதும், பத்திரிகைகளில் எழுதுவதும் எனக்கு மிக்க கவலையை தருகிறது. குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளாக உமது விமர்சனங்களுக்கு பதில் கூறாமல் விட்டமைக்கு ஒரே ஒரு காரணம் உங்கள் கூட்டு இனப்பிரச்சினை சம்பந்தமாக எடுக்கும் முயற்சிகளுக்கு என் தலையீடு முட்டுக்கட்டையாக அமையக்கூடாது என்பதற்காகவே. அன்றேல் நீங்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் மறுப்பு கூற முடியும். என்னைப் பொறுத்த வரையில் உங்களது செயற்பாடுகள் எதுவிதத்திலும் நியாயப்படுத்த முடியாதவையே. எதுவித கருத்தும் வெளியிடாது பொறுத்திருந்தேன். எது எப்படியானாலும் இனி எதையும் பொறுக்க நான் தயாரில்லை. உம்மைப் போன்றவர்களின் செயற்பாட்டால் துரோகி என்ற பட்டத்தைச் சுமக்கின்றேன். உண்மைகளை மறைக்க முடியாது. அவை வெளிவந்தால் தான் மக்கள் மத்தியில் தெளிவு ஏற்படும். ஓர் ஆயுதக்குழு பற்றிய என் கருத்துக்கள், உங்களின் தந்திரத்தால் உங்களுக்கே சாதகமாக அமைந்தது. உங்களுக்கு அதிர்ஷ்டமாகவும் அமைந்தது.

அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்கள் பெரும் அரசியல் தலைவர். இனத்துக்காகத் தன் உயிரைப் பலி கொடுத்தவர். இன்று வரை என்னால் அவரின் இழப்பை ஈடுசெய்ய முடியவில்லை. ஆனால் அவர் அமரத்துவம் அடைந்த பூத உடலின் சாம்பல் சூடு ஆற முன்பு அவர் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் பதவியையும் உமக்கே தர வேண்டுமென நீர் கேட்டது ஞாபகம் இருக்கா? விக்கிரமாதித்தன் கதையில் வரும் சம்பவம் போல் இவ்வளவு தைரியம் உமக்கு எப்படி வந்தது என நாம் ஆச்சரியப்பட்டோம். அக்காலத்தில் நீர் கட்சியின் ஓர் ஊழியனாகவே இருந்தீர்.

த.வி.கூ உருவாகிய போது நீர் தடுப்புக் காவலில் இருந்தீர். நீர் தமிழரசு கட்சிக்கு முறை தவறி உயிர் கொடுக்கும் வரை தமிழர் விடுதலைக் கூட்டணி தான் செயற்பட்டது. பத்து ஆண்டுகளுக்கு மேல் உண்மையை மறைத்து, ஸ்தாபகராலேயே மூடி வைக்கப்பட்ட தமிழரசுக் கட்சியை, அவர் 1977 இல் இறந்து 25 ஆண்டுகளுக்குப் பின், முறையற்ற விதத்தில் புத்துயிர் கொடுத்து மக்களை தப்பான வழியில் கொண்டு சென்றது யார்? 1977 இல் இருந்து 2004 ஆம் ஆண்டு வரை 26 ஆண்டுகள், தமிழ் அரசுக் கட்சி இயங்கியதா? எந்த ஆண்டு நடைபெற்ற மகாநாட்டில் நீங்கள் செயலாளராக தெரிவானீர்கள்? இடைப்பட்ட 26 ஆண்டுகளில் யார் யார் எவ்வெப்போது எந்தெந்தப் பதவியை வகித்தனர் என்பதைக் கூற முடியுமா? முற்று முழுதாக தந்தை செல்வாவை ஏன் அவமதிக்கின்றீர்கள். இல்லாத ஒன்றை ஏன் இருப்பதாகக் கூறி மக்களையும் வெளிநாட்டுத் தூதுவர்களையும் ஏமாற்றுகிறீர்கள்.

முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள்ளே புதைப்பது போல் அண்மையில் பின்வருமாறு கூறியுள்ளீர்கள்.

"ஆரம்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கூட்டமைப்பை நாங்கள் அமைத்திருந்த போது அதில் அங்கம் வகித்த ஓர் கட்சியினால் உயர் நீதிமன்றம் வரை சென்று தேர்தல்களில் சின்னம் கட்சி என்பன முடக்கப்பட்டிருந்தன" என்று. இது உண்மை இல்லையே. செய்யாத ஒரு குற்றத்திற்குப் பொய்யாக என்மீது ஓர் நம்பிக்கை இல்லாத தீர்மானம், புலிகளின் கட்டளைக்கமைய, கொண்டு வந்ததும் நான் கலந்து கொள்ள முடியாத ஓர் இடத்தில், அம்பாறையில் தலைவர் என்ற முறையில் என் அனுமதி பெறாமல், பொதுச்சபை கூட்டம் ஒழுங்கு செய்ததை ஆட்சேபித்து அதன் காரணமாகவே கோட்டுக்கு செல்ல வேண்டிவந்ததென கூற ஏன் பயப்படுகிறீர்கள்?

"இதே நிலைமை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு ஏற்பட்டால்" என்று பயப்படுகிறீர்களாமே இது உங்களுக்கே வேடிக்கையாக இல்லையா? தமிழர் ஐக்கிய முன்னணியோ, தமிழர் விடுதலை கூட்டணியோ உருவாகும் போது அதை உருவாக்கியவர்களில் ஒருவன் நான் அல்லவா நீர் அதில் சம்பந்தப்படவே இல்லையே. தனது கடந்த காலத்தையும் ஏறிவந்த படிகளையும் ஒருவன் மறந்து செயற்படுவானேயானால் அவன் மானிடப்பிறவி எடுத்ததில் அர்த்தமில்லை.

அமிர் அவர்களின் வாரிசு போல, எடுத்ததெற்கெல்லாம் தந்தையையும், அமிரையும் சாட்சிக்கு கூப்பிடும் நீர்,



இன்று தமிழரசுக்கட்சியை மீளப்புதுப்பித்து தமிழர் விடுதலைக் கூட்டணியை கருவறுப்பதன் மூலம் அவருக்குச் செய்யும் துரோகத்தை எண்ணி நான் வேதனைப்படுகின்றேன். கடந்த 10ஆண்டுகளில் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் பெயரை ஒரு தடவையேனும் உச்சரித்தீரா? அவர் எப்படி இறந்தார் என்பதையேனும் சொல்லியிருக்கிறீரா? அக்கொலையை கண்டித்திருக்கிறீரா? உம்மைத் தனது நிழல் என்று தானே அவர் எண்ணியிருந்தார். அதற்கமைய நீர் நடந்தீரா? நடக்கின்றீரா?

# ஜேசி டானியலும் தொலைந்துபோன சிறுவனும்!

- அதிஷா -



நம்முடைய சமூகத்தில் சாதி எப்படி ஆழமாக வேரூன்றி கிடக்கிறது என்பதை வெகு சில காட்சிகளில் குறுக்குவெட்டாக உணர்த்திவிடுகிறுது "செல்லுலோய்ட்". மலையாள சினிமாவின் தந்தை என்று போற்றப்படுகிற ஜே.சி.டானியலின் சினிமா முயற்சிகளைப் பற்றிய படம் இது. சென்ற ஆண்டு மலையாளத்தில் வெளியாகி பல்வேறு விருதுகளை வென்ற திரைப்படம் செல்லுலோய்ட். ஜேசி.டானியலின் பாத்திரத்தில் நடித்த ப்ருதிவிராஜ் மற்றும் படத்தின் இயக்குனர் கமலும் இப்படத்துக்காக பல்வேறு விருதுகளையும் வென்றனர்.

படத்தில், கேரளாவின் முதல் சினிமாவை எடுத்த ஜேசி டானியலின் கதைதான் பிரதானமானதென்றாலும், மல்லையாள சினிமாவின் முதல் நாயகியான ரோசம்மாவின் கதைதான் நம்மை கலங்கடித்து விடக்கூடியது. படத்தின் ஜீவனாகவும் அக்கதைதான் இயங்குகிறது.

டானியல் தன் படத்துக்காக கதாநாயகியை தேடத்தொடங்குகிறான். ஆனால் சினிமாவில் நடிக்க பெண்கள் கிடைப்பது மிகமிக அரிதான காலத்தில், ரோசம்மா என்கிற ஒரு தலித் பெண்ணை தேர்வு செய்கிறான். அவள் ஒரு தெருக்கூத்து நடிகை. சினிமாவென்பதை கற்பனையில் மட்டுமே பார்த்தவள். சினிமாவில் நடிக்கப்போகிறோம் என்பதை அறிந்து தன் தோழியிடம் இதுபற்றிப் பேசுகிறாள். நான் என்ன அவ்ளோ அழகாகவா இருக்கிறேன் என்று கேட்க தோழி ஒரு உடைந்த கண்ணாடியை எடுத்து நீட்டுகிறாள். அதில் ரோசம்மாவின் கறுத்த முகம் தெரிய.. பின்னணியில் சித்தாராவின் குரலில் வருகிற ஏலேலோவும் அதைத்தொடர்ந்து வருகிற "இதுவரை நான் அறிந்ததேயில்லை.." என்கிற பாடல் வரிகளும் கவிதை.

ரோசம்மாவை நாயர் பெண்ணாக நடிக்க வைக்கிறார் டானியல். முதன்முதலாக அவளை எல்லோரும் மதிக்கிறார்கள் என்பதையே நம்ப முடியாமல் ஸ்டுடீயோவுக்குள் திரிகிறாள். எல்லோரும் வீட்டுக்கு உள்ளே சாப்பிட இவள்மட்டும் வெளியே மூலையில் அமர்ந்தபடி சாப்பிடுவதும், டானியல் சொல்கிற எதற்கும் மறுபேச்சு பேசாமல் கண்களை அகலவிரித்தபடி அவனுடைய அடுத்த சொல்லுக்காக காத்திருப்பதும், தான் நடித்ததை தன் தோழியிடம் ஆர்வத்தோடும் சின்ன குறும்போடும் பகிர்ந்துகொள்வதும்.. சூட்டிங் முடிந்த நாளில் தன்னுடைய மகாராணி வேஷம் கலைந்து மீண்டும் பழைய தலித்தாக வாழ வேண்டிய கட்டாயத்தை நினைத்து கலங்கும்போதும்... தன் படத்தை பார்க்க ஊர்மக்கள் அனுமதிக்காமல் தியேட்டருக்கு வெளியே கண்கள் கலங்க உள்ளேயிருந்து "இதோ வந்துவிட்டாள் நம்முடைய நாயகி ரோசி" என்கிற குரலை கேட்டு உடைந்து அழுவதும்... ரோசம்மாவின் காட்சிகள் அத்தனையும் ஹைக்கூ தொகுப்பு.

ரோசம்மாவாக நடித்திருக்கும் சாந்தினியின் அகலமான கண்களும், அசரடிக்கிற புன்னகையும், குழந்தைகளின் முகத்தில் காணும் வெகுளித்தனமும், தனக்கொரு நல்வாழ்வு பிறந்துவிட்டதாக நினைத்து பூரிக்கிற நம்பிக்கையும் எல்லாமே அற்புதம்தான். படத்தின் ஹீரோ நிச்சயமாக ரோசம்மாதான்.

கண்களில் எப்போதும் நம்பிக்கை தெறிப்புடன் இளைஞனாக, முதன்முதலாக கமெராவை கண்டு உற்சாகமடையும்போதும், சென்னைக்கு வந்து சினிமாவை கற்றுக்கொடுங்க என்று தமிழ் தயாரிப்பாளரிடம் கேட்கும்போதும், எல்லாவற்றையும் விட்டுவிட்டு சாதாரண பல்மருத்துவராக இருக்கும்போது பியூசின்னப்பா மீண்டும் டானியலின் மனதில் சினிமா ஆசையை விதைக்க தன்னுடைய கனவுக்கும் வாழ்க்கைக்குமாக தள்ளாடுகையிலும், அனைத்தையும் இழந்து தன் வாழ்வின் கடைசி நொடிகளில் கிடக்கையிலும் ப்ருதிவிராஜ் எவ்வளவு அற்புதமான கலைஞன் என்பதை உணரலாம்.

படம் முழுக்க டானியலையும் ரோசம்மாவையும் பத்திரிகையாளனையும் வருடங்கள் கடந்தாலும் விடாமல் துரத்துகிறது சாதி. டானியல் தன்னுடைய படத்தில் தலித் பெண்ணை நாயர் இனப்பெண்ணாக காட்டிவிட்டார் என்று படத்தை திரையிட விடாமல் தடுத்துவிடுகிறது உயர்சாதி வெறி. திரையிலும் கூட தலித்பெண்ணை ஏற்றுக்கொள்ள முடியாமல் சண்டையிடுகிற சாதிவெறி. ஷூட்டிங்கிலும் கூட தலித் பெண்ணோடு நடிக்கத் தயங்குகிற சாதிவெறி. "மதம் மாறிவிட்டால் மட்டும் நீ உயர்ந்திடுவியா கோலப்பா, சினிமாவில் நடிச்சிட்டா.. புல்லுவெட்ட இங்கதான் வந்தாகணும்" என்பதில் தெறிக்கிற சாதிவெறி.

2000ஆவது ஆண்டுவரை பிராமணர் ஒருவர் எடுத்த "பாலன்" என்கிற படம்தான் மலையாள சினிமாவின் முதல்படம். நாடார் சமூகத்தை சேர்ந்த டானியலை அங்கீகரிப்பதில் இருந்த தயக்கத்துக்கு இதுவும் ஒருகாரணம் என்பதை ஒரு காட்சியில் போகிறபோக்கில் பொட்டில் அடித்தது போல உணர்த்திவிடுகிறார் இயக்குனர் கமல்.

மலையாள சினிமாவின் தந்தைக்கு கேரள சினிமா செய்திருக்கிற ஆகச்சிறந்த மரியாதை இது. அதை எந்த வித சமரசங்களும் இல்லாமல் செய்திருப்பது நிச்சயம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியதும் பாராட்டப்பட வேண்டியதுமாயிருக்கிறது.

# தரையில் இறங்கிய விமானங்கள்!

- வெங்கடேஸ்வரன் -



மனிதன் தன் அடிப்படைத் தேவைகளை மீறி, எப்போதுமே ஏதோவொன்றிற்காய் அலைந்து கொண்டேயிருக்கிறான். அந்த ஏதோவொன்று வேறொன்றுமில்லை... தனக்கு சமூகத்தில் தனி அங்கீகாரம் வேண்டுமென்பதில் குறியாயிருந்து, அதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்கிறான்.

எண்ணிப் பாருங்கள்... எத்தனை பேர் உரிய அங்கீகாரம் பெற்றிருக்கின்றனர்? குறிப்பாய், இளைஞனாயிருந்த கால கட்டத்தில் நம்முடைய இலட்சியங்கள் எதை நோக்கி இருந்தது? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறோம்? துளியும் தொடர்பில்லாது, ஏதோவொரு வெறுமை சூழ, இயந்திர வாழ்க்கை. நான் சொல்வது உண்மை தானே?

இருபத்தைந்து வயது வரை புரட்சியைப் பற்றிப் பேசாதவனிடத்திலும், 25 வயதிற்கு மேல் புரட்சியைப் பற்றி பேசுபவனிடமும் ஏதோவொரு குறையுண்டு என்றான் ஒரு ரஷ்ய அறிஞன். ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னோக்கி என் நினைவுகளை செலுத்துகிறேன். அப்பொழுது நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம். பல்வேறு இலக்கிய வட்டங்களில் தொடர்பு ஏற்பட்டதன் மூலம் எதிர்காலம் பற்றிய கனவுகள் உச்சத்தில் இருந்தன.

தன்னைப்பற்றிய நம்பிக்கை அதிகப்படியாக இளைஞர்களுக்கு உருவாகும் காலம் இளமைப்பருவம்; நானும் விதிவிலக்கல்ல.

பல்வேறு புத்தகங்களைப் படிப்பதில் ஒரு வெறியே ஏற்பட்டிருந்தது. நூலகமே கதியாய் கிடந்து சில புகழ்பெற்ற படைப்புகளைப் படித்ததில், சிந்தனையில் பல்வகை மாற்றங்கள் ஏற்பட்டது.

நண்பர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு சிறு பத்திரிகை ஆரம்பித்தோம். "அறிவு" என்று அதற்கு பெயர் வைத்தோம். ஆசிரியர் குழுவில் நானும் ஒருவனாக இருந்து நடத்தி, போதிய அளவு விற்பனையாகாததாலும், பத்திரிகைக்கான விளம்பரங்கள் வராததாலும் நிறுத்தி விட்டோம்.

ஆனால், அது ஒரு இனிய அனுபவமாக இருந்ததை மறுப்பதற்கில்லை.

ஒருமுறை எங்கள் கல்லூரிக்கு, அங்கு படித்து, நாட்டின் உயரதிகாரியாக உயர்ந்துவிட்ட ஒருவர் தன் குடும்பத்துடன் வந்து, அவர் படித்த வகுப்பறைகளை சுற்றிப் பார்த்து விட்டுப் போயிருந்தார்.

"இனிமேல் இதுபோல் அதிகாரிகள் நம் கல்லூரியிலிருந்து உருவாகுவாரா?" என்று ஆசிரியர்கள் ஏக்கத்தோடு பேசிக் கொண்டிருந்த போது, "ஏன் இவன் இருக்கிறானே... இவன் கண்டிப்பாய் பெரிய ஆளாய் வருவான் பாருங்கள்..." என்றார் கல்லூரி அதிபர்.

பாவம், அவருக்கு நான், "அரியர்ஸ்" வைத்திருந்தது தெரியாது.

எனக்கு மிகவும் பெருமையாகிவிட்டதுடன், என் நம்பிக்கை துளிர்விட்டது.

நண்பர்கள் அனைவரும் இரவு இரண்டு, மூன்று மணி வரை, சமூகத்தின் பல்வேறு கூறுகளை எங்கள் அறிவிற்கு எட்டியவரை அலசுவோம். இச்சமுதாயத்திற்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டும், அதற்கு, பொது வாழ்க்கையில் இறங்க வேண்டும் என்றெல்லாம் கனவுகள் கண்டோம்.

ஒரு முறை வாணியம்பாடியில், கவிக்கோ அப்துல் ரகுமான் மற்றும் பேராசிரியர் அப்துல் காதர் பங்கேற்ற இலக்கிய நிகழ்ச்சி... 10 ஆயிரம் பேர் திரண்டிருந்த அந்தக் கூட்டம் வெகு சிறப்பாக மகிழ்ச்சியுடன் நிறைவுற்றது.

நண்பர்கள் ஐந்து பேரும். விடுதியில் ஓய்வில் இருந்த போது அப்துல்ரகுமான், "நீங்கள் ஐவரும் மிக நன்றாகப் பேசினீர்கள். வருங்காலத்தில், தமிழகமே உங்களை தாங்கப் போகிறது..." என்று புகழ்ந்தார்.

எங்களுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி.

பொது வாழ்வில் ஈடுபட நானும், என் அப்பாவிடம் எவ்வளவோ வாதிட்டுப் பார்த்தேன். அவர் சராசரி நடுத்தரக் குடும்பத்து தகப்பனாராக நடந்து கொண்டார். The Hindu நாளேட்டில், பணியாற்ற வாய்ப்பு வந்த போதும் தடுத்து விட்டார்.

என் கனவுகள் அவருக்குத் தெரியும் என்றாலும், அவை நடைமுறையில் சாத்தியப்படாது என்ற எண்ணத்தில் அவர் உறுதியாக இருந்தார். நான் அப்பா பிள்ளை என்பதால், என் துக்கத்தை மறைத்து, அவர் சொன்னபடியே செய்தேன்.

மூன்றாமாண்டு கல்லூரித் தேர்வுகள் முடிந்ததும், அப்பாவின் மனதை எப்படியாவது சரிக்கட்டலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த சமயம், இரண்டாமாண்டு படிக்கும் போது எழுதிய தேர்வு முடிவுகள் இடியென வெளியாகின; நான் பாஸ் செய்திருந்தேன். உடனடியாக வேலையில் சேர அப்பா வற்புறுத்தினார்; அவ்வாறே செய்தேன்.

இன்று, என்பால் அன்பு கொண்டிருந்த பலரது நம்பிக்கைகள் குலைந்து, என் முகம் தெரியாமல் - இன்னும் சொல்லப் போனால், என் சுயத்தை இழந்து, பத்தோடு பதினொன்றாய், ஆறு மாதத்திற்கு ஒரு முறை வரும் பஞ்சப் படிக்காகவும், ஆண்டுக்கொரு முறை வரும் ஊக்கத் தொகைக்காகவும் காத்திருக்கும் பரிதாப அரசு ஊழியனாக மாறியிருக்கிறேன்.

இது, வீழ்ச்சிதான் என்றே நான் கருதுகிறேன்.

என்னைப் போல் எத்தனை பேர் - இன்னும் பன்மடங்கு திறமையாய் - நம் துறை (வணிக வரித்துறை) யிலும், இன்ன பிறதுறைகள் மற்றும் தொழில்களிலும், நம்முடைய வரிச் சட்டத்தில் வரும் என்ட்ரி 67டி போல் எதிலும் சேராமல், பிறரால் குறிப்பிடப்படும் அளவிற்கும் இல்லாமல் - உயரப் பறந்த, பறக்கத் துடித்த விமானங்கள் இன்று தரையில் கிடக்கின்றன. எத்தனை என்ட்ரி 67டிக்கள் நம் துறையில் இருக்கின்றன என, எனக்குத்தெரியாது.



# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

- டாக்டர்.பிரகாஷ் -

விளையாட்டு என்பது குழந்தைகளுக்கு இயல்பான ஒன்று. நாடு, கலாசாரம் என்கிற பாகுபாடுகள் ஏதுமின்றி உலகில் உள்ள எல்லாக் குழந்தைகளும் விளையாட்டில் வெகு ஆர்வமாக இருக்கும். உலகின் புராதன பொம்மைகள் களிமண், குச்சி, பாறைகளால் செய்யப் பட்டிருந்தன. சிந்து சமவெளிக் காலத்திலிருந்தே (கி.மு.3000-1500) குழந்தைகள் சிறிய தேர் பொம்மைகள், பறவைகள் வடிவில் செய்யப் பட்டிருந்த விசில், குரங்கு பொம்மைகளைக் கொண்டு விளையாடி இருப்பதாக அகழ்வாராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

விளையாட்டு என்பது குழந்தைகளுக்கு மிகவும் அவசியமானதும் நன்மை பயப்பது என்பதையும் பெற்றோர்களாகிய நாம் உணர வேண்டும். விளையாட்டில் குழந்தைகள், தங்களை பிஸியாகவும், களிப்புடனும் வைத்துக் கொள்கின்றனர். நம் குழந்தைகள் சிரித்து, மகிழ்வுடன் விளையாடுவதைப் பார்க்கையில் நமக்கும் அளவற்ற மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்படுகிறது. ஆனால், இந்த விளையாட்டுக்கள், குழந்தையின் வளர்ச்சியில் எத்தகைய இன்றியமையாத பங்கு வகிக்கின்றன என்பதை நாம் அறிவதேயில்லை. கடந்த முப்பது வருடங்களில், குழந்தைகள் விளையாட்டுக்கு செலவிடும் நேரம் வெகுவாகக் குறைந்து உள்ளதாக, குழந்தை நல அறிவியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.



குழந்தையின் வளர்ச்சிக்கு விளையாட்டு ஒரு முக்கிய காரணியாகும். பல்வேறு வகையான திறன்களை (skills) வளர்த்துக் கொள்வதற்கும், பின்னாளில் அவைகளைத் திறம்படப் பயன்படுத்துவதற்கும் விளையாட்டு அவசியம். விளையாட்டின் மூலமே, குழந்தைகள் கற்கின்றன; இந்த உலகைப் புரிந்து கொள்கின்றன; தாம் இந்த உலகில் எவ்வாறு பொருந்துகிறோம்(கவை) என்பதை உணர்கின்றன.

நகர்தல், பார்த்தல், தொடுதல், நகர்த்துதல், ருசி பார்த்தல், நுகர்ந்து பார்த்தல், கேட்டல் போன்ற செயல்பாடுகளின் மூலம் சிறு குழந்தைகள் நிறையக் கற்றுக் கொள்கின்றன. "விளையாட்டு" (play) என்பது, நன்றாக நடக்க, ஓடத் தெரிந்த குழந்தைகளுக்குத்தான் என்று நாம் நினைப்பது முற்றிலும் தவறு. பச்சிளம் குழந்தைப் பருவத்திலேயே, அவர்களுக்கு, அவர்களது செயலின் விளைவு பற்றித் (feedback) தெரிய ஆரம்பிக்கிறது. அழுதால் பால் கிடைப்பதும், ஈர ஜட்டி மாற்றப் படுவதும், பந்தை எறிந்தால், பிடிக்க ஆள் வருவதும், கிலுகிலுப்பையை அசைத்தால் சத்தம் வருவதும் அவர்களுக்கு என்று ஒரு சக்தி இருப்பதைப் பற்றியும், அவர்களால் செயலாற்ற முடியும் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்கின்றனர்.

பின்னர், தவழ்ந்து, நகரத்துவங்கி, வீட்டின் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப்பார்த்து, ஆராய்கின்றனர். சற்று வளர்ந்த குழந்தையானது, பெற்றோர்கள் மற்றும் மற்றக் குழந்தைகளின் செயல்களை நடிப்பதில் (imitate) சமூகத் திறன்களைக் (social skills) கற்கிறது..

பள்ளியில் சேர்ந்தவுடன், விளையாட்டு என்பது சட்ட திட்டங்களுடன் ஒரு ஃப்ரேமுக்குள் இருக்கக் கூடிய, போட்டிகளுடன் கூடிய வேறு ஒரு வடிவம் எடுத்து விடுகிறது. விளையாட்டின் மூலமே பெரும்பாலும் அவர்கள் தங்கள் நண்பர்களை சந்திக்கவும், அவர்களுடன் பழகவும் வழி வகை செய்கிறது.

குழந்தைகளைச் சுற்றி, பல்வேறு விதமான பொம்மைகள் இருப்பது நல்லது.. பொம்மைகளும், விளையாட்டு சாதனங்களும் விலையுயர்ந்தவைகளாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. புத்தகங்கள், க்ரேயான், பென்சில், பேப்பர், பில்டிங் ப்ளொக்ஸ் பொம்மைகள், என்று என்னென்ன முடியுமோ, எல்லாவற்றையும் அவர்களுக்கு வாங்கிக் கொடுங்கள்.

விளையாட்டுகளில் பல்வேறு வகைகள் உண்டு. ஒவ்வொரு விளையாட்டுமே குழந்தை, கற்றுக் கொள்வதற்கு ஒரு வாய்ப்புதான். ஒவ்வொரு வயதிலும், குழந்தைகள் என்னென்ன விளையாட்டுகள் விளையாடுகின்றன, அவைகளை என்னென்ன விதமாக விளையாடுகின்றன, அவைகளின் மூலம் குழந்தைகளுக்கு என்னென்ன பலன்கள் கிடைக்கின்றன என்று விளையாட்டுக்களைப் பற்றி பல்வேறு கோணங்களில் விரிவாகப் பார்க்கலாம்.

(தொடரும்)

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பத்திரிகை பேரவை மேம்பாட்டு சட்டமூல விவாதத்தில், 05-06-2013 அன்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை.



# கடந்த காலத்தை நாசப்படுத்தியதைப் போல் எதிர்காலத்தையும் பாழடித்துவிட வேண்டாம்

**கடந்த காலத்தில் இனமுரண்பாடுகளை உருவாக்கி, அரசியற் தீர்வுக்கு எதிராக மக்களைத் திசை திருப்பி, போரை வளர்த்ததில் இலங்கையிலிருக்கும் பல ஊடகங்களுக்கும் முக்கிய பொறுப்புண்டு. இப்பொழுதும் இவை இதையே செய்கின்றன. ஏனென்றால், இரத்தத்தை இலகுவாகச் சூடேற்றுவதற்கு இனவாதம் நன்றாக உதவி செய்யும். சமூகங்களுக் கிடையில் இடைவெளியை ஏற் படுத்தி, அந்த இடைவெளிக்குள் நின்று தங்களின் நலனைப் பெற்றுக்கொள்ளும் பொறி-முறையை இவை உருவாக்கி வைத்துள்ளன. இது வேதனைக்குரியது.**

**கௌரவ** சபாநாயகர் அவர்களே!

என்னுடைய உரையைச் சில கேள்வி களுடன் ஆரம்பிக்கிறேன்.

இலங்கையில் இன்று ஊடகங்கள் எப்படி இயங்கிக் கொண்டிருக்கின்றன? ஏற்கனவே இந்த ஊடகங்கள் எப்படி இயங்கின? எதிர்காலத்தில் இவை எப்படி இயங்கப்போகின்றன? இந்தக் கேள்விகளை இங்கே நான் எழுப்ப விரும்புகிறேன்.

ஏனென்றால், இலங்கையில் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர் களுக்கும் அச்சுறுத்தல் உள்ளது என ஒரு தரப்பு குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறது. சில சர்வதேச அமைப்புகளின் அறிக்கைகளும் இதைச் சுட்டிக்காட்டுகின்றன.

இதை ஆதாரப்படுத்தும் வகையில், அண்மையில், யாழ்ப்பாணத்தில் கூட ஊடக நிறுவனங்களும் ஊடக வியலாளர்களும் தாக்குதலுக்குள் ளாகியிருந்ததை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதனை நான் ஏற்கனவே கண்டித்து மிருக்கிறேன்.

தாக்குதலை நடத்தியவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு, சட்டத்தின் முன்னே நிறுத்தப்பட வேண்டும். பல ஆண்டு கால அவல வாழ்க்கையின் பிறகு உருவாகி வரும் நல்ல சூழலைக் கெடுக்கும் இந்த மாதிரியான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது.

இது அரசாங்கத்தின் நல்லபல முயற்சிகளை பின்னுக்குத் தள்ளி விடும்.

ஊடகங்கள் தொடர்பாக, ஜனநாயக அடிப்படை தொடர்பாக எங்களுடைய நிலைப்பாடு இதுதான். இதைப் பகிரங் கமாகவே வெளிப்படுத்தி வருகிறோம்.

இதேவேளை இன்னும் பல ஊடகங் கள் பொறுப்பற்ற தனமாக நடந்து கொள்கின்றன. அணைக்க வேண்டிய இனவாதத்தின் தீயில் எண்ணெய் ஊற்றுகிற மாதிரிச் செயற்படுகின்றன.

கடந்த காலத்தை நாசப்படுத்தியதில் ஊடகங்களுக்கும் முக்கிய பொறுப் புண்டு. அதைப்போல சமகாலத்தையும் அவை பாழாக்க முற்படுகின்றன. இந்தப் போக்கை அவை மாற்றிக் கொள்ளவில்லையென்றால் எதிர்கால இலங்கையும் கண்ணீரில்தான் மிதக்கும் என்பது பலருடைய அபிப்பிராயமாகும்.

கடந்த காலத்தில் இன முரண்பாடுகளை உரு வாக்கி, அரசியற் தீர் வுக்கு எதிராக மக்களைத் திசை திருப்பி, போரை வளர்த்ததில் இலங்கை யிலிருக்கும் பல ஊட கங்களுக்கும் முக்கிய பொறுப்புண்டு. இதை அவை மறுக்க முடியாது.

இலங்கையின் யதார்த்தம் என்பது சுமுக நிலையில் சமூகங்கள் இணைந்து வாழ்வதையே வலி யுறுத்துகிறது. இதை மீறும் போது இரத்தக் களரியே நிகழும். இது தான் வரலாறு. இதுதான் நமது கடந்த கால அனுபவமாகவும் உள்ளது.

இந்த யதார்த்தத்துக்கு மாறாக, இனவாதத் தீயை மாறி மாறி வளர்த்து, அதிலே ஆதாயம் தேடின இந்த ஊடகங்கள். இப்பொழுதும் இவை இதையே செய்கின்றன.

ஏனென்றால், இரத்தத்தை இலகுவாகச் சூடேற்று வதற்கு இனவாதம் நன்றாக உதவி செய்யும். சமூகங்களுக்கிடையில் இடைவெளியை ஏற் படுத்தி, அந்த இடை வெளிக்குள் நின்று தங்களின் நலனைப் பெற்றுக்கொள்ளும் பொறிமுறையை இவை உருவாக்கி வைத்துள்ளன.

இது வேதனைக்குரியது.

தமது கடந்த கால அனுபவங்களைப் பாடமாகவும் பட்டறிவாகவும் கொள் ளும் எந்தச் சமூகமும் இப்படியான பிற்போக்குத் தனமான சிந்தனையிலும் செயற்பாட்டிலும் ஈடுபடாது.

வளர்ச்சியடைந்த எந்தச் சமூகங்களும் இத்தகைய கேடுகெட்ட வேலையைச் செய்யாது. அறிவுள்ள எவரும் இத் தகைய தீய செயலை அனுமதிக்க மாட்டார்கள்.

தங்களுடைய சொந்த மக்களுக்குத் தீங்கிழைக்கும் ஊடகங்களும் அர சியல்வாதிகளும் தாங்கள் பெற்ற பிள்ளைகளுக்கே தீங்கிழைக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்வதில்லை.

வரலாறு எத்தனையோ பாடங்களைக் கற்றுத் தந்துள்ளது. ஆனாலும் அதை பிடிவாதமாகவே மறுக்கின்ற மக்கள் திரளாகவும் சமூகங்களாகவும் இலங் கையர்கள் உள்ளனரா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இல்லையென்றால் இத்தனை அழிவு களுக்குப் பிறகும், இத்தனை அவலங் களுக்குப் பிறகும் நிலைமையை பின்னுக்குக் கொண்டு போக யாரும் முயற்சிப்பார்களா? அதற்கு யாரும் அனுமதிப்பார்களா?

இன்றைய சூழல் எதைக் காட்டு கின்றது?

மீண்டும் நாட்டை வன்முறைகளின் காடாக ஆக்குவதற்கே பல தரப்பின ரும் முயற்சிப்பதாகத் தெரிகிறது. ஊட கங்கள் மறுபடியும் புதைகுழிக் கலா சாரத்தை உருவாக்கத் துடிக்கின்றன. இன்று பெரும்பாலான ஊடகங்களின் செய்தி அளிக்கை முறையும் அவற் றின் கண்ணோட்டமும் அப்படித்தான் உள்ளது.

ஒவ்வொருதரப்பும் மற்றத் தரப்பின் மீதே பொறுப்புகளையும் குற்றச்சாட்டு களையும் சுமத்துகின்றன. தங்கள் பொறுப்புகளையும் கடமைகளையும் பற்றி அவை சிந்திப்பதில்லை.

எனவேதான் மக்கள் இன்னும் நெருக் கடிகளில் இருந்து மீள முடியாதிருக் கின்றனர். எந்தப் பிரச்சினைகளும் தீர்க்கப்படாமலிருக்கிறது.

யுத்தத்திற்குப் பின்னரான ஊடகப் பணி என்பது முற்றிலும் வேறுபட்டது.

சர்வதேச அனுபவங்களும் முறையிய-லும் அப்படித்தான் உள்ளன.

யுத்தத்திற்குப் பிறகு, மீள்குடியேற்றம், புனர் நிர்மாணம் அல்லது மறுசீர மைப்பு, நல்லிணக்கம், அமைதித் தீர்வு என்ற வகையில் பணியாற்றுவதாக - பங்காற்றுவதாக அமைய வேண்டும்.

இந்த அடிப்படையில் இலங்கையிலேயே ஐ.நா. உள்ளிட்ட பல பொது அமைப்புகள் அறிவூட்டும் கருத்தரங்குகளையும் பட்டறைகளையும் நடத்தி வருகின்றன. முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான பொறுப்பையும் வழி முறைகளையும் அவை விளக்கு கின்றன.

இவ்வாறு ஊடகங்களின் பொறுப்பு மற்றும் பணிகள் பற்றித்தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினராலும் நடாத்தப்பட்டு வரும் கருத்தூட்டல்களில் ஊடகத் துறையைச் சேர்ந்த பலரும் பங்கேற்று வருகிறார்கள்.

ஆனால் ஊடகங்களில் செயற்படும் போது ஏற்கனவே இருக்கின்ற நிலை மைக்குத் தோதாகவே - தாங்கள் கற் றுக்கொள்ளும் வழிமுறைக்கு மாறா கவே - பழைய பல்லவிகளைப் பாடுகிறார்கள்.

எதற்காக இந்த முரண்நிலை பின் பற்றப்படுகிறது?

யுத்தத்திற்குப் பின்னரான சூழலை வளப்படுத்துவதற்கு - புதியதொரு சூழலை உருவாக்குவதற்கு எத்தனை ஊடகங்கள் சிறப்பாகப் பணியாற்றியுள்ளன?

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உளநிலை, அந்த மக்களுடைய வாழ்க்கை முன்னேற்றம், அமைதிச் சூழலின் பாதுகாப்பு, நிரந்தரத் தீர்வு போன்ற விடயங்களில் இந்த ஊடகங்களின் பொறுப்பும் பங்களிப்பும் எப்படி அமைந்திருக்கின்றன?

இது திருப்தியாக உள்ளதா?

என்னைப்பொறுத்தவரையில் அப்படியில்லை என்றே சொல்வேன்.

ஆனால், அரசாங்கம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களையும் அவர்கள் வாழ்கின்ற பிரதேசங்களையும் அபி விருத்தி செய்வதில் பாரிய முன்னேற் றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த முன்னேற்றத்தை உருவாக்கு வதற்காக நாங்கள் கடுமையாக உழைத்து வருகிறோம்.

மக்களும் பல நன்மைகளைப் பெற்று தங்களை வளப்படுத்தி வருகிறார்கள்.

அபிவிருத்தியில் எட்டப்பட்ட இலக்கின் அளவுக்கு நல்லிணக்கத்திலும் அரசி யற் தீர்விலும் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. இதை உருவாக்கு வதற்கு ஏனைய தரப்பினரின் ஒத்துழைப்புத் தேவை.

ஆனால், ஏனைய தரப்புகளின் சிந்தனை வேறாகவே உள்ளது. யதார்த்தத்துக்கு மாறாகவே பலரும் சிந்திக்கிறார்கள். தங்களுக்குள் இணக் கப்புள்ளிகளை உருவாக்க முடியாத சக்திகள் அதை மறைப்பதற்காக வேறு கதைகளைப் பேசுகின்றன.

ஆகவே, கடந்த காலத்திற்கும் இன்றைய நிலைக்குமிடையில் பெரும் வேறுபாடுகளை நான் காணவில்லை.

இது கவலையைத் தருகிறது.

உண்மையில் கிடைத்திருக்கும் நல்ல வாய்ப்பான இன்னொரு சூழலை நாங்கள் தேவையில்லாமல் இழந்து கொண்டிருக்கிறோம் என்றே சொல்வேன்.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் னர் இலங்கை எப்படி இருந்தது? நாங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண் டிருந்தோம்?

தினமும் சாவுச் செய்திகளும் மரண அபாயங்களுமாக இருந்த காலம் அது.

அரசியல் பிரச்சினைகளும் பொரு ளாதார நெருக்கடிகளும் யுத்தமும் எங் களை வாட்டி வதைத்தன.

ஆனால், இன்று ஒரு புதிய சூழலுக்கு வந்திருக்கிறோம்.

இது சாதாரணமாக ஏற்பட்ட சூழல் அல்ல. பல ஆயிரக்கணக்கான உயிர் களையும் பெறுமதி வாய்ந்த வாழ்க் கையையும் கோடிக்கணக்கான சொத்து களையும் விலைமதிக்க முடியாத இயற்கை வளங்களையும் இழந்தே இந்த நிலை எட்டப்பட்டுள்ளது.

ஆகவே, இதை நாம் பேணிப்பாது காத்து, அடுத்த கட்டத்துக்கு முன் னோக்கி நகர வேண்டும்.

உண்மையில் ஊடகங்களின் பணி இங்கேதான் முக்கியமாக இருக்க வேண்டும்.

அரசியலையும் அரசியற் தரப்புகளை யும் ஊடகங்கள் நெறிப்படுத்தி, நிதா னப்படுத்த வேண்டும். அவற்றுக்கு வழிகாட்ட வேண்டும்.

பொதுமக்களின் குரலாக, ஜனநாய கத்தின் காப்பரண்களாக ஊடகங்கள் தொழிற்பட வேண்டும்.

எட்டப்பட்டுள்ள இந்த நெகிழ்ச்சியான சூழலைப் பாதுகாத்து, கிடைத்திருக் கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தி, புதிய எதிர்காலத்தை உருவாக்கவும் அதை மேம்படுத்தவும் ஊடகங்கள் பங்களிக்க வேண்டும்.

அப்படிச் செயற்பட்டிருந்தால் யுத்தத் திற்குப் பின்னரான கடந்த நான்கு ஆண்டுகாலத்தில் மிகப் பெரும் கருத்தியல் மாற்றத்தை நாம் எட்டி யிருந்திருப்போம். அந்த மாற்றம் எங்கள் சூழலிலும் சிந்தனையிலும் பல மாற்றங்களைத் தந்திருக்கும்.

ஆனால், அப்படியான நிலைமை தெரியவேயில்லை.

பல ஊடகங்கள் கடந்த, 60 களில் 70 களில், 80 களில், 90 களில் இருந் ததைப்போலவே சிந்திக்கின்றன. அதே காலத்தில் செயற்பட்டதைப்போலவே செயற்படுகின்றன.

தாம் நம்புகின்ற அரசியல் நியாயப் பாட்டினை ஆதரிப்பது வேறு. பொதுத் தளத்தில் பணியாற்றுவது வேறு. தமது அரசியலுக்கு அப்பால் உள்ளதை யெல்லாம் ஏற்கமுடியாது எனச் செயற் படுவது ஜனநாயக விரோதமானது.

ஜனநாயக அடிப்படை என்பது மற்றவற்றுக்கும் இடமளிப்பதாக இருக்க வேண்டும். பிறருக்குரிய இடம், பிறருக்குரிய மதிப்பு, பிற கருத்துகளுக்கும் நிலைப்பாடு களுக்கும் உரிய அங்கீகாரத்தை வழங்குவதாகும்.

(17ஆம் பக்கம் பார்க்க)



நேற்றுமுன்தினம் நயினாதீவு வங்களாவடிப்பகுதி கடற்கரையோரமாக இறந்த நிலையில் கரையொதுங்கிய இராட்சத மீனினைக் காணலாம். (பா)

# புத்தூர் வடக்கு கிராமத்தின் அபிவிருத்தி மேம்பாட்டு ஆராய்வு



புத்தூர் வடக்கு கிராமத்தின் அபிவிருத்தி, மேம்பாடு தொடர்பிலான கலந்துரையாடல் வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் பிரதேச இணைப்பாளருமான ஐங்கரன் தலைமையில் நடைபெற்றது.

வலி.கிழக்கு விவசாய அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் புத்தூர் வடக்கு பகுதியின தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவர், கடந்த காலங்களில் தமிழ் மக்கள் பட்ட துன்ப துயரங்களுக்கு காரணமாக இருந்தவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரே, எனவே இனிவரும் காலங்களில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரிவரப்பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கிராம உத்தியோகத்தர் குணசீலி, சமுர்த்தி உத்தியோகத்தர் பத்மநாதன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அச்சுவேலி பிரதேச இணைப்பாளர் தர்மராஜா, வலி.கிழக்கு விவசாய அபிவிருத்திச்சபைத் தலைவர் தம்பிநாதன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

## தலங்காவல் பிள்ளையார் வருடாந்த மகோற்சவம்

(அச்சுவேலி)

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவமானது எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம் பெறவுள்ளன.

இத்திருவிழாக்களில் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 28ஆம் திகதி வெள்ளிக் கிழமை தீர்த்த உற்சவமும் இடம் பெறவுள்ளதாக ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். எனவே பக்த அடியார்கள் அனைவரையும் விழாக்களில் கலந்து விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப்பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளனர். (85)

## பாடசாலை செல்லாதோர் குறித்து கிராம அலுவலருக்கு அறிவிக்கலாம்

(வரணி)

யாழ். குடாநாட்டில் பாடசாலை சென்று கல்வி கற்க கூடிய வயதுடையவர்கள் வீடுகளில் முடங்கி இருப்பவர்கள் அல்லது வேலைகளுக்கு செல்பவர்களாயின் இது தொடர்பாக கிராம அலுவலரிடம் முறையிட முடியும் இதனால் அவர்களை பாடசாலைக்கு அனுப்பி அவர்களின் எதிர் காலத்திற்கு நல்ல வழியேற்படுத்த முடியும்.

கிராமங்களில் பாடசாலை செல்லாத சிறுவர்கள் இருப்பின் அந்தப்பிரிவு கிராம அலுவலருக்கு அறிவித்தால் கிராம அலுவலர் ஊடாக உரியவர்களுக்கு தெரியப்படுத்தி அந்த சிறுவர்களின் எதிர்காலவாழ் விற்கும் அறிவாற்றலுக்கும் வழி ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. (150)

## சுற்றாடல் தினத்தில் சிரமதானப்பணி

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கோப்பாய் மத்தி விவசாய சம்மேளன அங்கத்தவர்களால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு வளாகம் சிரமதான மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

கோப்பாய் மத்தி விவசாய சம்மேளன தலைவர் எம்.சண்முகலிங்கம் தலைமையில் நடந்த இச்சிரமதானத்தில் கலந்துகொண்ட அங்கத்தவர்களுக்கு முள்ளுவிறாண்டிகள் கொடுக்கப்பட்டுள்ளன. (08)

## மண்டைதீவு பூம்புகார் கண்ணகை அம்மன் பொங்கல் விழா

மண்டைதீவு பூமாவடி பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.


17ஆம் திகதி திங்கட்கிழமை ஆனி உத்தர தினத்தில் பகல் 12.00 மணிக்கு ஆனி உத்தர பூசைகள் நடைபெறும்.

21ஆம் திகதி வெள்ளிக் கிழமை பகல் 3.00 மணிக்கு ஊர்வலமும், முத்தரிசித் தண்டலும் நடைபெறும். 24ஆம் திகதி திங்கட்கிழமை வருடாந்த பொங்கல் விழா நடைபெறும். முற்பகல் 11.00 மணிக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று மாலை 6.00 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி விசேட ஆராதனைகள் இடம் பெற்று தொடர்ந்து அதிகாலை 2.00 மணிக்கு தீ மிதித்தலும், காலை 4.00 மணிக்கு வழிவெட்டலும் நடைபெறும்.

01.07.2013 திங்கட்கிழமை எட்டாம் மடைவரை தினமும் ஆலயத்தில் பகல் 12.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். ஆலயத்தில் சென்ற ஆண்டு வரவு செலவு அறிக்கை பொங்கலன்று வாசிக்கப்படும். (21)



பூநகரி கால்நடை அபிவிருத்திச்சங்கத்தால் பூநகரி பண்ணையாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் பசுப் பாலில் ஒருபகுதி தினமும் யூஸ் செய்யப்பட்டு விற்பனை நடைபெற்றுவருகிறது. பசுப்பாலில் உற்பத்திசெய்யப்படும் யூசுக்கு பாடசாலை மாணவர்கள் மத்தியில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (112)



# 2013 - 2014 குரு பெயர்ச்சி பலன்கள்

விருச்சிகம்:



## விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை

தனக்கென தனிப்பாதை அமைத்துக் கொள்பவர் நீங்கள். குருபகவான் 28.5.13 முதல் 12.6.14 வரை 8-ஆம் வீட்டில் மறைவதால், உங்கள் இலக்கை எட்டிப்பிடிக்க கடும் முயற்சி தேவை. தம்பதிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும் அவ்வப்போது விவாதங்களும் எழும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். சில வேலைகளை நீங்களே முடிப்பது நல்லது. பழைய கடன் பிரச்சினை மனதை வாட்டும். ஸ்திர ராசியில் பிறந்த உங்களுக்கு குரு உபய வீட்டில் மறைவதால் நல்லதே நடக்கும்.

குரு 2-ஆம் வீட்டைப் பார்ப்பதால் வர வேண்டிய பணம் கைக்கு வரும். குடும்பத்தில் நல்லது நடக்கும். மனைவிவழி உறவினர் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். புது வீட்டு திட்டம் கூடிவரும். பூர்வீகச் சொத்தை மாற்றி, இரசனைக்கேற்ற வீடு வாங்குவீர்கள். ஆபரணங்கள் சேரும். குரு உங்கள் சுக ஸ்தானத்தைப் பார்ப்பதால் சோர்வு நீங்கும். தாயாரின் உடல்நிலை சீராகும். தாய்வழி சொத்துப் பிரச்சினை தீரும்.

**குருபகவானின் சஞ்சாரம்:** 28.5.13 முதல் 25.6.13 வரை உங்கள் ராசிநாதனான செவ்வாயின் மிருகசீரிட நட்சத்திரத்தில் குரு செல்வதால் தோற்றப்பொலிவு, பேச்சில் கம்பீரம் பிறக்கும். குடும்ப வருமானத்தைப் பெருக்குவீர்கள். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பாதி பணம் தந்திருந்த சொத்துக்கு மீதி பணமும் தந்து பத்திரப்பதிவு செய்வீர்கள்.

26.6.13 முதல் 28.8.13 வரை; 27.1.14 முதல் 12.4.14 வரை ராகுவின் திருவாதிரை நட்சத்திரத்தில் குரு செல்வதால் மனோபலம் அதிகரிக்கும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். விழாக்களில் முதல் மரியாதை கிடைக்கும். பூர்வீகச் சொத்தை சீர் செய்வீர்கள். புது வேலை கிடைக்கும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். மனைவியின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றுவீர்கள்.

29.8.13 முதல் 26.1.14 மற்றும் 13.4.14 முதல் 12.6.14 வரை உங்களின் தன-பூர்வ புண்யாதிபதியான குரு, தனது நட்சத்திரமான புனர்பூசத்தில் செல்கிறார். எதிலும் வெற்றி கிட்டும். வி.ஐ.பி-களின் நட்பு கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். மகளுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வி, உத்தியோகம் அமையும். மகனுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும்.

13.11.13 முதல் 26.1.14 வரை குரு புனர்பூசத்திலும், 27.1.14 முதல் 11.3.14 வரை திருவாதிரையிலும் வக்ர கதியில் செல்வதால், உங்களின் பலவீனங்களை மாற்றிக்கொள்ள முடிவு எடுப்பீர்கள். பிரிந்திருந்தவர் ஒன்று சேருவர். பெரிய பதவி, பொறுப்புகளுக்கு பரிந்துரைக்கப் படுவீர்கள். சேமிக்கத் தொடங்குவீர்கள். இளைய சகோதரி யின் திருமணத்தை நடத்துவீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் கொடுத்த வாக்குறுதியை கடைசி நேரத்தில் நிறைவேற்றுவீர்கள்.


வியாபாரத்தில் புதிய அனுபவங்கள் கிடைக்கும். மறைமுகப் போட்டிகள் அதிகரிக்கும். எவருக்கும் அதிக முன் பணம் தர வேண்டாம். சந்தை நிலவரத்தை உன்னிப்பாகக் கவனியுங்கள். சொந்த இடத்துக்கு கடையை மாற்றுவீர்கள். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். வங்கிக் கடன் தவணையை செலுத்துவதில் தாமதம் ஏற்படும். பங்குதாரர்களின் கெடுபிடிகள் விலகும். மூலிகை, தேங்காய், எலெக்ட்ரிக்கல்ஸ், துரித உணவகங்களால் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிச்சுமை கூடும். உங்களுக்கு எதிராக செயல்பட்ட அதிகாரி, இனி ஆதரிப்பார். சட்டத்துக்குப் புறம்பாக எவருக்கும் உதவ வேண்டாம்.

கன்னிப்பெண்கள், உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். திருமணம் தாமதமாகி முடியும். மாணவர்களுக்கு போட்டிகளில் பரிசு கிடைக்கும். ஆசிரியர்கள் ஆதரிப்பர். கலைத் துறையினருக்கு பெரிய நிறுவனங்களில் இருந்து வாய்ப்பு வரும். அரசியல்வாதிகள், எதிர்ப்புகளைத் தாண்டி சாதிப்பர்.

மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி, செலவு மற்றும் அலைச்சலைத் தந்தாலும், உங்களை மகிழ்ச்சிப் படுத்துவதாகவும் அமையும்.


**பரிகாரம்:** முதியோர் இல்லங்களுக்கு உதவுங்கள். வளம் பெருகும்.

(தொடரும்....)



யாழ்.மாவட்டத்தில் 550 இளைஞர் கழகங்களில் முதலாம் இடத்தை கைதடி சரஸ்வதி இளைஞர் கழகம் பெற்றுக் கொண்டது. முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கைதடி இளைஞர் கழக அங்கத்தவர்களைக் காணலாம். (அனி)

# அதிக காற்று வீசும் அபாயம்; கடற்றொழிலாளர்களுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

மன்னார் - கொழும்பு மற்றும் காலி ஊடாக பொத்துவில் வரையான கடற்பகுதியில் அதிக காற்று வீசுவதுடன், கொந்தளிப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாக இந்த பகுதியில் உள்ள மீனவர்கள் கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம் என்று, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் கடுமையான காற்றின் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. ஹிக்கடுவை தொடரூந்து பாதையில் மரம் ஒன்று முறிந்து விழுந்ததில், கடலோர தொடரூந்து சேவை முற்றாக பாதித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், வரகாபொலை பகுதியில் மரம் ஒன்று முறிந்து விழுந்ததில், கண்டி - கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து பாதித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் உள்ளக பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு சுமார் 80 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மன்னாரிலிருந்து கொழும்பு காலி ஊடாக பொத்துவில் வரையிலும் மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை வரையிலும் உள்ள கடற் பிரதேசங்களில் கொந்தளிப்பு ஏற்படக்கூடிய சாத்தியமும் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

இதன் காரண்மாக கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# வான்படைக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிரந்தர வான்படை வீரர்களுக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு, கோர்ப்பட்டுள்ளன. இதில் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

வானூர்தி பொறியியல், பொது பொறியியல், மின்னியலும் தொலைத்தொடர்பும், தாதி உதவியாளர், வழங்குநர், முகாமைத்துவ உதவியாளர், வான் தொழில்பாடுகள், பொலிஸ், சங்கீத வாத்திய இயக்குநர் ஆகிய பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகள் விண்ணப்பிக்கலாம்.

கல்வித்தகைமைகள், சேவை நிபந்தனைகள், மொழி, கொடுப்பனவு, சம்பளம், விண்ணப்பிக்கும் முறை, நேர்முகப்பரீட்சை போன்ற விபரங்களை 07.06.2013 அரச வர்த்தகமானியை பார்வையிடலாம்.

விவாகமாகாத 18இற்கும் 23 வயதுதிற்கும் உட்பட்டவர்கள் 5அடி 5அங்குலம் உயரமுள்ளவர்கள் விண்ணப்பிக்கப் தகுதியானவர்களாவர். நேர்முகப் பரீட்சை 2013, ஜீன் மாதம் 12, 14, 15, 17, 18ஆம் திகதிகளில் நடைபெறும். (105)

# விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சிறந்த நல்லொழுக்கமுடைய, சரீர சௌவாக்கியமுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்.

வயது 18இற்கும் 45இற்கும் இடைப்பட்டவர்கள் 17.06.2013 இற்கு முன் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டும். பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். உதவிச் செயலாளர், மொழி உத்தியோகத்தர், இணைப்பு உதவியாளர், மொழிபெயர்ப்பாளர், முகாமைத்துவ உதவியாளர், சாரதி மற்றும் காரியாலய உதவியாளர், மேலதிக விபரங்களுக்கு அரசமொழிகள் ஆணைக்குழு' 341/7, கோட்டே வீதி, இராஜகிரிய என்னும் முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம். (105)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

(வரணி)

வரணியில் முன்பள்ளி ஒன்றுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடவரணி கௌரிபாலன் முன்பள்ளியிலுள்ள சிறுவர்கள் விளையாடிமகிழ கடந்த வெள்ளிக்கிழமை ஒரு தொகை விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. (150)

# இளைஞர் சேவைப் பணியில் மாவட்டரீதியில் சிறந்தவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இளைஞர்சேவையில் சிறந்தவர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சிறந்த இளைஞன் (பிரதேச ரீதியாக)

சண்டிலிப்பாய் எஸ்.விஜிதா, கோப்பாய் கு.கிருபானந்தன், காரை நகர் பிரதீபன், யாழ்ப்பாணம் பெ.செபிமின், நெடுந்தீவு ரஜீவ் பிரகாஸ், தெல்லிப்பளை ஆ.சுதன், உடுவில் ர.நிசாந்தினி, நல்லூர் ரி.ஞானதீபன், ஊர்காவற்றுறை எஸ்.லோகராஜ், சங்கானை பா.தயாளன், வேலணை பா.ஜனார்த்தனன், சாவகச்சேரி ந.கவிதரன், பருத்தித்துறை கு.சத்தியகிருபன், மருதங்கேணி அ.ஆனந்தபவன், கரவெட்டி சிவச்செல்வன்.

சிறந்த இளைஞன் (மாவட்ட ரீதியாக)

எஸ்.செந்தில்குமரன்

சிறந்த இளைஞர் கழக சம்மேளனம் (பிரதேச ரீதியாக)

முதலாமிடம் - இளைஞர் கழக சம்மேளனம், சாவகச்சேரி, இரண்டாமிடம் - இளைஞர் கழக சம்மேளனம், சண்டிலிப்பாய், மூன்றாமிடம் - இளைஞர் கழக சம்மேளனம், காரைநகர்.

யாழ்.மாவட்டத்தின் சிறந்த இளைஞர் கழகங்கள்

முதலாமிடம் - கைதடி மேற்கு சரஸ்வதி இளைஞர் கழகம், இரண்டாமிடம் - சுதுமலை வடக்கு இளைஞர் கழகம், மூன்றாமிடம் - நீர்வேலி வடக்கு இளைஞர் கழகம்.

யாழ்.மாவட்டத்தின் சிறந்த இளைஞர் சேவை அதிகாரி

இ.யுகராஜ் நல்லூர் பிரதேச செயலர் பிரிவு

யாழ்.மாவட்டத்தின் சிறந்த தொண்டர் இளைஞர் சேவை அதிகாரி

எஸ்.ரி.விமலதாஸ் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு

எஸ்.சபேசன் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு

யாழ்.மாவட்டத்தின் சிறந்த இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

பே.சுபாகர் சண்டிலிப்பாய் பிரதேச செயர் பிரிவு, ப.இராஜ சோபனா யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு.

# இருளில் மூழ்கிக் கிடக்கும் வளலாய் நெசவுசாலை வீதி

(அச்சுவேலி)

வளலாய் நெசவுசாலை வீதியில் மின்விளகுகள் எவையும் பொருத்தப்படாத நிலையில் வீதியானது இருளில் மூழ்கிக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீதியானது பிரதான போக்குவரத்து வீதியாக காணப்படுவதால் இரவில் இந்த வீதியால் பயண்ம் செய்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதோடு விபத்துக்களும் எற்படும் அபாய நிலை காணப்படுகிறது.

அத்துடன் இந்த வீதியால் தமது விவசாய நிலங்களுக்குச் செல்லும் விவசாயிகள் அதிகாலை வேளையில் தமது பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு செல்வதிலும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றார்கள். அத்துடன் வெளி இடங்களுக்கு வேலைக்குச் சென்று திரும்புவோரும் பல்வேறு அவல நிலையை எதிர்கொள்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இந்த வீதி விளக்குகளைப் பொருத்தி பயணிகளின் போக்குவரத்தை இலகுபடுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

## கிளிநொச்சியில் வர்த்தக சந்தை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வர்த்தகச் சந்தை வரும் யூலை மாதம் 20,21,22 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மகா வித்தியாலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட செயலக அதிகாரிகள் வணிகர் கழகத்துடன் இணைந்து ஈடுபட்டுள்ளனர். இலங்கை இந்திய வணிகர்கள் இணைந்து இந்த வர்த்தகச் சந்தையில் கலந்து கொள்ள உள்ளனர்.

கைத்தொழில் இலத்திரனியல் பொருட்கள் உட்பட பலவித பொருட்கள் சந்தைப்படுத்தப்பட உள்ளன. (90)

# இறுப்பிட்டி வீரகத்தி விநாயகர் இன்று புதிய சித்திரத்தேரில் பவனி

(வேலணை)

புங்குடுதீவு இறுப்பிட்டி கிராமத்தில் பெரியபுலம் என்ற இடத்தில் அமைந்துள்ள வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ தேர் உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது.

புதிய சித்திரத் தேரில் வீரகத்தி விநாயகர் வீதியுலா வரவிருக்கின்றார். உள்ளூர் வெளியூர் அன்பர்களினது நிதியுதவியுடன் இந்த புதிய சித்திரத் தேரானது 55 இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டு கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெள்ளோட்டம் விடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

## உயிரியல்

ஆசிரியர் :- T. கஜேந்திரன்

1) ஒரு கொள்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து,
1) அது ஒரு விதியாகிறது.
2) அதனைப்பற்றி மேலும் ஆராய்ச்சிகள் நடாத்தவேண்டியதில்லை
3) அதனை ஒருபோதும் மாற்ற முடியாது.
4) அது புதிய அறிவினால் தொடர்ந்தும் பரிசோதனைக்குள்ளாகும்.
5) வேறு கொள்கைகளை நிறுவுவதற்கு அது நம்பகமான அடிப்படையாகும்.

2) பின்வருவனவற்றில் எது Steroid ஓமோன் ஒன்றின் உற்பத்தியுடன் தொடர்புடையது?
1) இலைசோசோம் 2) கொல்கியுபகரணம்
3) அழுத்தமான அக கலவுருச்சிறுவலை 4) இழைமணி
5) அழுத்தமற்ற அக கலவுருச்சிறுவலை

3) கலங்களைப்பற்றிய கீழ்க்காணும் கூற்றுக்களுள் சரியானது.
1) சகல கலங்களும் கருக்களை உடையன.
2) கலங்கள் அனைத்தும் ஏறத்தாழ ஒரே பருமனுடையன.
3) கலமென்சவ்வில் புரதங்கள் தொடர்ச்சியான படையை உருவாக்குவதனால் கலமென்சவ்வில் பாய்மத்தன்மை ஏற்படுத்தப்படுகின்றது.
4) கலங்கள் யாவும் நுண்ணியவை.
5) ஒரு கலத்தின் கட்டமைப்பு அதன் தொழிற்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது.

4) உயர் தாவரத்தின் ஒரு கலத்தில் அதிகூடிய ATP மூலக்கூறுகள் தோற்று விக்கப்படுவது
1) கிளைக்கோ பகுப்பில் 2) கிரெப்பீன் வட்டத்தில்
3) இலத்திரன் இடமாற்றுகை சங்கிலியில்
4) ஒளிச்சுவாசத்தில் 5) ஒளித்தாக்கங்களில்

5) மிக அதிக எண்ணிக்கையான பொதுச்சிறப்பியல்புகளைக் கொண்ட Taxon பின்வருவனவற்றுள் எது?
1) இனம் 2) சாதி
3) குடும்பம் 4) பேரிராட்சியம்
5) இராட்சியம்

6) ஒளித்தொகுப்பின்போது ஒட்சிசன் தோற்றுவிக்கப்படுவது,
1) உள்ளெடுக்கப்பட்ட காபனீரொட்சைட்டில் இருந்து காபன் அகற்றப்பட்டு, காபோவைதரேற்று தொகுக்கப்படும்போது,
2) அகத்துறுஞ்சப்படும் நீர்மூலக்கூறின் ஐதரசன், காபனீரொட்சைட்டுடன் சேர்ந்து காபோவைதரேற்று தொகுக்கப்படும்போது,
3) நீர்மூலக்கூறுகள் நீர்ப்பகுப்புக்கு உள்ளாகி, இலத்திரன்களை ஒளித்தொகுதி I இற்கு வழங்கும்போது,
4) உள்ளெடுக்கப்பட்ட காபனீரொட்சைட்டில் இருந்து காபன் அகற்றப்பட்டு RUBP உடன் இணையும்போது,
5) நீர்மூலக்கூறுகள் நீர்ப்பகுப்புக்கு உள்ளாகி, இலத்திரன்களை ஒளித்தொகுதி II இற்கு வழங்கும்போது,

7) பின்வருவன தாவரங்கள் எனும் இராட்சியத்தின் அங்கத்தவர்களில் காணப்படும் சில இயல்புகளாகும்.
A) ஒருமடிய பல்லினவித்திகள்
B) கருக்கட்டலுக்கு வெளிப்புறநீரில் தங்கியுள்ளன.
C) ஒளித்தொகுப்பு செய்யாத புணரித்தாவரங்கள் காணப்படுதல்.
D) கலனிழையங்கள் அற்றவை.
E) சுயாதீனமான வித்தித்தாவரங்கள்.

மேற்குறித்தவற்றுள் Cycas களில் காணப்படும் இயல்புகளாவன,
1) C, E மாத்திரம் 2) A,C,E மாத்திரம்
3) A,C,D மாத்திரம் 4) B,D,E மாத்திரம்
5) B,C,E மாத்திரம்

8) Pylum Mollusca வில் நத்தைகள் உள்ளடக்கப்பட்டிருப்பது,
1) Gastropoda க்களில்
2) Bivalvia க்களில்
3) Polyplacophora க்களில்
4) Cepalopoda க்களில்
5) Crustacea க்களில்

9) விலங்கு இராட்சியத்தின் அங்கிகளில் காணப்படும் கழிவகற்றும் கட்ட மைப்புக்கள் சில பின்வருமாறு
A) உடல் மேற்பரப்பு
B) சுவாலைக்கலம்
C) உணர்கொம்புச்சுரப்பி
D) உப்புச்சுரப்பி
E) வியர்வைச்சுரப்பி
F) கழிநீரகம்
முள்ளந்தண்டு விலங்குகளினால் கழிவகற்றலுக்கு பயன்படுத்தப்படுபவை
1) A மாத்திரம் 2) D,E மாத்திரம்
3) D,E,F மாத்திரம், 4) B,C,D மாத்திரம்
5) A,D,E,F மாத்திரம்

10) பக்றீரியாக்கலங்கள் தம்மை பெருக்கிக்கொள்வது பிரதானமாக,
1) தூளிய வித்திகளின் மூலம்
2) அரும்புதல் மூலம்
3) ஒடுக்கற்பிரிவின் மூலம்
4) இருகூற்றுப்பிளவின் மூலம்
5) இலிங்கவித்திகளை தோற்றுவிப்பதன் மூலம்

11) உரியக்கொண்டுசெல்லல், காழ்க்கொண்டுசெல்லலில் இருந்து வேறுபடு கின்றது. ஏனெனில்,
1) உரியக்கொண்டுசெல்லலில் சுக்குரோசு மாத்திரம் கொண்டு செல்லப்பட, காழ்க்கொண்டுசெல்லலில் நிரும் கனியுப்பும் கொண்டு செல்லப்படும்.
2) உரியக்கொண்டுசெல்லல் அமுக்கப்பாச்சலிலும், காழ்க்கொண்டு செல்லல் ஆவியுயிர்ப்பு, நீரழுத்தப்படித்திறனிலும் தங்கியிருக்கும்.
3) உரியக்கொண்டு செல்லல் உயிரற்ற இழையம் மூலமும், காழ்க்கொண்டு செல்லல் உயிருள்ள இழையம் மூலமும் இடம்பெறும்.
4) உரியக்கொண்டு செல்லல் ATP சக்தியை பயன்படுத்தும் உயிர்ப்பற்ற செயன்முறையாகும். காழ்கொண்டுசெல்லல் ATP சக்தியை பயன்படுத்தும் உயிர்ப்பானசெயன்முறையாகும்.
5) உரியக்கொண்டு செல்லல் ஒருதிசை வழியானது, காழ்க்கொண்டு செல்லல் இருதிசை வழியானது.

12) பின்வருவனவற்றுள் அதிகளவான உயிர்ப்பல்வகைமையைக் காட்டக்கூடிய தும், அதிக எண்ணிக்கையான இனங்களைக் கொண்டதுமான கணம் எது?
1) நெமற்றோடா 2) எக்கைனோடேமேற்றா
3) மொலாஸ்கா 4) அனலிடா
5) ஆத்திரோபோடா

13) வெவ்வேறு வகையான மூலக்கூறுகள், வெவ்வேறு வீதங்களில் முதலுருமென்சவ்வின் ஊடாக செல்கின்றன. மனித சதையியினால் இன்சுலின் ஓமோன் சுரத்தல் அதிகரிக்கும் போது, எந்தக்கூறு முதலுருமென்சவ்வின் குறுக்கே, குழியவுருவுக்கு மிக அதிகளவில் செல்லும் என எதிர்பார்ப்பீர்?
1) புரதம் 2) கிளைக்கோசன்
3) குளுக்கோகான் 4) குளுக்கோசு
5) மாப்பொருள்

14) மனிதனின் சுவாசச்செயன்முறையில், வற்றுப்பெருக்குக் கனவளவு என்பது,
1) சாதாரண உட்சுவாசத்தின்போது, நுரையீரல்களுக்குள் எடுக்கப்படும் வளியின் கனவளவு.
2) ஒரு சாதாரண வெளிச்சுவாசத்தின் பின்னர் நுரையீரல்களில் தங்கியிருக்கும் வளியின் கனவளவு.
3) ஆழமான உட்சுவாசத்தின்போது, நுரையீரல்களுக்குள் எடுக்கப்படும் வளியின் கனவளவாகும்.
4) ஓர் ஆழமான வெளிச்சுவாசத்தின்போது நுரையீரல்களிலிருந்து வெளியகற்றப்படும் வளியின் கனவளவாகும்.
5) சாதாரண மூச்சுவிடுதலின்போது நிமிடத்துக்கு நுரையீரல்களுக்குள் உள்ளெடுக்கப்படும் வளியின் கனவளவாகும்.

15) புன்வெற்றிடப் பாதையூடான நீரின் அசைவு பிரதானமாக நடைபெறுவது,
1) பரவல் மூலமாக 2) ஆவியாதல் மூலமாக
3) திணிவுப்பாச்சல் மூலமாக 4) பிரசாரணம் மூலமாக
5) உட்கொள்ளுகை மூலமாக

16) $C_4$ தாவரங்களின் இருட்தாக்கம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது
1) முதல் காபனீரொட்சைட்டு வாங்கியாக RUBP தொழிற்படுகின்றது.
2) காபனீரொட்சைட்டு பதித்தலின் முதல் விளைவாக 3C Oxalo Acetic Acid உருவாக்கப்படும்.
3) இதன்போது இரண்டு தடவைகள் PEP இனால் காபனீரொட்சைட்டு பதிக்கப்படுகின்றது.
4) இது உயர்ந்த ஒளிச்செறிவிலும், தாழ் காபனீரொட்சைட்டு செறிவிலும் வினைத்திறனானது.
5) இங்கு ஒரு தடவை மாத்திரமே காபனீரொட்சைட்டு பதிக்கப்படுகின்றது.

17) மனிதனின் சுவாசத்தொகுதி தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
1) மூக்குக்கால்வாயானது நீள்பக்க பிரிசுவரினால் இரண்டு அறைகளாக பிரிக்கப்பட்டதாகவிருக்கும்.
2) சுவாசப்பைகள் கூம்புருவானவையாக காணப்படும் அதேவேளை சோடியானதாகவும் காணப்படும்.
3) தொண்டையில் சீதம் சுரக்கும் கலங்கள் காணப்படுவதில்லை.
4) இதன் வாயுப்பரிமாற்ற மேற்பரப்பாக சிற்றறைகளும், சிற்றறைக்கான்களும் தொழிற்படும்.
5) வாதனாளிகளில் C வடிவ கசியிழையம் காணப்படும் அதேவேளை, சுவாசப்பை சிறுகுழாய்களில் வளையவுருவான கசியிழையம் காணப்படும்.

18) பின்வருவனவற்றுள் எதன் அசைவினால் ஒலிக்குரிய நரம்புக்கணத்தாக்கம் உருவாக்கப்படுகின்றது?
1) இரெசுனரின் மென்சவ்வு 2) சுற்று நிணநீரின் அசைவினால்
3) போர்வை மென்சவ்வு (Tectorial Membarance)
4) தோற்பையில் உள்ள பொட்டு 5) சிறுபையின் முகடு

19) மனிதனில், உடல் அனுசேபத்தின் மூலம் உருவாகும் நைதரசன் கழிவுப் பொருட்கள் பெரும்பாலும் எவ்வாறு வெளியேற்றப்படுகின்றது,
1) யூரிக் அமில பளிங்குகளாக,
2) புரதமடங்கிய கூறுகளாக,
3) குறைந்த நச்சுத்தன்மையான யூரியாவாக
4) காபனீரொட்சைட்டு வாயுவாக,
5) மிகவும் நச்சுத்தன்மையான அமோனியாவாக,

20) இலிங்கமுறை இனப்பெருக்கத்தில்,
1) அகக்கருக்கட்டல் மூலம் மட்டுமே புணரிகள் இணைவதனால் இருமடியமான நுகம் உருவாக்கப்படும்.
2) ஒடுக்கற்பிரிவு கலப்பிரிவுச் செயன்முறை அத்தியாவசியமற்றதொன்றாகும்.
3) பிறப்புரிமை மாறல்கள் ஏற்பட்டு கூர்ப்பு நிகழும்.
4) இரண்டு வெவ்வேறு இன அங்கிகள் பங்கெடுக்கின்றன.
5) இழையுருப்பிரிவு கலப்பிரிவுச் செயன்முறையானது முக்கிய கலப்பிரிவுச் செயன்முறையாகக் காணப்படும்.

21) நொதியத்தொழிற்பாடு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
1) மிகக்குறைந்த வெப்பநிலையில் நொதியங்கள் தொழிற்படுவதில்லை.
2) 400 C இலும் அதிகமான வெப்பநிலையில், தாக்கவீதம் உச்சமானதாக காணப்படும்.
3) அவற்றின் தொழிற்பாடுகள், பாரவுலோகங்களினால் பாதிக்கப்படுகின்றன.
4) நொதியங்கள் தாம் பங்கு பற்றும் தாக்கங்களின் ஏவற்சக்தியினை குறைக்கின்றன.
5) சில நொதியங்களின் வினைத்திறனான தொழிற்படுவதற்கு, உலோக அயன்கள் அவசியம்.

22) மனிதனின் விந்துக்களைப் பற்றிய கீழ்க்காணும் கூற்றுக்களுள் சரியானது எது?
1) ஒவ்வொரு விந்தும் 23 சோடி நிறமூர்த்தங்களை உடையதாக காணப்படும்.
2) இது நீண்டகாலம் தப்பிவாழ உதவும் சக்திக்களஞ்சியம் உடையது.
3) தெஸ்தொஸ்திரோனினால் அதன் உருவாக்கம் ஒழுங்காக்கப்படுகின்றது.
4) இவை இலேடிக்கின் கலங்களைச் சுற்றி விருத்தியாகின்றன.
5) ஒரு பெண்ணின் இனப்பெருக்கச்சுவட்டினுள் அதன் வளமுடைய காலம் 72 நாட்களாகும்.

23) பின்வருவனவற்றுள் பராதைரோயிட்டு ஓமோனின் தொழிற்பாட்டை சிறப்பாக எடுத்துரைப்பது,
1) குருதியில் நீரின் அளவை அதிகரித்தல்.
2) சிறுநீரில் சோடியம் அயனின் அளவை மாறாமற் பேணுதல்.
3) குருதியில் கல்சியம், அயனின் செறிவை, குறைவடையவிடாமல் பேணுதல்.
4) உணவுக்கால்வாயினால் கல்சியம் அயன், பொசுபேற்று அயன்களின் அகத்துறிஞ்சலினை நிரோதிக்கும்.
5) சிறுநீரகத்தியினால் கல்சியம் அய்ன், பொசுபேற்று அயன்களின் மீள அகத்துறிஞ்சலினை நிரோதிக்கும்.

24) ஆரைச்சமச்சீர், விருத்தியான நீர்க்கலன் தொகுதி, குழாய்ப்பாதங்கள் மூலமான அசைவு, அகவன்கூடு போன்ற இயல்புகளினைக்காட்டும் விலங்குக்கூட்டம்.
1) Arachnida 2) Cephalopoda
3) Polycheaeta 4) Cnidaria 5) Echinodermata

25) எவ்வகையான தூண்டல் ஒலிவாங்கிகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.
1) வலி 2) வெப்பம்
3) தொடுகை 4) அதிர்வு 5) மணம்

26) நிறையுடலி மனிதனின் ஈரலில் நிகழாத செயற்பாடு
1) யூரியா உற்பத்தி 2) பித்தத்தை சுரத்தல்
3) நச்சுநீக்கல் 4) வெப்பத்தைப்பிறப்பித்தல்
5) செங்குழியங்களின் உற்பத்தி

27) விலங்கு வன்கூடு தொடர்பாக தவறான கூற்று பின்வருவனவற்றுள் எது?
1) மமேலியாக்களின் வன்கூடு, குருதியில் கல்சியம், அயனின் அளவைப்பேணுவதில் பங்களிப்புச் செய்யும்.
2) அனலிடாக்கள் நீர்நிலையியல் வன்கூடு உடையன.
3) புறவன்கூடு, முள்ளந்தண்டுடைய விலங்குகளில் காணப்படுவதில்லை.
4) இவை இடப்பெயர்ச்சிக்கு உதவும்.
5) புறவன்கூடுகள் விலங்குகளின் வளர்ச்சியினை எல்லைப்படுத்தக்கூடியன.

28) மையவிழைய சுற்றறுக்குக்குரிய சிறுநீரகத்தியின், என்லெயின் தடத்தினதும் சேர்க்கும் கானினதும் பெரும்பகுதி அமைந்திருப்பது,
1) சிறுநீரகமேற்பட்டை 2) சிறுநீரகமையவிழையம்
3) சிறுநீரகநிரல் 4) சிறுநீரக இடுப்பு 5) சிறுநீர்வழி

29) மனிதமூளையம் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் எது உண்மையானது?
1) அது அகஞ்சுரப்பியாக தொழிற்படுகின்றது.
2) மூன்று சோணைகளாக வியத்தம் அடைந்து காணப்படும்.
3) இது புறமுதலுருப்படையிலிருந்து உருவானது.
4) மனித உடலின் சமனிலையைப் பேணுவதுடன் தொடர்பானது.
5) அது இச்சையின்றிய தசையின், சுருங்கலைக்கட்டுப்படுத்துவதுடன் தொடர்பானது.

30) பின்வருவனவற்றுள் எதனூடாக பூச்சிகளின் சுவாசத்திற்கு அவசியமான வளி அவற்றின் உடலை அடைகின்றது.
1) மல்பீசியன் சிறுகுழாயூடாக 2) பசுஞ்சுரப்பியூடாக
3) புன்வாதனாளியூடாக 4) சிற்றறைக்கானின் ஊடாக
5) பூமென்தட்டினூடாக

31) பின்வரும் மூலகம் - தொழில் இடைத்தொடர்புகளில் தவறானசோடி எது?
1) இரும்பு - காற்றுச்சுவாசத்தில் பங்கேற்கும்.
2) கல்சியம் - கலமென்சவ்வின் ஊடுபுகவிடும் தன்மையைப் பேணுதல்.
3) பொற்றாசியம் - இலைவாய் அசைவுக்கு உதவுதல்.
4) மக்னீசியம் - துணை நொதியம் A யின் கூறு
5) மொலித்தனம் - மூலக்கூறு நைதரனை பதிக்க உதவுதல்.

32) ஒடுக்கற்பிரிவு, கலப்பிரிவுச் செயன்முறை பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது,
1) பிறப்புரிமை மாறலைத்தரும் முக்கிய மூலமுதலாகும்.
2) இதன் விளைவாக இருமடியமான கலங்களில் இருந்து ஒரு மடியமான கலங்கள் உருவாக்கப்படும்.
3) அது ஒரு இனத்தின் நிறமூர்த்த எண்ணிக்கையை மாறிலியாக இருப்பதனை உறுதிப்படுத்தும்.
4) இதன் விளைவாக சம எண்ணிக்கையான நிறமூர்த்தங்களைக் கொண்ட பிறப்புரிமை ரீதியில் வேறுபட்ட நான்கு மகட்கருக்கள் தோற்றுவிக்கப்படும்.
5) இதன் விளைவாக உருவாகும் மகட்கலங்கள் ஒவ்வொன்றும் ஒரு புணரியாக மாற்றமடையும்.

33) கட்புள்ளிகளினால் உணரப்பட்டு ஏற்படுத்தப்படும் தாவர அசைவு,
1) ஒளித்திருப்ப அசைவு 2) அதிர்ச்சி முன்னிலை அசைவு
3) ஒளி இரசணை அசைவு 4) இரசாயன இரசணை அசைவு
5) உறக்க முன்னிலை அசைவு

34) ஓமோன்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது,
1) ஓமோன்கள் ஓர் நிலையற்ற கட்டமைப்புடையவனவும், அவற்றைச் சுரந்த சுரப்பிகளுக்கு அருகில் மாத்திரமே தொழிற்படக்கூடியன.
2) எல்லா ஓமோன்களும் ஸ்ரிரோய்ட்டு வகைக்குரியதாக காணப்படும்.
3) ஓமோன்கள் யாவும் விசேடமான அகஞ்சுரப்பிகளினால் சுரக்கப்பட்டு வெளிவிடப்படுகின்றன.
4) ஓமோன்கள் எனப்படுபவை, ஓர் இரசாயன செய்திகாவிகளாகத் தொழிற்படக்கூடிய சேதனப் பதார்த்தங்களாகும்.
5) பெரும்பாலான தாவர ஓமோன்கள் பல்பெப்ரைட்டு ஓமோன்களாகக் காணப்படுகின்றன.

35) மனிதனின் கட்டமைப்புக்களுள், நுண்சடைமுளைகளின்ன கொண்டிருப்பது எது?
1) வியர்வைச்சுரப்பி 2) வாதனாளி
3) கேடயப்போலிச்சுரப்பி 4) யோனிமடல் 5) சிறுகுடல் மேலணி

36) மனித உடலின் நீர்ப்பீடணத்துடன் தொடர்பான கலங்களும், ஓமோன்களும் முறையே,
1) நடுநிலைநாடி, தைமோசின் 2) மூலநாடி, அல்டஸ்ரோன்
3) நிணநீர்க்குழியம், தைமோசின்
4) ஒற்றைக்குழியம், எரித்திரோபயோடின் 5) இயோசிநாடி, கல்சிரோனின்

37) ஒளி வாங்கிகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
1) முள்ளந்தண்டுள்ள விலங்குகள், அவற்றின் கண்ணில் காணப்படும் கண்வில்லையின் உருவத்தை மாற்றுவதன் ஊடாக ஒரு பொருளை நோக்குகின்றன.
2) பிசிர்த்தசைகளின் சுருங்கல் மூலம், முள்ளந்தண்டுள்ள விலங்குகள் கண்ணினுள் செல்லும் ஒளிக்கதிரின் செறிவைக் கட்டுப்படுத்துகின்றன.
3) மனிதனின் கண்களில் கோல்க்கலங்களும் கூம்புக்கலங்களும் ஒளியுணர் கலங்களாக காணப்படும்.
4) பூச்சிகளில் காணப்படும், பலகண்மூலங்களினை கொண்ட கூட்டுக்கண்கள் நிறப்பார்வையினை உணரக்கூடியன.
5) மானிடக்கண்ணின், கண்வில்லையின் வடிவம், கண்மணியின் பருமன் என்பனவற்றை மூளையின் நடுமூளை ஒழுங்காக்கும்.

38) மனிதனின் அமுக்கத்துக்கு உணர்ச்சியுள்ள வாங்கிகள் பின்வரும் எதனில் இருப்பதில்லை?
1) மூட்டுக்களில் 2) தசைகளில்
3) நடுமடிப்புக்களில் 4) மேற்றோலில் 5) உட்தோலில்

39) விலங்கு இராட்சியத்தின் அங்கிகள் கொண்டுள்ள சில குருதிநிறப் பொருட்கள் வருமாறு
A) Haemoglobin B) Haemoerythirin
C) Chlorochrorin D) Haemocyanin E) Myoglobin

இவற்றுள் கணம் அனலிடாவுக்குரிய விலங்குகளில் காணப்படுபவை,
1) A,B,C மட்டும் 2) A,B,D மட்டும்
3) C,D மட்டும் 4) A,B,E மட்டும்
5) A,B,C, D, E மட்டும்

40) மனித விந்துக்களின் உடற்தொழிலியல் ரீதியான முதிர்ச்சி நடைபெறுவது,
1) சுக்கிலச்சுறுகுழாயில் 2) விதைமேற்றிணிவில்
3) அப்பாற்செலுத்தியில் 4) விசற்கானில்
5) சுக்கிலப்புடகங்களில்

**41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் ஒன்று சரியானது - ஒன்றுக்கு மேற்பட்டவை சரியானவை. விடைகளுள் எது சரியானது - சரியானவை என முடிவு செய்க. பின்னர் பொருத்தமான இலக்கத்தை தெரிந்தெடுக்க.**

A,B,D ஆகியன சரியானவை எனின் ------------------------------ 1
A, C, D ஆகியன ஆகியன சரியானவை எனின் ------------------------------ 2
A, B ஆகியன சரியானவை எனின் ------------------------------ 3
C, D ஆகியன சரியானவை எனின் ------------------------------ 4
வேறு விடை அல்லது விடைகளின் சேர்க்கை சரியெனின் ---------------- 5

| பொழிப்பாக்கிய பணிப்புரைகள் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| A, B, D சரியானவை | A, C, D சரியானவை | A, B சரியானவை | C, D சரியானவை | வேறு விடை அல்லது விடைகளின் சேர்க்கை சரியானவை |

41) பின்வருவனவற்றுள் கொல்கிவுடலினால் தொகுக்கப்படுவது/ தொகுக்கப் படுபவை எது/ எவை?
1) இலைசோசோம் 2) கிளைக்கோலிப்பிட்டு
3) பொஸ்போலிப்பிட்டு 4) கிளைக்கோபுரதம் 5) புரதங்கள்

42) இரண்டு DNA இழைகளில் காணப்படும் நைதரசன் மூலகங்களுக்கு இடையே ஏற்படுத்தப்படும் ஐதரசன் பிணைப்பினால் இழைகள் இணைக்கப் படுகின்றன. அவ்வாறு ஏற்படுத்தப்படும் பிணைப்புக்கள் தொடர்பாக சரியானது / சரியானவை/ எது / எவை?
A) அடினினுக்கும், தைமினுக்கும் இடையே இரண்டு ஐதரசன் பிணைப்புக்கள் உருவாக்கப்படும்.
B) சைற்றோசினுக்கும், குவானினுக்கும் இடையே மூன்று ஐதரசன் பிணைப்புக்கள் உருவாக்கப்படும்.
C) அடினினுக்கும், தைமினுக்கும் இடையே மூன்று ஐதரசன் பிணைப்புக்கள் உருவாக்கப்படும்.
D) சைற்றோசினுக்கும், குவானினுக்கும் இடையே இரண்டு ஐதரசன் பிணைப்புக்கள் உருவாக்கப்படும்.
E) அடினினுக்கும், யூராசிலுக்கும் இடையே இரண்டு ஐதரசன் பிணைப்புக்கள் உருவாக்கப்படும்.

43) பின்வரும் ஓமோன்களுள் எது/ எவை, மனிதனின் குருதியமுக்கத்தை சீராக்குவதில் பங்குகொள்கின்றது / பங்குகொள்கின்றன?
A) ADH B) Renin
C) Oxytosin D) Aldestrone E) GH

44) இரும்பு அயன்களினைத் தமது கட்டமைப்பில் கொண்டிருக்கும் நிறப்பொருள் / நிறப்பொருட்கள் எது/ எவை?
A) Haemoglobin B) Haemocyanin
C) Chlorochrorin D) Haemoerthrin
E) குளோரபில்

45) Nephrolepis தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது / தவறானவை எது / எவை?
A) தாவரவுடல், வேர், தண்டு, இலைகள் என வியத்தமடைந்துள்ளது.
B) பல்கலங்களான இனப்பெருக்க அமைப்புக்களைக் கொண்டிருக்கும்
C) வாழ்க்கை வட்டத்தில் பிரிவிலியமைப்பு காணப்படமாட்டாது
D) பல்லின, ஓரின வித்தியுன்மை காணப்படும்.
E) காழ், உரியம் போன்ற கலனிழயங்கள் காணப்படும்.

# தேர்தலில் ஆட்சியை கைப்பற்ற சோனியா தீவிர நடவடிக்கை



நாடாளுமன்றத்தில் 2004, 2009 ஆம் ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த காங்கிரஸ் கட்சி 2014 ஆம் ஆண்டு தேர்தலிலும் வென்று ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளது. இதற்காக காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி தீவிரமாக செயற்பட்டு வருகிறார். இந்த முறை தனிப்பெரும்பான்மை பெறும் வகையில் வெற்றி பெற வேண்டும் என்று அவர் திட்டமிட்டார்.

தனது திட்டத்தை நிறைவேற்ற அவர் கடந்த சில தினங்களாக காங்கிரஸ் முதல்மந்திரிகளை அழைத்து ஆலோசனை நடத்தி வருகிறார். இந்தியாவில் தற்போது 15 மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி ஆட்சி உள்ளது. 2 மாநிலங்களில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி உள்ளது. இந்த மாநிலங்களில் கூடுதல் எம்.பி.க்களை பெற்றாலே போதும் தனி மெஜாரிட்டி பெற்று விடலாம் என்று சோனியா நினைக்கிறார். எனவே தன்னை சந்திக்கும் ஒவ்வொரு முதல்-மந்திரியிடமும் அதிக அளவில் காங்கிரஸ் எம்.பி.க்களை வெற்றி பெறச் செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு என்று கூறி வருகிறார். ஒரு வேளை அதிக காங்கிரஸ் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்ய முடியாவிட்டால் முதல்மந்திரி பதவி பறிக்கப்படும் என்று அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியச் செய்திகள்

இது காங்கிரஸ் முதல்-மந்திரிகளிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உள்ளூர் பிரச்சினைகளால் காங்கிரஸ் வேட்பாளர்கள் எக்காரணம் கொண்டும் தோற்கக் கூடாது என காங்கிரஸ் முதல்மந்திரிகளிடம் உத்தரவிடப்பட்டுள்ளது. மாநில காங்கிரஸ் தலைவர்களுக்கும் இதே போன்று உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# இந்தியாவிற்குள் ஊடுருவுவதற்கு 2500 தீவிரவாதிகளுக்கு பயிற்சி



இந்தியாவுக்குள் ஊடுருவ 2 ஆயிரத்து 500 தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் முகாம்களில் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. 2012ஆம் ஆண்டில் 249 முறை இந்திய எல்லைக்குள் ஊடுருவ தீவிரவாதிகள் முயற்சித்துள்ளனர். உளவுத்துறை தகவல்களின்படி, இந்திய எல்லைக்குள் ஊடுருவிய 230 தீவிரவாதிகள் தக்க சமயத்தை எதிர்பார்த்து எல்லையோரம் உள்ள மலைப் பகுதிகளில் பதுங்கியுள்ளனர். இவர்களில் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த தளபதி ஹிலால் மவுலவி என்பவன் கடந்த மாதம் சுட்டுக்கொல்லப்பட்டான். மேற்கண்ட தகவல்களை மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த 5ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்ற முதல் மந்திரிகள் மாநாட்டில் தெரிவித்துள்ளது.

# ஹிட்லர் பாதையில் நரேந்திரமோடி சமாஜ்வாதி கட்சி விமர்சனம்

சர்வாதிகாரி ஹிட்லரின் பாதையில் குஜராத் முதல் மந்திரி நரேந்திரமோடி பயணிப்பதாக சமாஜ்வாதி கட்சி விமர்சித்துள்ளது.

டில்லியில் நிருபர்களுக்கு பேட்டியளித்த சமாஜ்வாதி கட்சித் தலைவர் கமால் பருக்கி கூறியதாவது, 2002ஆம் ஆண்டில் இருந்தே பா.ஜ.க.வில் மோடிக்கு முக்கியத்துவம் தரப்படுவதை பலர் எதிர்த்து வருகின்றனர். ஆர்.எஸ்.எஸ். சங் பரிவார், விஷ்வ இந்து பரிஷத், பஜ்ரங்



தளம், பா.ஜ.க. ஆகிய இயக்கங்களை சேர்ந்த பலரை மோடி ஓரங்கட்டி வருகிறார்.

தற்போது அத்வானி, யஷ்வந்த் சின்கா, ஜஸ்வந்த் சிங், ரவி சங்கர் பிரசாத், உமா பாரதி போன்றோர் மோடிக்கு தங்களது எதிர்ப்பை வெளிப்படையாக தெரிவித்துள்ளனர். மோடி சக்தி வாய்ந்த மனிதராக உருவாகி வருகிறார். அவரது வழியில் வரும் யாரையும் மோதித்தள்ள அவர் தயங்கமாட்டார்.

பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங்கை கூட அவர் ஓரம்கட்டி விடுவார். அதற்கு நீண்டநாள் தேவையில்லை.

ஜேர்மனி வரலாற்றை பார்த்தால் ஆரம்ப காலத்தில் தனது பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவிக்க யாரும் இருக்கக் கூடாது. தனக்கு முன்னால் யாரும் முன்னேறி விடக் கூடாது என்ற மனநிலையில் இருந்த ஹிட்லர் பின்னாளில் சர்வாதிகாரியாக மாறினார். ஹிட்லரின் அதே பாதையில் நரேந்திர மோடி செல்கிறார் என்றார்.



**பெண்களுக்கு எதிரான வன்கொடுமை குறித்து மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக உடலில் வர்ணம் தீட்டும் போட்டி நடைபெற்றது.**

# நயினை ஸ்ரீ நாகபூஷணி இன்று கொடியேற்றம்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான அம்பிகை நயினையிலே ஸ்ரீ நாக பூஷணியாக எழுந்தருளி வீற்றிருந்து அடியார் கருளும் லோகமாதாவாக அருளாட்சி புரிகின்றாள். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நயினாதீவு ஒரு புனித புண்ணிய தலமாகும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாக அன்னை ஸ்ரீ நாக பூஷணி அம்மனுக்கு இன்று கொடியேற்றம்.

இன்று ஆரம்பமாகும் இந்த வருடாந்த மகோற்சவம் தேர், தீர்த்த உற்சவத்துடன் 15 நாட்களுக்கு வெகு சிறப்பாக நடைபெறும். அருள் மயமான இந்த ஆலயத்தின் அருமையும் பெருமையும் சொல்லில் அடங்காது. இந்த நயினை நாகம்மாளிடம் அலைகடல் தாண்டிவந்து நேர்த்திகளைப் பூர்த்தி செய்யும் அடியார் கூட்டம் எண்ணிலடங்காது.

எல்லாம் வல்ல அன்னையை நாகபாம்பு வழிபாடியற்றி வந்ததாகவும் தினசரி அது பூக்கொண்டு வந்து போட்டு வணங்கித் திரும்பும் போது கருடன் ஒன்று பாம்மைக் கொல்ல வந்ததாகவும் கடலிலே தத்தளிக்கும் வேளையில் அம்பிகையின் பேரருளால் அது காப்பாற்றப்பட்டதாகவும் பாம்பு சுற்றியிருந்த கல்லும் கருடன் இருந்த கல்லும் கடலிலே காணப்படுவதாகவும் பேசப்படுகிறது. இ஼து இத்தலத்தின் அற்புதமாகும்.

அபயம் என்று வந்தவர்களை அஞ்சேலென அபயமளித்துக் காத்து ரட்சிக்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி ஆலயம் இந்த நயினாதீவுக்குப் பெருமை சேர்ப்பதாகவும் எண்ணுகின்ற அடியவர்கள் பலர் திருமணம், மகப்பேறு, நோய்ப்பிணி நீக்கம், முடியிறக்கம், அன்னப்பிராசனம், காது குத்துதல், நேர்த்திக்கு அள்ளு காசும் பிள்ளைகளை விற்றுவாங்குதலும் தொட்டில் செய்து கொடுத்தல், கண்மலர், பாம்பு வெள்ளியிற் செய்து கொடுத்தல் என்று இன்னோரன்ன பல நேர்த்திக்கடன் பணிகள் சிறப்புற நிகழும் இந்த ஆலயம் மிகவும் மகோன்னதமானது.

ஆதலால் இன்று முதல் நிகழ்கின்ற உற்சவங்களில் அடியார்களாகிய நாமும் பங்கேற்று அன்னையின் அருட் பிரவாகத்தில் மூழ்கித்திளைத்து அம்மனின் அருளுக்குப் பாத்திரமாகி இவ்வுலகில் பேரானந்த மயமான பெரு வாழ்வுக்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக்கொள்வோமாக.

-சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்-


வாழ்க வளமுடன்

பெயர் : கு. டிஷானி

முகவரி : சந்தை ஒழுங்கை, மானிப்பாய்.

அகவை 7 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்





வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


கடந்த காலத்தை...

(12ஆம் பக்கத்தொடர்ச்சி...)

ஜனநாயகத்தின் அடித்தளம் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது அதை நாம் சிதைத்தால் அனைவருடைய பாதுகாப்பும் எதிர்காலமும் பாதிக்கப்பட்டே தீரும்.

நமது கடந்த காலம் இதற்குச் சாட்சியாக உள்ளது. ஆனால், இதைப் பலரும் உணரத் தயர்ராக இல்லை. இதுதான் வரலாற்றின் சோகம்.

உண்மையில் இந்த இடத்தில் தான் மூன்றாவது கண்ணாக நின்று ஊடகங்கள் ஒளி சுடர வேண்டும். மக்களுக்கு அறிவின் ஒளியை ஊட்டி அவர்களை அறிவியல் ரீதியாக பலப்படுத்த வேண்டும்.

அறிவியல் ரீதியாக மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டால் அவர்களை யாராலும் ஏமாற்ற முடியாது. அப்படிச் சிந்திக்கும் நிலை உருவாகினால் அவர்களுக்கு எது சரி எது தவறு என்று தெரியும்.

ஆனால், இதற்கு எமது சூழலில் உள்ள ஊடகங்களில் பல தயாராக இல்லை. அவை தங்களின் வணிக நலனையே இலக்காகக் கொண்டுள்ளன. வணிகத்துக்கு இனவாதம், மதவாதம், பிரதேச வாதம் போன்ற சரக்குகள் மிகவும் உதவும். இந்த இடத்திலே நான் இன்னொரு உண்மையையும் சொல்ல விரும்புகிறேன்.

அண்மையில் வன்னிப் பகுதிக்கு புகழ்பெற்ற சர்வதேச ஊடகமொன்றைச் சேர்ந்தவர்கள் விஜயம் செய்திருந்தனர்.

அவர்கள் அங்கே தேடியது என்னவென்றால் குடிசை வீடுகளையும் வறிய நிலையிலுள்ள மக்களையுமே. வன்னியிலுள்ள ஒரு உள்ளூர் ஊடகவியலாளரிடம் இதை அவர்கள் விசாரித்திருக்கிறார்கள்.

அதற்கு 'மிக அண்மையில் மீள்குடியேற்றம் நடைபெற்ற இடங்களில் மட்டும்தான் நீங்கள் குடிசை வீடுகளைப் பார்க்க முடியும். அல்லது வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இடங்களில் அவற்றைக் காணலாம்' என்று அந்த உள்ளூர் ஊடகவியலாளர் பதிலளித்திருக்கிறார்.

அப்படியென்றால் எங்கே அவற்றைப் பார்க்க முடியும் என்று கேட்டிருக்கிறார்கள்.

'நீங்கள் முள்ளிவாய்க்கால் அல்லது முகமாலைப் பகுதிக்குச் செல்லுங்கள். அங்கேதான் தற்போது மீள்குடியேற்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.'

பாருங்கள், சர்வதேச ஊடகங்களே இலங்கையில் - அதிலும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் எதைத் தேடுகின்றன என்று. இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

எல்லாத் தரப்பும் தமது அரசியலுக்காக எதையெதையோவெல்லாம் தேடிக்கொண்டிருக்கின்றன.

வெளிச்சக்திகளின் தூண்டிலில் சிக்கி அந்தச் சக்திகளின் வலைப்பின்னலில் இணைந்துவிடும் நிலை ஒரு புறத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது.


இதையிட்டு நாங்கள் கவனமாக இருக்க வேண்டும். இன்று உலகில் வளர்ச்சியடைந்த நாடுகள் அத்தனையும் ஊடகங்களின் பயனாலும் ஜனநாயக மேம்பாட்டினாலுமே தமது இன்றைய நிலையை எட்டின.

இதை நாம் நமது கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதை இந்தச் சந்தர்ப்பத்தில் பொருட்படுத்தத் தவறினால் வரலாறு எங்களை மீளவும் எதிர்த் திசையில் கொண்டு செல்வது தவிர்க்க முடியாததாகி விடும்.

# சீனாவில் பேருந்து தீப்பிடித்து எரிந்து;

# 38 பயணிகள் உடல் கருகிப் பலி



சீனாவில் பேருந்து தீப்பிடித்து எரிந்ததில் 38 பயணிகள் உடல் கருகி பலியாகியுள்ளனர். சீனாவின் பியூஜியான் மாகாணத்தின் ஜியாமென் நகரில் பயணிகளுடன் சென்ற அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்து திடீரென தீப்பிடித்து எரிந்தது.

ஜின்ஷான் பேருந்து நிறுத்தத்தில் இருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் சென்ற போது இத் தீ விபத்து ஏற்பட்டது.தீ பிடித்ததை அறிந்த பயணிகள் பேருந்தில் அவசர வழி வழியாகவும் ஜன்னல்களை உடைத்துக் கொண்டும் வெளியே குதிக்க முயன்றனர்.

ஆனால், சில நிமிடங்களில் பேருந்து முழுவதும் தீ பரவி வெடித்து சிதறியதால் பலர் தீயில் சிக்கினர்.

இந்த கோர விபத்தில் சுமார் 38 பேர் உடல் கருகி இறந்தனர். 33 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தற்போது இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

சீனாவின் மோசமான சாலைகளால் அடிக்கடி சாலை விபத்துக்கள் நடக்கின்றன. கடந்த 2011ஆம் ஆண்டு மத்திய சீனாவில் தீப்பற்றக்கூடிய பொருட்களை ஏற்றிச் சென்ற பஸ் தீப்பிடித்ததில் 41 பேர் இறந்தனர்.

இதுவே நாட்டின் மிக மோசமான விபத்தாக கருதப்படுகிறது. அதன்பின்னர் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹான்ஜி மாகாணத்தில் டபுள் டெக்கர் பஸ், டேங்கர் லாரியுடன் மோதியதில் 36 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது

# இப்படியும் போராட்டம்



ஜேர்மன் பிரதமர் அலுவலகம் முன்பு பெண்கள் அரை நிர்வாண போராட்டம் நடத்தியுள்ளார்.

ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல் அலுவலகம் முன்பு மூன்று பெண்கள் மேலாடையின்றி திடீரென போராட்டம் நடத்தியது பரபரப்பை ஏற்படுத்தியது.இவர்கள் கருப்பு நிற தொப்பியுடன், வாசகங்களை உடலில் எழுதியவாறு பிரதமரின் அலுவலகம் முன்பு போராட்டம் நடத்தினர்.

இதனையடுத்து இவர்களை பொலிஸார் கைது செய்து, காவலில் வைத்துள்ளனர்.இதன் பின் இவர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில், பெண்களுக்கு சுயமரியாதை தராத துனிஷிய நாட்டுடன் ஜேர்மன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே போராட்டம் நடத்தியதாக தெரிவித்துள்ளனர்.ஜேர்மனிக்கு வருகை தரவுள்ள துனிஷிய தலைவர் அலி லாராயெட்கை, மனித உரிமை மற்றும் ஜனநாயக செயல்பாடுகள் குறித்தும், அதில் ஜேர்மனியின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

உலகச் செய்திகள்

# நேபாளத்தில் நிலச்சரிவு 12 பேர் உயிரிழப்பு



நேபாளத்தில் ஏற்பட்ட நிலச்சரிவினால் 12 பேர் பலியாகியுள்ளனர். நேபாளத்தின் கிழக்குப் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதனால் பல ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆங்காங்கே நிலச்சரிவும் ஏற்பட்டு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர் மழை காரணமாக தப்ளிஜங் மாவட்டம் சிங்தபாவில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அஸ்டா பகதூர் சிவா உள்ளிட்ட 8 பேர் வீட்டுக்குள்ளே மரணமானார்கள். காணாமல் போன மூன்று பேரை இராணுவம் மற்றும் பொலிஸார் தேடிவருகின்றனர்.

மற்றொரு சம்பவத்தில் சிந்துளி மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். தாடிங் மாவட்டத்தில் ஒருலொரி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டது. அதில் இருந்த இருவர் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை.


# யாத்திரிகர்கள் மீது தாக்குதல் ஈராக்கில் 8பேர் உயிரிழப்பு

ஈராக்கிற்கு புனித யாத்திரை சென்றவர்கள் மீது தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டதில் 8 பேர் பலியாகியுள்ளனர். ஈராக்கில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க புனித தலங்களை பார்வையிட ஈரான் நாட்டை சேர்ந்த சுமார் 40 பேர் பாக்தாத்தில் இருந்து நஜப் என்ற நகருக்கு பஸ்சில் சென்றனர்.

முக்தாதியா நகரின் அருகே அந்த பஸ்சின் மீது வெடிகுண்டுகள் ஏற்றிய காரை தற்கொலை படையினர் மோதச் செய்ததில் 8 பேர் உடல் கருகி பலியாகினர். 25க்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர்.

புனித யாத்திரை வந்தவர்கள் ஷியா பிரிவினர் என கருதிய சன்னி பிரிவினர் இந்த தாக்குதலை நிகழ்த்தியதாக ஈராக் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஷியா பிரிவினர் உண்மையான முஸ்லிம்கள் அல்ல என்று



கூறிவரும் சன்னி பிரிவினர் ஈராக்கில் வாழும் ஷியா முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து வரும் புனிதப்பயணிகள் மீதும் அவர்கள் ஈவிரக்கமின்றி தாக்குதல் நடத்துவது தற்போது அதிகரித்து வருகிறது குறிப்பிடத்தக்கது

# எலியை விட சிறிய மனித இன முன்னோர்கள்

## - சீன ஆய்வாளர் தகவல்

மனித இனத்தின் முன்னோர்கள், எலியை விட சிறிய உருவம் கொண்டிருந்ததாக, சீன ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த இனம், 5.5 கோடி ஆண்டுகளுக்கு முன், வாழ்ந்ததாக, ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் உள்ள, சைனீஸ் அகடமி ஆப் சயின்ஸ்ல், டாக்டர் நீ சின்ஜூ தலைமையிலான ஆய்வாளர்கள் குழு, மனித இனத்தின் முன்னோர்கள் குறித்த, புதிய தகவல்களை வெளியிட்டுள்ளது. அமெரிக்கா, சீனா, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்களும், இதில் பங்கேற்று, கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது: மனித இனத்தின் முன்னோடிகள், ஆரம்ப காலத்தில், மிகவும் சிறிய உருவம் கொண்ட உயிரினமாக இருந்தன. இவை, 71 மி.மீ., உயரமும், 20 - 30 கிராம் எடையும் கொண்டதாக காட்சியளித்தன. இந்த உயிரினங்கள், கூர்மையான கண் பார்வையையும், சிறிய பூச்சிகளை வேட்டையாடும் வகையில், கூர்மையான பற்களையும் கொண்டிருந்தன. இவை, மரம் விட்டு மரம் தாவும் வலிமையையும் பெற்றிருந்தன. இந்த உயிரினங்கள், 5.5 கோடி ஆண்டுகளுக்கு முன், உயிர் வாழ்ந்தன. இதுவரை பழமையான உயிரினங்களாக ஆய்வாளர்களால் கூறப்படும் உயிரினங்களை விட, 70 இலட்சம் ஆண்டுகள் முன்னதாகவே, இந்த உயிரினங்கள் வாழ்ந்துள்ளன. மேலும், இவை, தோற்றத்திலும், அவற்றின் செயல்பாட்டிலும், குரங்குகள் மற்றும் ஆதி மனிதனை ஒத்து காணப்படுகின்றன. இவ்வாறு, ஆய்வுக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# அம்புலன்ஸ் ஹெலிகொப்டர் விபத்து



லண்டன் அருகே அம்புலன்ஸ் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் தாதி உட்பட 3 பேர் பலியாகியுள்ளனர்.

உடல் நிலை பாதிக்கப்பட்ட நோயாளியை கென்டுக்கி பகுதியில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்துவிட்டு அம்புலன்ஸ் ஹெலிகொப்டர் ஒன்று கட்டுப்பாட்டு அறைக்கு திரும்பிக்கொண்டிருந்தது. அச்சமயம் கிளே மாகாணத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையை நெருங்கிய ஹெலிகொப்டர் திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறினால் நிலை தடுமாறி கீழே விழுந்து தீப்பற்றி எரிந்தது.

இதில், விமானி எட்டிசீச்மோர், முதலுதவி மருத்துவ ஊழியர் ஹெர்மன் லீ டாப்ஸ், தாதி ஜெசி ஜோன்ஸ் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உடல் கருகிப் பலியாகினர்.

# மர்ம நபரின் துப்பாக்கிச்சூட்டில் அமெரிக்காவில் 6 பேர் பலி



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் கடற்கரை நகரமான சாண்டா மோனிகாவில் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 பலியாயினர்.

சாண்டா மோனிகா கல்லூரி அருகே வீடுகள் தீ பற்றி எரிவதாகவும், துப்பாக்கிச் சூடு நடப்பதாகவும் நேற்று முன்தினம் முற்பகல் அந்நகர பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

கல்லூரி வளாகத்தில் இருந்த மர்ம நபரை பொலிஸார் துரத்திச் சென்றனர். இதைத் தொடர்ந்து கல்லூரி நூலகத்தில் மறைந்து கொண்ட மர்ம நபரை பொலிஸார் சுற்றி வளைத்தனர். அப்போது பொலிஸாருக்கும் மர்ம நபருக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடந்தது. இதில் மர்ம நபர் சுட்டுக் கொல்லப்பட்டார். தீ பற்றி எரிந்த வீட்டின் அருகே இரண்டு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் 4 சடலங்களை பொலிஸார் கல்லூரிக்கும் தீ பற்றி எரிந்த வீட்டிற்கும் இடையே கண்டுபிடித்தனர்.

இந்த தாக்குதலில் துப்பாக்கி குண்டு பாய்ந்து காயமடைந்த பெண் ஒருவர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுளளார். மர்ம நபரையும் சேர்த்து இந்த சம்பவத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஏழு என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வன்முறையில் ஈடுபட்டதாக மற்றொரு நபரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கழுதைகள் நலன்களை ஆராய இந்திய அதிகாரிகள் வருகை



மன்னாரில் உள்ள கழுதைகளின் நலன் தொடர்பாக ஆராய்வதற்காக இந்தியாவிலுள்ள கழுதைகள் சரணாலய அதிகாரிகள் மன்னாருக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த அதிகாரிகள் மன்னாரிலுள்ள கழுதைகளின் நலன் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தியாவிலுள்ள கழுதைகள் சரணாலயத்தின் சமூக பங்காளர் கல்வி இணைப்பாளர் இராம் பர்வின், கால்நடை மருத்துவர் மற்றும் கால்நடை இணைப்பாளருமான வைத்தியர் ரமேஸ்குமார், கால்நடை வைத்தியர் சுமித்தா, டயஸ்போரா லங்கா அமைப்பின் இணைப்பாளர் ஜெரமி லியனகே, டயஸ்போரா லங்கா அமைப்பின் தொடர்பு அதிகாரி சின்கிலேயர் பீற்றர், மன்னார் நகரசபை உறுப்பினர் இரட்னசிங்கம் குமரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் நகரசபையின் உப தலைவர் விளக்கமளிக்கையில்,

மன்னாரில் கழுதைகள் ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்ற நிலையில், யுத்தத்தின் காரணமாக மன்னார் மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளானபோது மனிதனுக்கும், கழுதைகளுக்கும் இடையில் இருந்த நெருக்கமான பிணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளது.

தற்போது காட்டுக் கழுதைகளின் சிரமத்தை மன்னார் மக்கள் எதிர்நோக்குவதோடு, இவைகள் மக்களினால் வெறுக்கப்பட்டும் வருகின்றது.

வெளி மாவட்டத்தில் இருந்து மன்னாருக்கு வருகின்ற மக்களையும், சுற்றுலாப்பயணிகளாக மன்னாருக்கு வரும் மக்களையும் அதிகம் கவரக்கூடியதாக இந்தக் கழுதைகள் காணப்படுகின்றன.

இந்தநிலையில், இந்தக் கழுதைகளின் நலனைக் கவனத்தில் கொண்டு மன்னார் நகரசபை மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளுக்கு உதவும் வகையில் இந்தியக் கழுதைகள் சரணாலயத்தில் இருந்து கால்நடை வைத்தியர்கள் இருவரும், சமூக கல்வி அலுவலர் ஒருவரும் மன்னாருக்கு வருகை தந்துள்ளனர்.

இதற்கு டயஸ் போரா லங்கா அமைப்பும் பூரண ஒத் துழைப்பை வழங்கி வருகின்றது.

இவர்கள் இங்குள்ள பொருத்தமான மிருக வைத்திய அலுவலகர்கள், நகரசபை உறுப்பினர்கள் ஆகியோருடன் இணைந்து சமூகம் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

மன்னார் நகரசபையின் கோரிக்கைக்கு அமைவாக காயப்பட்ட கழுதைகளுக்கு சிகிச்சையளித்தல், பெரும் அவஸ்தைக்குட்பட்டு சிரமப்படுகின்ற கழுதைகளைக் கருணைக் கொலை செய்தல், வெறிநாய்க்கடி தடுப்பு, எதிர்காலத்தில் கழுதைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த கருத்தடை செய்தல், கழுதையின் புள்ளிவிபரம் அடங்கிய மைக்ரோசிப் ஒன்றைக் கழுதையின் காதில் பூட்டுதல், கழுதையின் நலப் பராமரிப்பு தொடர்பாக பொருத்தமான மிருக வைத்திய சுகாதார அலுவலகர்களுக்குப் பயிற்சி அளித்தல், கழுதைகளைப் பழக்கப்படுத்துதல், கழுதைகளுக்கான உணவு வழங்குதல், சமூகத்திற்கு விழிர்ப்புணர்வுக் கருத்தரங்குகள் வழங்குதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களும் தற்போது இடம்பெற்று வருகின்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வேகக்கட்டுப்பாட்டை...

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

குறித்த பேருந்தின் பின்பகுதியில் இயந்திரக் கோளாறு ஒன்று ஏற்படவே பேருந்தை நிறுத்திச் சரிபார்க்கச் சாரதி முற்பட்ட சமயம் வேகக்கட்டுப்பாட்டை இழந்த பேருந்து விபத்தில் சிக்கியதாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பேருந்தின் சாரதி தெரிவித்தார்.

இந்த விபத்தில் அச்சுவேலியைச் சேர்ந்த பா.அங்குசன் (வயது-22), கிளிநொச்சியைச் சேர்ந்த ஆர்.ரவீந்திரமோகன், வத்தளையைச் சேர்ந்த ஜெ.அ னோல்ட் (வயது-26), அரியாலையைச் சேர்ந்தவர்களான கி.பிரதீபா (வயது-30), அருளினி (வயது-39), கணேஸ்வரன் (வயது-45) ஆகியோர் சாவகச்சேரி வைத்தியில் சிகிச்சைக்கு அனு மதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இந்த விபத்திலர் காயமடைந்த ஒருவர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது.

இந்த விபத்து குறித்து கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (பா)

## மோசமான...

உயர் அதிகாரி சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ பி.பி.சி.க்கு அளித்த செவ்வியில், அண்மையில் திருட்டுக் குற்றச்சாட்டு ஒன்றில் கைதான ஒருவர் கண்ணில் மிளகாய்த் தூள் கொட்டப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். இலங்கை பொலிஸ் விசாரணையில் இவ்வாறான சித்திர வதைகள் அதிகரித்து காணப்படுகிறன்றன. இதற்கு எம்மிடம் ஆதாரம் உள்ளது.

இந்த சித்திரவதைகள் குறித்து பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக் குழு, தேசிய பொலிஸ் முறைப்பாட்டு ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளோம். ஆனால் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

அதனால்தான் 78 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி சகல அதிகாரங்களும் படைத்த ஜனாதிபதிக்கு இது குறித்து கடிதம் எழுதியுள்ளோம். அவர் உத்தரவிட்டால்தான் எல்லாம் நடக்கும்.

சித்திரவதைகள் குறித்து 400 சம்பவங்கள் எம்மிடம் பதிவாகியுள்ளன. இவற்றை புத்தகமாக வெளியிட உள்ளோம். சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. ஆனால் இலங்கை பொலிஸ் சித்திரவதைகளை மீறிச்செயற்படுகிறது.

சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. மாநாடு 2011 இல் நடந்தபோது இலங்கையில் பொலிஸ் சித்திரவதைகள் குறித்து முறைப்பாடு செய்தோம். சம்பந்தப்பட்டவர்களிடம் ஐ.நா. அதிகாரிகள் விசாரணையும் மேற்கொண்டனர். எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறு முறைப்பாடு செய்வோம் என பசில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தக்குற்றச்சாட்டை மறுத்துள்ள அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, எந்த வொரு ஜனநாயக நாட்டிலும் பொலிஸார் விசாரணைகளில் கடைப் பிடிக்கும் முறைகளையே இலங்கைப் பொலிஸாரும் கடைப்பிடிக்கின்றனர். சில நிறுவனங்கள் அடிப் படை, ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றன என்று பதிலளித்தார்.

## கே.பி.க்கு...

இலங்கை - இந்திய உடன்படிக்கையின் கீழ் பாரிய குற்றவாளிகளுக்கு ஐக்கிய தேசிய கட்சி மன்னிப்பு வழங்கியமையை அமைச்சர் சுட்டிக்காட்டினார். அதற்கமைய தாய்நாட்டிற்கு எதிராக செயற்பட்ட ஐக்கிய தேசிய கட்சியினரை கூட அரசாங்கம் மன்னித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் ஆட்சி ஏகாதிபத்திய ஆட்சி அல்ல எனவும் ஜனநாயக ரீதியிலான ஆட்சியே தற்போது இடம்பெறுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். நாட்டில் 25 தடவைகள் ஐக்கிய தேசிய கட்சி தோற்கடிக்கப்பட்டதால் இங்கு ஜனநாயகம் இல்லை என்று ஆகிவிடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## சீனாவின்...

இராணுவத் தளபாடங்கள் வழங்குவதற்கான பேரத்தையும் உள்ளடக்கியுள்ளது.

இந்தியாவுடன் நெருடலான உறவைக் கொண்டுள்ள இலங்கை, கடந்த பத்தாண்டுக ளில் சீனாவிடம் இருந்து பொருளாதார, இராணுவ உதவிகளைப் பெறும் நாடாக இருப்பதுடன். சீனாவுடன் மிகவும் நட்புறவையும் கொண்டுள்ளது.

தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான போரின் போது, சீனாவிடம் இருந்து இந்தியா முக்கியமான இராணுவ உதவிகள் இலங்கைக்கு கிடைத்தன.

தனது நாட்டில் உள்ள தமிழர்களின் அரசியல் பிரச்சினை காரணமாக, இந்தியாவினால் இலங்கையு டன் அதிகம் நட்புறவு கொள்ள முடியாது என்றும் அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்று வெளிவருகிறது வடக்கே போகும் மெயில்

(பருத்தித்துறை)

சூரன் ஏ.ரவிவர்மாவின் வடக்கே போகும் மெயில் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவும் ராஜஸ்ரீகாந்தன் நினைவு நிகழ்வும் இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

யா.தேவரையாளி இந்துக் கல்லூரியில் காலை 9.30 மணிக்கு வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய தலைவர் சி.க. லோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி நூல் அறிமுகவுரையினையும், பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் கொற்றை பி. கிருஸ்ணானந்தன் நூலாசிரியர் அறிமுகவுரையையும், சிறப்புரையை தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் மா.நவநீதமணி, ராஜஸ்ரீகாந்தன் நினைவுரையை தெணியான், மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

## தென்பகுதியில்...

தொடர்ந்தும் இந்த மோசமான காலநிலை நீடிக்குமென்பதால் மீனவர்களைக் கடலுக்குச் செல்லவேண்டாம் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இதுதவிர மலையகத்தில் களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் நூற்றுக் கணக்கான வீடுகள் காற்றினால் சேதமடைந்துள்ளன. இரத்தினபுரியில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

பல இடங்களில் வீதிகளிலும் ரயில் பாதைகளிலும் மரங்கள் விழுந்து கிடந்ததால் போக்கு வரத்துகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக, காலி பலப்பிட் டிய பிரதேசத்தில் கடலுக்குச் சென்ற 18 மீன்பிடிப் படகுகள் காணாமற்போயுள்ளன. அங்கு பல மீனவர்களை காண வில்லை.

கொழும்பின் புறநகர்ப் பகுதியான தெஹிவளையில் காணா மற்போன மீனவர்களைத் தேடுமாறு மீனவர்கள் ரயில் பாதையை மறித்து போராட்டம் நடத்தியதால் அப்பகுதி முழுவதும் நேற்றுக் காலை களேபரமாகக் காட்சியளித்தது.

கடும் காற்றுடன் கூடிய காலநிலை ஏற்படும் என்று அதிகாரிகள் முன்கூட்டியே எச்சரிக்கை அறிவித்தல்களை வழங்கவில்லை என்று மீன வர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இயற்கை இடர் முகாமைத் துவ நிலையத்துக்கு நேற்று அதிகாலையே, அதாவது சுழல்காற்று வீசத்தொடங்கிய பின்னரே வளிமண்டலவியல் திணைக்களத்திலிருந்து எச்சரிக்கை அறிவிப்பு வந்ததாக அந்த நிறுவனத்தின் உயரதிகாரி பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இதேவேள்ளை, இந்தக் குற்றச்சாட்டு பற்றி வளிமண்டலவியல் துறையின் முன்னெச்சரிக்கைப் பிரிவின் இயக்குநர் எஸ்.ஆர் ஜயசேகரவிடம் கேட்டபோது, நேற்று முன்தினம் மாலையில் 4.00 மணியளவில் தங்களது வழமையான காலநிலை அறிவிப்பில் மீனவர்களை அவதானமாக இருக்குமாறும், கடலுக்குச் செல்லவேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டதாகவும், தமது பேச்சைக் கேட்காமல் மீனவர்கள் கடலுக்குச் சென்றுவிட்டதாகவும் கூறினார்.

இதற்கிடையே, இந்த விடயம் குறித்து மீன்பிடித் துறை துணையமைச்சர் சரத் குணரத்னவிடம் கேட்டபோது, அப்படியான குற்றச்சாட்டு வந்திருப்பதாகவும் அதுபற்றி ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளதாகவும் அவர் பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

## தெரிவுக்குழுவில்...

செயற்படுவதன் மூலம் சர்வதேச சமூகத்தில் இலங்கை தொடர்பான நம்பகத் தன்மை அதிகரிப்பதுடன், புலம்பெயர் மக்களின் ஆதரவினையும் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை மீறல் சட்டம் ஒழுங்கு தொடர்பில் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட காலத்தில் தாம் யோசனை களை முன்வைத்ததகாவும், அதனை ஜனாதிபதி உதாசீனம் செய்ததாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மா னங்களுக்கு முன்னதாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காத்திரமான தீர்வுத் திட்ட பரிந்துரைகளை முன்வைத்தது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

வடமாகாணசபைத் தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கம் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேர்தலை இலக்காகக் கொண்டு வடக்கில் பெருமள விலான தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருவதாக சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணசபைக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கில்...

வர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களின் பிரச்சினைக்கு கௌரவத்துடனும், சமத்துவத்துடனும் கூடிய, ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும் என்தை பல்வேறு தலைவர்களிடமும் எமது குழு வலியுறுத்தியுள்ளது.

தமிழர்களின் பிரச்சினை தமிழ்நாட்டினது கவலை மட்டும் அல்ல, இந்தியாவின் தேசியப் பிரச்சினை என்று இலங்கை அரசிடம் நான் எடுத்துக் கூறியுள்ளேன்.

இந்திய - இலங்கை உறவுகள் இருதரப்பு சார்ந்ததாக இருக்க வேண்டும் என்ற கருத்து இந்தியாவில் உள்ளது.

வடக்கில் பலமாக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஒரு பலமான நம்பிக்கை இடைவெளி உள்ளதை எமது குழுவின் உறுப்பினர்கள் அவதானித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்தும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் நாம் வலியுறுத்தியுள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபைக்குள் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பிரதேச செயலகங்களில் கடமையாற்றுவதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் எஸ். மகேஸ்வரன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக்காலை இந்நிகழ்வு நடைபெற்றது.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 321 பேருக்கான நியமனக் கடிதங்களை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் 15 பிரதேச செயலகர்களிடமும் வழங்கி வைத்தார்.

அக்கடிதங்களை ஒவ்வொரு பிரதேச செயலர்களினாலும் சமுர்த்தி உத்தியோத்தர்களுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளன.

இந்நியமனக் கடிதங்களுடன் நாளை திங்கட்கிழமை ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் கடமைக்கு செல்லவுள்ளனர். இதன் போது, கள பயிற்சி முடித்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஒவ்வெருவரும் தமது கள பயிற்சியின் போது பெற்ற அனுபவங்களையும், விளக்கங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் மற்றும் யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ரகுநாதன், உட்பட 15 பிரதேச செயலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (25)

# இலங்கையிலுள்ள இரண்டு வங்கிகளில் புலிகளுக்கு 86 மில்லியன் வைப்பு

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு இலங்கையில் உள்ள இரண்டு வங்கிகளில் 86 மில்லியன் பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்ததாக அரசாங்கத்திற்கு தெரியவந்துள்ளது என திவயின கூறியுள்ளது.

இலங்கையில் உள்ள பிரபல வெளிநாட்டு வங்கி ஒன்றில் மாத்திரம் 56 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

புலிகள் அமைப்புக்கு இந்த பணத்தை வைப்புச் செய்த ரெஜி என்ற விடுதலைப்புலிகளின் செயற்பாட்டாளர் பிரித்தானியாவுக்கு தப்பிச் சென்றுள்ளார்.

அவரை கைதுசெய்வதற்காக சர்வதேச காவற்துறையினரால் பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் புலிகளின் வங்கி கணக்கில் இருந்த பணம் அரசுடமையக்கப்பட்டுள்ளது.

# போலி வைத்தியர்கள் மீது கடுமையான நடவடிக்கை

போலி வைத்தியர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கமும் சுகாதாரத் துறை அமைச்சும் இணைந்து இதற்கென மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயவுள்ளனர்.

இது தொடர்பான சட்டமூலமொன்று விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. போலியான வாசகங்கள் அடங்கிய அறிவித்தல் பலகைகளை காட்சிப்படுத்தி போலி வைத்தியர்கள் தமது சட்டவிரோத நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றனர். புதிய உத்தேச சட்டத்திற்கமைய இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு 5 வருட காலம் வரை சிறைத்தண்டனை வழங்க முடியுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை தற்போது இனங்காணப்படும் போலி வைத்தியர்களுக்கு நடைமுறையிலுள்ள சட்டத்தின் அடிப்படையில் 5 ஆயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபா வரையிலான அபராதம் மாத்திரமே விதிக்கப்படுவதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# கிழக்கில் இந்து ஆலய கொள்ளை; படையினருக்கு தொடர்பு இல்லை

## - இராணுவம் மறுப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண இந்து ஆலயங்களில் இடம்பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களுடன் படையினருக்கு தொடர்பு கிடையாது என இராணுவப் பேச்சாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்து ஆலயங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் இந்த சம்பவங்களுக்கு இராணுவத்தினரே பொறுப்பு எனவும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான இணைய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குருக்கள் மடம் செல்லக்கதிர்காமம், குருக்கள்மடம் ஐயனார் கோயில், மாங்காடு பிள்ளையார் கோயில் ஆகியவற்றில் இவ்வாறு கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது, எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது எனவும், இவை அடிப்படையற்றவை எனவும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளையார் கோயில் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் மூலம் உண்மை வெளியிடப்படும் புலி ஆதரவ இணைய ஊடகங்களின் போலிக் குற்றச்சாட்டுக்கள் முறியடிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுத்தமான சக்திவள கிராமம்; உருவாக்கும் திட்டம் இன்று

(கொழும்பு)

சுத்தமான சக்திவளங்களைக் கொண்ட கிராமத்தை உருவாக்கும் வேலைத்திட்டம் நாளைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுற்றாடல் மற்றும் மீள் உற்பத்தி வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய தேசிய சுற்றாடல் வாரத்திற்கமைய இலங்கை நிலையான சக்திவள அதிகார சபையின் ஒத்துழைப்புடன் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் சுத்தமான சக்திவளங்களைக் கொண்ட கிராமத்தை உருவாக்கும் நிகழ்வு தென்மாகாணத்தின் காலி மாவட்டத்தில் சிங்கராஜவன பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசத்தில் அமைந்துள்ள கொலம் தொட்டுவ, வத்துகல, ஆரிய தொல, பரகஹஹேன, பாடி தொல ஆகிய ஆகிய கிராமங்களில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் சுற்றாடல் மற்றும் மீள் உற்பத்தி வலுசக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இன்று மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் சிரேஷ்ட அமைச்சர் பியசேன கமகே மற்றும் தென்மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# கற்பக விநாயகர் சிலைகள் திருகோணமலையில் உடைப்பு

திருகோணமலை, திருஞானசம்பந்தர் வீதியில் உள்ள கற்பக விநாயகர் ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கோபுரத்தில் 13 சிலைகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றிருக்கலாம் என்றும் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் ஆலய பரிபாலனசபையின் செயலாளர் எ. நடராசா தெரிவித்தார்.



மட்டக்களப்பில் அண்மையில் நான்கு சைவ ஆலயங்கள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்ட நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# பொய் சொல்கிறார் அருந்திக; மஞ்சுளா வெடிவர்தன கவலை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெர்னாண்டோ பொய்யுரைப்பதாக ஊடகவியலாளர் மஞ்சுள வெடிவர்தன தெரிவித்துள்ளார். மஞ்சுள வெடிவர்தன தற்போது பிரான்ஸில் வாழ்ந்து வருகின்றார்.

காணாமற் போனதாகத் தெரிவிக்கப்படும் லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொடவை, ஊடகவியலாளர் வெடிவர்தன அறிமுகம் செய்ததாக அருந்திக்க பெர்னாண்டோ அண்மையில் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

அருந்திக்க பெர்னாண்டோவை பிரான்ஸில் வைத்து எந்தச் சந்தர்ப்பத்திலும் சந்திக்கவில்லை என மஞ்சுள வெடிவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

2007 ஆம் ஆண்டில் கொழும்பில் வைத்து அருந்திக்கவை



தாம் சந்தித்தாகத் தெரிவித்துள்ளார். அதன் பின்னர் எப்போதும் சந்திக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு இறுதியில் அருந்திக்க பிரான்ஸ் வந்திருந்த போது தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியதாகத் தெரிவித்துள்ளார். அருந்திக்கவுடன் பாடசாலையில் கல்வி கற்ற போதிலும் நட்பு எதனையும் பேணவில்லை என மஞ்சுளா வெடிவர்தன குறிப்பிட்டுள்ளார்.


**பதவி வெற்றிடம்**

**பக்க வடிவமைப்பாளர்**

Corel draw, page maker, Photoshop தெரிந்த பத்திரிகைத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்,
"தினமுரசு"
373, பிர்தான வீதி, யாழ்ப்பாணம்.


# சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட்; இங்கிலாந்திடம் வீழ்ந்தது ஆஸி.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற அவுஸ்ரேலியா அணியுடனான ஆட்டத்தில் 48 ஓட்டங்களால் வெற்றியீட்டியது இங்கிலாந்து அணி.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு அலிஸ்ரர்குக் இயன் பெல் ஆரம்ப இணைப்பாட்டம் நிறைந்த அடித்தளத்தை இட்டது. இதில் குக் (30), வெளியேற பெல்லுடன், இணைந்த ட்ரொட் சிறப்பாக விளையாட்டினார். அவரும் 43 ஓட்டத்துடன் ஆட்டமிளக்க, அடுத்து நூட் இணைந்தார். ஆனால் சிறப்பாக விளையாடிய பெல் 91 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி தடுமாறியது.

இதில் நூட் 12, மோர்கன் 8 வெளியேற, போப்பராவின் இறுதி நேர அதிரடியால் (46) இங்கிலாந்த அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் போல்க்னர், மக்கே தலா 2, ஸ்ரார்க் வட்சன் தல ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

270 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணிக்கு முன்னனி வீரர்கள் எவரும் சிறப்பாக விளையாடதால் அவ்வணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து221 ஓட்டங்களைப் பெற்று 48 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

அவ்வணி சார்பாக வோனர் 9, வாட்சன் 24, ஹியூஜிஸ் 30, பெய்லிரிரி போல்க்னர் ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அன்டர்சன் 3, பிரெஸ்னன் 2, புரோட், ரெட்வெல், நூட், போப்பரா தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக இயன்பெல் தெரிவானார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூன் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.